Registered as a News Paper

பக்கம் - 28

# ஈழநாதம்

விலை: 15.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 15 | வெள்ளி - 19 | 09-15-யூலை-2004



# தலைவனின் நெஞ்சில் நினைவழியா முகங்கள்

# திருமுக அறிமுகம்

தாமோதரம்பிள்ளை சண்முகநாதன் எனப் பெற்றோரிட்ட தன் பெயரை முனியப்பதாசன் எனத் தானே மாற்றிக்கொண்டு இலக்கிய உலகில் தன்னையும் தன் ஆளுமையையும் அடையாளப்படுத்தியவர் இவர். அவரின் ஆளுமையின் ஆன்மபலம் மாறுபட்டது.

தனது இருபதாவது வயதில் இவர் எழுதிய முதற் கதையே முதற்தரமான கதையென தேர்வுசெய்யப்பட்டு "கலைச்செல்வி" நடாத்திய சிறுகதைப்போட்டியில் முதற்போட்டியில் முதற் பரிசைத் தட்டிச் சென்ற போது முனியப்பதாசனின் இலக்கிய ஜனனம் நிகழ்ந்தது.

"வெறியும் பலியும்" என்ற அந்தக் கதை முனியப்பதாசன் தமிழ் இலக்கிய உலகில் ஒரு அசாதாரணமான படைப்பாளி என்பதை இனங் காட்டியது. இலக்கிய உலகில் அறுபதுகளின் மத்தியில் தொடங்கி இறுதி வரையான ஐந்து ஆண்டு காலத்தினுள் ஈழத்து இலக்கியப் படைப்புலகில் விமர்சகர்களின் புருவங்களை பிரமிப்பால் உயரவைத்ததுடன் படைப்பாளிகளிடையே அவரது படைப்புக்கள் அவரைஒரு சர்ச்சைக்குரிய இலக்கியவாதி ஆக்கியது சாதாரண சிந்தனை வளம் கொண்ட முனியப்பதாசனின் இலக்கிய ஆன்மீகப்பார்வை அந்தக்காலத்தில் மட்டுமல்ல இன்றும் கூட சாதாரண வாசகனால் மட்டுமல்ல கைதேர்ந்த படைப்பாளிகளால் கூட புரிந்துகொள்ளமுடியாத அதிசயமே....



## தா.சண்முகநாதன்

அவரது 25க்கும் குறைவான சிறுகதைகளும் ஒரு குறு நாவலும் ஈழத்தமிழ் உலகில் இன்னமும் அதற்குரிய அர்த்தச்செழுமையைப் புரிந்து கொள்ள கடினமானவையாகவே பதிவுசெய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணையில் பிறந்த முனியப்பதாசனின் ஆரம்பக்கல்வி யாழ். இந்துக்கல்லூரியில் தொடர்ந்தது. அவர் கற்றது க.பொ.த. சாதாரண தரம் வரைதான். ஆனாலும் அவரது தமிழ் ஆங்கில இரு மொழித்தேர்ச்சி அபூர்வமானது.

அவரது ஆன்மீகச் சிந்தனை ஆழமானதும் பரந்துவிரிந்து செறிந்ததுமாகும். அவரது ஆன்மீகத்தேடலில் "தன்னை" ஆய்வு செய்தல் முக்கியமானதாக, இருந்தது.

சமூகத்தின் ஒவ்வொரு அசைவும்,உணர்வும் அவரை வெகுவாகப் பாதித்தலில் அவரது மனிதம் குறித்த ஆன்மீக நோக்கு இலக்கிய வடிவங்களாகின.... அதனால் அந்தப்படைப்புக்களை வெறும் கண்ணால் படிப்பவர்க்கு எந்தப் புரிதலும் ஏற்படவில்லை.

ஆமாம், அவரது எண்ணங்கள் பூச்சியத்தில் மையம்கொண்டு பிரபஞ்சத்தைத் தேடும் தன்மை கொண்டவை. அதனால் தான் சாதாரணர்களால் அந்த அசாதாரணரைப் புரிந்துகொள்ளல் சாத்தியமற்றதாயிற்று.

லௌகீகத்திற்கும் ஆன்மீகத்திற்கும் இடையே மனிதம் படும் சகல அனுபவ அவலங்களையும் ஒரு ஞானியின் மனோ பக்குவத்துடனும் ஒரு மனிதனின் மனவிருப்புடனும் அவர் தேடமுற்பட்டதில் அவரது தோற்றம், செயல், எழுத்து, சிந்தனை என அனைத்துமே அவரை சித்தன் என்றும் பித்தன் என்றும் பிறரால் பேசவைத்தன.

எனினும் உணர்ச்சிகள் செத்து உயிர் சாகாது உலவும் மனிதர்களை ஒரு மோனச்சிரிப்புடன் அலட்சியமாக. அதே சமயம் பரிதாபத்துடன் அவர் தமது மனித அடையாளங்களைத் தொலைத்துவிட்டு வெறுமிகளாக நடமாடுவதைத் தனது எழுத்துக்களில் பதிவு செய்வர் அவர்கள் தங்கள் சுயம் பற்றிய தேடலை மேற்கொள்ளும் சிந்தனைக்குத் தூண்டினார்.

அவரது எழுத்துக்கும் வாழ்வுக்கும் வேறுபாடு இருந்ததில்லை அவரது படைப்புக்கள் வேறு எவரது படைப்புக்களுடனும் ஒப்பிடமுடியாத தனித்துவம் கொண்டவை-தமிழுக்கு அவை புதுப்பரிமாணத்தை ஏற்படுத்தின.

அவரது மந்திரசக்திவாய்ந்த தமிழ் மொழிநடை தமிழின் ஜீவனை அப்படியே அள்ளித்தரும் தன்மைமிக்கது.

அவரது படைப்புக்களில் ஆழ்வது ஒரு அற்புதமான ஆன்ம அனுபவமாகும். வெறும் மூன்று தசாப்தங்களே வாழ்ந்த முனியப்பதாசனின் சிந்தனா வேகம் பல தசாப்தங்களைக் கடந்தது.

"மனிதர்கள் மாறவே மாட்டார்கள்- மாறுவதாக இருந்தால் புத்தர், யேசுவிற்குப் பிறக்கும் மகாத்மாக்கள் தோன்றவேண்டிய அவசியம் இருந்திராதே." எனத் தனது படைப்பொன்றில் குறிப்பிட்டு ஆதங்கப்படும் முனியப்பதாசன் தனது படைப்புக்கள் அனைத்தையும் கடைசியில் தீக்கிரையாக்கிச் சிரித்தார் என்று கூறப்படுகிறது.

அதுவும் அவரது சுய ஆன்ம தேடலற்ற மனிதத்தின் மீதான கோபத்தின் வெளிப்பாடாக இருக்குமோ.

அட்சயன்

# கார சாரம்

முகமாலையிலிருந்து யாழ்ப்பாணம் போக பஸ்கட்டணம் பதினெட்டுரூபா - அப்படியே பற்றுச்சீட்டும் வழங்கப்படும். ஆனால் பதினெட்டு ரூபா அப்படியே கொடுப்பவர் எத்தனைபேர். இருபதுரூபாத் தாளை நீட்டி லேசாகப் பல்லையும் காட்டுவோம் (அது அவன் காட்டவேண்டியது) அறுபதுபேர் பயணம்செய்யும் ஒரு பஸ்ஸில் நாற்பது பேர் இரண்டுரூபா கொடுத்தால் எண்பதுரூபா இரண்டு தடவைபோனால் நூற்றியறுபது ரூபா... டிக்கற் டிக்கற் டிக்கற் எடுக்காதவை எடுத்துக்கொள்ளுங்கோ. பஸ்ஸில போறவர் நீண்டபயணமாயின் தொகையாக 500ரூபா கொடுத்தாலும் நடத்துநர் முகம் சுளிக்காமல் வாங்கி பின்புறடிக்கற்றில் எழுதிக் கொடுப்பார். கிளிநொச்சியிலிருந்து புளியங்குளம் அறுபத்தைந்து ரூபா. நூறுரூபாவைக்கொடுத்து முப்பத்தைந்து ரூபா மீதம் வாங்காமல் ரிக்கற்றில் பதிந்துவாங்கலாம். புளியங்குளம் சிறிமுத்துமாரியம்மன் கட்டடக் காணிக்கைக்கு உண்டியல் குலுக்கும் தொண்டர் வாகனத்துள் வரும்போது நடத்துநர் கீழே இறங்கிச் சில்லறை மாற்றுவார். ஏறியதும் சில்லறையை அதாவது மிகுதிப்பணம் வாங்காதவர்களைத் தேடித்தேடிக் காசைக் கொடுப்பார். 'ஆருக்குமிச்சக்காசு தர வேணும்.. ஐயா வாங்கிற்றீங்களோ அக்கா டிக்கற்றத் தாங்கோ....' என்று முழுவதையும் கொடுத்துவிடுவார்.இது இங்கு 'ரவுண்பஸ் என்று குறிக்கப்படும் பயணிகள்சிற்றூர்திப் பேருந்துகளில் இன்னுமொன்று சென்ற மாதத்தில் ஒருநாள் ஒரு தம்பதி மத்தியானம் ஒரு மணியிலிருந்து பேருந்து நிலைய அறிவிப்புப்பலகையின் கீழ் உட்கார்ந்திருந்தனர் பசி, அவர்கள் முகத்தில் எழுதி ஒட்டியிருந்தது. கணவன் மனைவியை "தேநீர் குடிக்கப்போவமே" என்று கேட்டார். ஹஹ்ஹஹ் ஹா... தேநீர்கடையா... அது ஒரு காததூரம் வேண்டாமப்பா அங்கபோக இடையில அவன் வந்திட்டா..." 'என்ன பிரச்சினை ஆரையும் விட்டிட்டியளோ' என்று கேட்டேன். "அய்யோ அதை யேன் கேக்கிறியல் மிச்சக்காசு வாங்கேல்ல கண்டக்ரரிட்ட என்றார். ஏன்-

## சிட்டையை மட்டுமல்ல... அதன் பின் புறமும் தான்...

சில்லறையில்லையுங்கோ 500 ரூபாயைக் குடுக்க மிச்சம் தரேல்ல பஸ்ஸில் சில்லறை இராதோ' "நீங்கள் கேக்கமறந்திட்டியளோ"

"சீ... இறங்கிறிக்கயுக் கையும்கேட்டம் அவன் அதாலும் இதாலும் திரிஞ்சான் வாறன் வாறன் எண்டுபோட்டு பஸ்ஸில ஏறிப்போட்டான்' என்றார் அந்தப் பெண் -

"நீங்கள் அலுவலகத்தில கேட்டநீங்களோ"

"ஓ...மூண்டரைக்கு வருவானாம் அதுதான் நிக்கிறம்" என்றாள் அவள். வெகுதூரமிருந்து நகருக்குப் பொருட்கள் வாங்கவந்து அடுத்த பஸ்ஸில் திரும்பவேண்டியவர்கள். சோகமாகக்குந்தியிருந்தார்கள். சென்ற வெள்ளியன்று மல்லாவியிலிருந்து பேருந்தொன்று புதுக்குடியிருப்புக்குப் போனது. காலையில் மல்லாவியிலிருந்து கிளிநொச்சி பயணமான பயணி ஒருவர் நூறுரூபா கொடுத்து ஒரு சிட்டை வாங்கினார். மிகுதி நாற்பது ரூபா டிக்கற்றில் எழுதிக்கொடுத்த நடத்துநரிடம் இரண்டு முறை முறிகண்டியில் ஒரு தரம் கிளிநொச்சியில் ஒருதரமும் கேட்டார். கொடுத்தவரோ இளம் பெண். இறங்கியதும் தருவார் என எதிர்பார்த்தார். இறங்கியதும் கேட்டார். ஆனால் நடத்துநர்... ஏறக்காத்திருந்த பயணிகளால் சூழப்பட்டுவிட்டார். போனால்போகட்டும் என்று எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு அந்தப்பெண் போய்விட்டார். சரி இந்தக் கொண்டக்டர்கள் மாதாந்தம் ஒரு நல்ல தொகையை உழைத்துவிடுகிறார்கள். அதுசரி, இதை தடுப்பது எப்படி. அந்தக்காலத்தில் ஒரு பேருந்து நடத்துநருடைய சீருடையில் காக்கிக்கோட் இடம்பெறும். அந்தக் காக்கிமேல் கோட்டில் ஒரு டோக்கன் அவருடைய இலக்கத்துடன் தொங்கும். அந்தக் காக்கி கோட்டின் அடியில் இரு பெரிய பைகள் இருக்கும் அந்த நடத்துநர் கடமைக்கு போகும்போது அதை அணிவார். அந்தக்கோட்டின் பையில் சில்லறை குலுங்கும். பஸ்டிக்கற்றின் பெறுமதிகளுக்கு மேலாக ஒரு சதம் அந்தப்பைக்குள் இருந்தாலும் நடத்துநர் அபராதம் கட்ட வேண்டி வரும் அதுதான் ரூல்ஸ். இப்ப... உந்த விளையாட்டை வடிவா ஒழிக்கலாம். டிக்கற்றைச்செக்பண்ண வாறவை டிக்கற்றின்ர பின்பக்கத்தையும் செக்பண்ணினா என்னவாம்.

மாயா

# பாதை என்பது பாதசாரிக்கே சொந்தம்

அன்ரனா கோணல் அதுதான் கோடுவிழுது. "ஏன்ராப்பா ஒருமெக்கானிக்கக்கொண்டு வந்து காட்டன்." "எப்பிடியப்பா. அவை வந்து பாக்கிற தெண்டா ஒரு மோட்டார்சைக்கிள்வேணும்"

"ஏன்ராப்பா சைக்கிள்ள வரமாட்டாரோ..."

அப்பிடி வாறாங்களே.... இந்தநாளயில?"

* * *

'தம்பி கொப்பற்ற திவசங்குடுக்கவேணும் ஐயரை வரச்சொன்னநீயே..."

"சொன்னநான் அவர் வாறதுக்கு மோட்டார்சைக்கிள் அனுப்பட்டாம்..."

இந்த மோட்டார்சைக்கிள் மோகம் எவ்வளவு தூரம் பரவியிருக்கிறது. காதலுக்காக வீரம் காட்டிய தேசத்தில் காதலியைச் சந்திக்க மோட்டார்சைக்கிள் இல்லையென்பதால், காதலியைக் கைவிடுமளவுக்கு வளர்கிறது. சரி இந்தமோட்டுச்சைக்கிளுடன், மன்னிக்கவும் மோட்டார்சைக்கிளுடன் செல்பவர்களே பெரும்பாலும் விபத்துக்குள்ளாகிறார்கள்.. ஒருகாலத்தில் வவுனியா முதல் யாழ்ப்பாணம்வரை மிதிவண்டிகள் செய்த சேவைகளை வார்த்தையில் வடிக்கமுடியாது. சைக்கிள் சில்லுக்குள் வைக்கோலை அடைந்து விறகிழுத்ததேசம் தமிழீழவன்னி. சீனி மூடை, மா மூடையிலிருந்து மண்ணெய்வரைக்கும் சுமந்தது மட்டுமோ. வன்னியிலிருந்து யாழ்ப்பாணமெங்கும் பேருந்துகளுக்குப் பதிலாக பயணசேவையும் செய்தது. நாளொன்றுக்கு கிளாலிக்கடல் கடக்கும் மிதிவண்டிகள் ஆயிரக்கணக்கில் இருந்தது. ஆனால் இன்று மிதிவண்டியில் செல்வது கௌரவக்குறைச்சலாகக்கூட கருதப்படுகிறது. அவசர தேவைக்குத் தான் மோட்டார் சைக்கிள் கேட்கலாம். காயமடைந்த ஒரு சிறுமியை அல்லது வயோதிபரையோ வைத்திய சாலைக்குக்கொண்டுசெல்லமட்டுமே. மோட்டார்சைக்கிள் தேடினோம் அப்போது, இப்போது.

உலகச்சந்தை வன்னிக்குள் திறந்துவிடப்பட்டதால் 'ஊருப்பட்ட' பொருட்கள் குவிகின்றன. அதிலும் சிலவகை உந்துருளிகள் அயல்நாட்டில் விற்கவே முடியாதவகை வன்னியில் பொலிந்து போய் அலைகிறது. நடைபெறும் விபத்துக்களில் நாலிலொன்றில் அதுசம்பந்தப்படுகிறது. ஊரெங்கும் விபத்துக்கள் நடைபெறும்போதும், வாகனங்களைப் பற்றிக்கதைக்கும்போதும் நாம் இன்னொன்றைக் கவனிப்பதில்லை. அவர்கள்தான் திருவாளர் பாத சாரியும், திருவாளர் சைக்கிளோட்டியும் வீதிகளில் கூட இவர்களுக்கென்று தனியிடமில்லை. ஒருவரையொருவர் முந்தத்திட்டம்போடும் வாகனச்சாரதிகள் ஒருவரையொருவர் இடிப்பதைத் தவிர்க்கப்பாதையில்போகிற பாவிகளையே ஒரு அக்கறையுமில்லாமல் தட்டிவிடுகின்றனர்.

உங்களுக்குத் தெரியுமோ? பாதைஎன்பது பாதசாரிக்குத்தான் சொந்தம். மற்றவர்கள் அதில் பயணிக்க அனுமதி எடுக்கவேண்டும் (Licence) மிதிவண்டிக்கு இவ்வளவு, பாரஊர்திக்கு இவ்வளவு, என்று வேறுபட்டஅளவான பணம் கட்டித்தான் பயணிக்கிறார்கள். உரிமையுள்ள பாதசாரிக்கு நடைபாதைகூட இப்போது வன்னியில் இல்லை. சைக்கிளோடுபவர்கள் பற்றிச்சொல்லவும் வேண்டுமோ. ஒருவரோடொருவர் ஒட்டிஉறவாடிச் சைக்கிளோட்டும் இளைஞர் கூட்டம் - அந்த ஒட்டலின் ஊடே அதைவெட்டிப்பிரித்து வெளியே மிதக்கும் இளம்பெண்கள் - வீதியைச் சொந்தம் கொண்டாடும் கால்நடைகள், தெருநாய்கள் இவற்றுக்கும வீதிஒழுங்குகளைக் கற்பிக்கவேண்டும். அது சரி. மோட்டார் வாகனங்களைச் செலுத்த அனுமதிப்பத்திரம் வேண்டும். அனுமதிப்பத்திரம் எடுக்கப் பதினெட்டுவயது வேண்டும். வன்னியின் மைந்தர்கள் பத்துப்பன்னிரண்டு வயதிலேயே மோட்டார்சைக்கிள் ஓடுகிறார்களே - யார் அனுமதித்தது.

# சந்திரிகாவுக்கு எது உடனடியாகத்தேவை

# போரா? சமாதானமா?

***சந்திரிகாவை இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைக்கான யோசனைகளின் மீது பேச்சுக்களைத் தொடங்குமாறு அழுத்தங்களைப் பிரயோகிக்கும். அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்கும் வேலைகளை அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் ஏற்கனவே செய்யத் தொடங்கி விட்டது.***

***விலகிநின்று அவர்மீது அமுக்கத்தைப் பிரயோகிப்பதைவிடவும் அவரை நெருங்கிச் சென்று அவர்மீது செல்வாக்கைப் பிரயோகிப்பதனால் எதையாவது செய்யமுடியுமா என்று அவர்கள் யோசிப்பதும் தெரிகிறது.***

கருணாவின் விவகாரம் கிழக்கில் தளபதிகள் மட்டத்திலான சந்திப்புக்களை புலிகள் ரத்துச் செய்வதுவரை போய்விட்டது. இத்தகைய சந்திப்புக்கள் களத்தில் யுத்த நிறுத்த மீறல்களை ஓரளவுக்கேனும் கட்டுப்படுத்த உதவக்கூடும். இப்பொழுது இவை ரத்துச் செய்யப்பட்டிருப்பதானது இனி களத்தில் நிலைமைகள் கையைமீறிப் போய் விடக்கூடிய ஆபத்துக்களை எப்பொழுதும் திறந்துவைத்திருக்கக் கூடியது. யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவும் இத்தகைய தொனிப்படவே கருத்துக்கூறியுள்ளது.

தளபதிகள் மட்டத்திலான சந்திப்புக்கள் யுத்தநிறுத்தத்தின் உயிர்த்துடிப்பை ஓரளவுக்கேனும் பேண உதவுபவை. ஏனெனில் சம்பந்தப்பட்ட தளபதிகள் நேருக்குநேர் முகம்பார்த்துக்கதைக்கும் ஒரு நிகழ்ச்சியிது. இதனால் பரஸ்பரம் புரிந்துணர்வும் நட்பும் மரியாதையும் வளர்வதுடன், பிரச்சினைகளை நேருக்குநேர் கதைத்துத் தீர்க்கவும் முடியும். அதோடு, இதில் கொடுக்கப்படும் வாக்குறுதிகளுக்கு பரஸ்பரம் கட்டுப்பட்டு நடக்கவேண்டிய ஒருவித பொறுப்புணர்ச்சியின் தொடர்ச்சியையும் பேணமுடியும்.

எந்தவொரு வெற்றிகரமான சமாதான முயற்சியின்போதும். இத்தகைய சந்திப்புக்களே. யுத்தநிறுத்தத்தின் ரத்தோட்டத்தைப் பேணிவந்திருக்கின்றன. தென்னாபிரிக்கா, ஐரிஸ் மற்றும் கிழக்கைரோப்பிய அனுபவங்கள் அதைத்தான் நிரூபித்திருக்கின்றன.

இந்தவகை சந்திப்புக்களை விடவும் மிகவிஷேசமானவை, அரசியல் தீர்மானங்களை எடுக்கவல்ல உயர்நிலைப் பிரதிநிதிகளின் சந்திப்பாகும். சம்பந்தப்பட்ட தகவுடைய உயர்நிலைப் பிரதிநிதிகள் எவ்வளவுக்கெவ்வளவு நேருக்குநேர் முகம்பார்த்துக் கதைக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு சமாதானத்தின் கனமும்கூடும்.

முன்பு சந்திரிகாவின் காலத்தில் செய்யப்பட்ட சமாதான முயற்சிகளின் மிகப் பலவீனமான அம்சமே இந்த முகம்பார்த்துக் கதைக்கும் சந்திப்புக்கள் அதிகம் இருக்கவில்லை என்பதுதான். அந்நாட்களில் கடிதங்களே அதிகம் கதைத்தன. இதுதவிர அரசியல் தீர்மானங்களை எடுக்கும் அதிகாரமற்ற அதிகாரிகளே சந்திப்புக்களில் கலந்துகொண்டார்கள். எனவே அந்தச் சமாதானம் இடையில் முறிந்துபோனது.

இம்முறை அவ்வாறில்லைத்தான். என்றாலும் கடந்த சுமார் ஓராண்டுக்கும் மேலாக உயர்நிலைச் சந்திப்புக்கள் ஏதும் இடம்பெறவில்லை என்பது ஒரு மிகப்பாரதூரமான அம்சமே. இது சந்திரிகாவுக்குமுன்பு ரணிலின் காலத்திலேயே தொடங்கிவிட்டது. ஆனாலும் இம்முறை சமாதானம் செய்வதிலுள்ள பலமான அம்சம் மேற்குநாடுகளின் அனுசரணையே. இந்த அனுசரணையாளர்கள் இருதரப்பினருக்குமிடையில் அடிக்கடி ஊடாடி மேற்படி சந்திப்புக்கள் இல்லாத வெற்றிடத்தை ஆகக்குறைந்தபட்சம் நிரப்ப முயன்றுவருகிறார்கள்.

ஆனால் அண்மைக் காலங்களில் மேற்படி நோர்வேத் தூதுவர்களின் பயணங்களும் நிலவும்தேக்கத்தை உடைக்கும் சக்தியற்றவைகளாய் மாறிவருகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகாலத்துக்கும் மேலான சமாதான முயற்சிகளின் போதும் யுத்தநிறுத்தக்கண்காணிப்புக்குழுவும் சொல்ஹெய்மும் முன்னெப்பொழுதும் வெளிக்காட்டியிராத அளவுக்கு நம்பிக்கயீனத்தை அண்மைவாரங்களில் வெளிப்படுத்தி வருகிறார்கள்.

கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பில் உள்ளுறையும் யுத்தபீதி ஒன்று இன்னமும் தணியாதிருப்பதாக அங்கிருந்துவருபவர்கள் கூறுகிறார்கள்.

ஆயின், நாடு ஒரு யுத்தத்தை நோக்கியா போய்க்கொண்டிருக்கிறது?

வெளித்தோற்றம் அப்படித்தானிருக்கிறது. ஆனால் பலமான இரண்டுகாரணங்களை வைத்துச் சொல்லுமிடத்து யுத்தநிறுத்தம் இன்னுமின்னும் இழுபட்டுச் செல்லக்கூடிய நிலைமைகளே அதிகம் தூக்கலாகத் தெரிகின்றன. அந்த இரண்டுகாரணங்கள் எவை என்றுபார்ப்போம்.

முதலாவது, புலிகள் யுத்த நிறுத்த உடன்படிக்கையை உடனடியாக முறிக்கும் ஏதுநிலைகள் மிகக்குறைவாகவே தென்படுகின்றன என்பது. ஏனெனில் தளபதிகள் மட்டத்திலான சந்திப்பை கிழக்கில்மட்டும்தான் புலிகள் ரத்துச் செய்திருக்கிறார்கள். வடக்கில் அல்ல. வடக்கில் அவை ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட ஒழுங்கில் சீராக இடம்பெற்று வருகின்றன. இது ஒன்றைக் காட்டுகிறது. கருணாவின் விவகாரத்தில் புலிகள் அரசாங்



கத்தின்மீது அழுத்தங்களைக் கொடுக்க விரும்புகிறார்கள். ஆனால் அதேசமயம் அந்த அழுத்தங்கள் எவையும் யுத்தநிறுத்தத்தை முழு அளவில் ஆபத்துக்குள்ளாக்குவதை அவர்கள் விரும்பவில்லை.

எனவே புலிகள்தரப்பால் யுத்தநிறுத்தம் உடனடியாக ஆபத்துக்குள்ளாகும் வாய்ப்புக்கள் ஒப்பீட்டளவில் குறைவாகவே காணப்படுகின்றன. இது முதலாவது காரணம்.

**நிலாந்தன்**

இரண்டாவதுகாரணம், அமெரிக்கா கொழும்பை வசப்படுத்தும் வேலைகளைத் துரிதமாகச் செய்துவருகிறது என்பது. சமாதான முயற்சிகளில் இந்தியாவைப் பங்காளியாக்குவதுபற்றி முன்பு அதிகம் கதைத்துவந்த அரசாங்கம் இந்தியாவை நோக்கி அதிகம் சாயமுன்பே அமெரிக்கா தனது வேலைகளைத் தொடங்கிவிட்டது போலத்தெரிகிறது. கப்பல்கொடுத்தது, படைத்துறை உயர் அதி காரிகளை அடிக்கடி கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் அனுப்பி வைப்பது, சிறிலங்காப் படைத்துறை உயர்அதிகாரிகளை அமெரிக்காவுக்கு அழைப்பது போன்ற வேகமான நகர்வுகளின்மூலம் கடந்த மூன்று மாதகாலத்துள் அமெரிக்கப் படைத்துறை சிறிலங்காப் படைத்துறைக்கு ஒப்பீட்டளவில் அதிகம் நெருக்கமாக வந்துவிட்டது.

பலாலி விமானத்தளத்தை விஸ்தரிக்கும் வேலைகளை முன்பு இந்தியாவிடம் தருவது என்று திட்டமிட்டிருந்த அரசாங்கம் இப்பொழுது அதைத்தானே செய்யமுடிவெடுத்திருப்பதையும் மேற்படி விளக்கத்தின் பின்னணியில் வைத்தே வியாக்கியானம் செய்யவேண்டும்.

சந்திரிகாவை வசப்படுத்தினால்தான் சுமுகமாகச் சமாதானம் செய்யமுடியும். அதோடு அவர் இந்தியாவை நோக்கிச் சாய்வதையும் தடுக்கவோ குறைக்கவோமுடியும்.

அது பெரியகாரியமும் அல்ல. பண்டாரநாயக்காக்கள் உள்நாட்டு அரசியலுக்காக மேற்கின் எதிரிகள் போலத் தோன்றுவார்கள் தனிச்சிங்களச் சட்டத்தையும் கொண்டு வருவார்கள். ஆனால் யதார்த்ததில் வாழ்க்கை முறை அபிலாசைகள் கல்வித் தேவைகள் போன்றவற்றைப் பொறுத்தவரை அவர்கள் மேற்கின் அபிமானிகளே.

அண்மையில் லண்டனில் கேம்பிறிச்சில் சந்திரிகாவின் மகளுடைய பட்டமளிப்பு விழாவைக் காண்பதற்கு முழு பண்டார நாயக்க குடும்பமுமே அங்கேகூடியது. அது சந்திரிகாவின் தனிப்பட்ட பயணம் என்று கூறப்பட்டாலும் சமாதானத்துக்கான சில திரைமறைவு நகர்வுகள் அதன் போது இடம்பெற்றன.

எனவே, சந்திரிகாவை இடைக்காலத்தன்னாட்சி அதிகார சபைக்கான யோசனைகளின்மீது பேச்சுக்களைத் தொடங்குமாறு அழுத்தங்களைப் பிரயோகிக்கும், அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்கும் வேலைகளை அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் ஏற்கனவே செய்யத்தொடங்கிவிட்டது.

விலகிநின்று அவர்மீது அமுக்கத்தைப் பிரயோகிப்பதை விடவும் அவரை நெருங்கிச்சென்று அவர்மீது செல்வாக்கைப் பிரயோகிப்பதனால் எதையாவது செய்யமுடியுமா என்று அவர்கள் யோசிப்பதும் தெரிகிறது.

முன்னாள் இராணுவத் தளபதி பலகல்லவின் சேவைக்காலம் நீடிக்கப் படாததையும், புலனாய்வுத் துறைக்குப் பொறுப்பான பிரிகேடியர் பதவிமாற்றம் செய்யப்பட்டதையும் இந்த விளக்கத்தின் பின்னணியிலேயே வியாக்கியானம் செய்ய வேண்டும்.

எனவே மேற்சொன்ன இரண்டு காரணங்களும் மாறாதிருக்கும் வரை யுத்தநிறுத்தம் உடனடியாக உடையும் ஆபத்துக்கள் குறைவாகவே தென்படுகின்றன.

இப்போதுள்ள நாடாளுமன்ற நிலவரங்களின் படி அடுத்த சனாதிபதித் தேர்தலோடு சந்திரிகா அரங்கிலிருந்து அகன்றுவிட வேண்டியதுதான். அரசியலமைப்பை அவருக்கேற்றாற்போல மாற்ற முடியாது என்பது அநேகமாக உறுதியாகிவிட்டது. கடந்ததேர்தலின் போது சிங்கள மக்கள் அவருக்களித்த ஆணை தெளிவற்ற இரண்டு செய்திகளைக்கொண்டிருக்கிறது. முதலாவது, சிங்களமக்கள் ரணிலைப் பதவியிலிருந்து அகற்றவிரும்பினார்கள் என்பது. இரண்டாவது, அவர்கள் சந்திரிகா தொடர்ந்தும் அதிகாரத்தில் இருப்பதை விரும்பவில்லை என்பது.


அண்மையில் சந்திரிகா அவருடைய சொந்தத்தொகுதியான அத்தன கலவில் ஆசிரியர்களுடன் ஒரு சந்திப்பை மேற்கொண்டார். அதன் போது அவர் தொடர்ந்தும் அதி காரத்தில் இருப்பதுபற்றிய ஆசிரியர் களின் வெளிப்படையான அபிப் பிராயத்தைக்கேட்டாராம். அதற்கு ஆசிரியர்கள் சொன்னார்களாம்.... கௌரவமாகப் பதவியிலிருந்து விலகிவிடுங்கள் என்று. இதைக் கேட்டசந்திரிகா திகைத்துப் போய் விட்டாராம்.

அடுத்தசனாதிபதித் தேர்தலுக்கிடையில் அவருக்குள்ள சுமார் 17மாதகால அவகாசத்துள்ள அவர் என்ன செய்யக்கூடும் என்பது பற்றி கொழும்பில் இரண்டுவிதமான ஊகங்கள் உண்டு. முதலாவது, தொடர்ந்தும் அதிகாரத்தில் இருப்பதற்காக அவர் யுத்தத்தை ஒரு தெரிவாக எடுத்துக்கொள்ளக்கூடும் என்ற ஓர் ஊகம். மற்றது, அடுத்த ஆண்டு திரும்பவும் நாடாளுமன்றத்தைக் கலைத்து மற்றொருபொதுத்தேர்தலை நடத்தி ஒரு தெளிவான மக்கள் ஆணையைப் பெறமுயலக் கூடும் என்ற ஊகம்.

இவ்விரு ஊகங்களும் ஒன்று மற்றதற்கு நேரெதிரானது. இப்போதுள்ள, தெரிவுகள் மிகக் குறைந்த ஒரு நிலையைவிடவும் யுத் தம் ஒன்றைத் தொடங்கி ஏதும் புதிய வாய்ப்புக்களைத் திறப்பது ஒப்பீட்டளவில் அனுகூலமானது என்று அவர் நம்பக்கூடும்தான். ஆனால் அடுத்த ஆண்டு இன்னொரு பொதுத்தேர்தலை நடத்தும் உத்தேசமிருந்தால் சமாதானமே அவருடைய விருப்பத் தெரிவாய்இருக்கும் வாய்ப்புக்கள் அதிகமுண்டு. ஏனெனில் யுத்தத்தின் வெற்றிதோல்விகள் தேர்தலில் எப்படியெப்படி எதிரொலிக்குமோ என்ற ஓர் அச்சம் அவரிடமிருக்கமுடியும். முன்பு அவர்செய்த சமாதானத்துக்கான யுத்தத்தின் தோல்விகளே ரணிலைப் பதவிக்குக் கொண்டுவந்தன.

எனவே இப்போதுள்ள இரண்டும்கெட்டான் நிலைமைகளை இயன்றவரை இழுத்திழுத்துக் கொண்டுபோவதையே அவர் அதிகம் விரும்பக்கூடும். அதாவது இலங்கைத் தீவின் அரசியல் யுத்தமுமில்லை சமாதானமுமில்லை என்ற இப்போதுள்ள ஈருடகத்தன்மையோடு இன்னும் சிலகாலம் இழுபட்டுச் செல்லப் போகிறதா?

## ரொபி



தந்தை:- கடையில் பதினேழு ரூபாவுக்கு இடியப்பம் வாங்கிவிட்டு இருபது ரூபா கொடுக்குறோம். அந்த இருபது ரூபாவிலிருந்து பதினேழு ரூபாவைக் கழித்தால் என்ன வரும்.
மகன்:- அப்பா மூன்று ரொபி வரும்.

# நறுக்கென...

## பல்லிச் சொல்லை நம்பி; பஞ்சாங்கத்தில் பலன்தேடலாமா?

சிலருக்கு அசாத்தியம் ஆனால் முட்டாலதனமான துணிச்சல் இருக்கவே செய்கிறது. தாம் என்ன எழுதினாலும், பேசினாலும், செய்தாலும் தமிழ் மக்கள் இளிச்சவாயர்கள் தானே...அதனைக் கண்டுகொள்ள மாட்டார்கள் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

அந்தக் காலம் மலையேறிவிட்ட கதை அவர்களுக்குத் தெரியாது. காரணம் அவர்கள் குகைக்குள் இருந்தபடியே "குசுகுசுமந்திரம்" ஓதிப்பழக் கப்பட்டவர்கள். தங்களுக்குத் தாங்களே தங்கள் செய்கைகளுக்காக பாராட்டி பீற்றிக்கொள்ளும் ஒருவித மனோபாவம் கொண்ட அறப்படிச்ச பல்லிகள். ஆனால் பல்லி சொல்லை நம்பி பஞ்சாங்கத்தில் பலன்தேடுபவர்களும் இருக்கத் தானே செய்கிறார்கள்..!




கொழும்பில் வசதியாக இருந்து கொண்டு, பேரினவாதிகள் மற்றும் வல்லாதிக்க சக்திகளின் ஏவலுக்கேற்ப ஊதுகுழல்களாகச் செயற்பட்டுக்கொண்டிருக்கும் குடா நாட்டு பல்கலைக்கழகத்தின் பெயரிலான மனித உரிமைகள் அமைப்பொன்றினை பல்கலைக்கழக ஆசிரியர்களின் பெயரில் பதிவு செய்து தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டத்திற்கு எதிரான கருத்துக்களை மட்டுமே முட்டையில் மயிர் பிடுங்கும் பாணியில் எழுதி அறிக்கைகளாக விட்டுக் கொண்டிருக்கும் அந்த "கூலான" நபர்கள் பற்றித்தான் கூறுகிறேன்.

மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள்- யாழ்ப்பாணம் (UTHR-j) என்ற பெயரில் நேர்மையான முகவரியற்றோரின் அமைப்பொன்று கொழும்பில் இருந்துகொண்டு அரசசார்பு மற்றும், பேரினவாத சக்திகளின் ஊடகங்களூடாகத் தமிழர் விடுதலைப்போராட்டத்தைக் குறுகிய கண்ணோட்டத்தில் அளந்து அறிக்கைகளை வெளியிடுவதையே தேசியக் கடமையாகக் கருதி செயற்பட்டுவரும் புத்தி ஜீவிகள் மட்டத்திலான பாதாள உலகக் குழுவொன்றில் மூல கர்த்தாவான பேராசிரியர் (?!) ஜீவன்கூல், யாழ்.பல்கலைக்கழகத்திற்கு விலாசமாக மேற்கொண்ட பயணம் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் காட்டிய எதிர்ப்பால் "போன மச்சான் திரும்பி வந்தாண்டி கோவணத்தோடு என்ற கதையாக முடிந்துவிட்டது."

என்ன துணிச்சல் ஒரு மாமனிதரின் நினைவுப்பேருரையை ஆற்ற இவருக்கு... அதைவிட அந்த உரையை ஆற்ற இந்தப் பிரமுகரைத் தேர்ந்தெடுத்து அழைத்தவர்களுக்கு என்ன அறிவோ? என்ன துணிச்சலோ...? ஆனால் இளைய தமிழர்கள் தாம் இளிச்சவாயர்கள் அல்ல என்பதைத் தெளிவாக உணர்த்தி-"தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவிற்கு கெடுதல் செய்ய நினைப்பவனே யாழ். பல்கலைக்கழத்தினுள் நுழையாதே", " பல்கலைக்கழகத்தின் தமிழ்த் தேசியத்தைக் கூறுபோட நினைக்காதே....!" என்றெல்லாம் வரவேற்புபசார வாழ்த்துக் கூறி "கூலு"க்கு கொதிப்பேற்றி திருப்பி அனுப்பிவைத்துவிட்டார்கள்.

நன்றி, விழிப்பாக இருக்கும் தமிழ் இளைய சமூகத்தவர்க்கு!

பல்கலைக்கழக சமூகத்தைச்சேர்ந்த ஒரு தமிழ் உணர்வாளர் இதுபற்றிக் கூறும்போது...

"பல்கலைக்கழகத்திற்குள் சில களைகள் புகுந்து அதிகாரம் செய்துகொண்டு எதிர்காலத் தலைமுறையினருக்கான நாற்று மேடையை நாகரிகமாக நாசம் செய்துவரலாமோ?அவைகளை இனங்கண்டு களையாவிடின் பல்கலைக்கழகமே "ஜீவன்கூல்" போன்றவர்களின் மடமாகிவிடும்"

## நன்றி... கொட்டே கொட; நல்லாவே ஜமாச்சுட்டிங்க!



அப்படிப்போடு அரிவாலை....!

"அரசியல் வாதிகளின் செயற்பாடுகளினால் தற்போது பேச்சுவார்த்தைகளும் விடுதலைப்புலிகள், இராணுவத்தரப்பு சந்திப்புக்களும் தடைப்பட்டுப் போயுள்ளன என புதிதாகப் பொறுப்புக்களை ஏற்றுள்ள இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சாந்தகொட்டேகொட கூறியுள்ளதைத்தான் சொல்ல வருகிறேன்.

நன்றி கொட்டே கொட அவர்களே...! ஏதோ ஒரு வகையில் சரியான கருத்தொன்றை முன்னேற்பாடாக உங்களைப் பாதுகாக்கும் வகையில் கூறிவிட்டீர்கள் ஆனாலும் உங்கள் கருத்துக்கான விளக்கத்தைக் கூறும்போது உங்களின் அரசியல்- நிர்வாகத் தலைமைகளைப் பாதுகாக்க உங்களின் கீழுள்ள அல்லது உங்களுக்கு முன்னிருந்த அதிகாரிகளைக்காட்டிக் கொடுக்கும் கைங்கரியத்தையும் கச்சிதமாக செய்துவிட்டீர்களே! இது நியாயமா?

"சனாதிபதியினதோ, பாதுகாப்பமைச்சினதோ அனுமதியைப் பெறாமல் இராணுவத் தலைமைப்பீடங்கள் முன்னர் சில தீர்மானங்களை எடுத்துள்ளன என்ற உங்களின் விளக்கம் எதையோ சூசகமாக அல்ல குறிப்பாகவே சுட்டிக்காட்டி யாரையோ குற்றவாளியாக்க முயல்கிறது...!

அதனை, எதிர்காலத்தில் எனது தலைமையின் கீழ் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்கின்ற உங்களின் உத்தரவாதமே உறுதி செய்கின்றது....!

நேரடியாகச் சொல்லுங்களேன் உங்களுக்கு முன்னர் பதவி வகித்தவர் தன்னிச்சையாக செயற்பட்டமைதான் தற்போதைய சமாதானப் பேச்சுவார்த்தைகள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளுக்கெல்லாம் காரணம் என்று..

என்றாலும் மீண்டும் ஒரு நன்றி.... கருணா விவகாரத்தில் முன்னைய அதிகாரி தவறுகளை விட்டுவிட்டார் என்பதை ஒப்புக்கொண்டமைக்கு... ஆனாலும் ஒரு சந்தேகம்! பலகல்லேதான் சனாதிபதியின் அதிநம்பிக்கைக்குரிய இராணுவத்தளபதியாயிற்றே.... அவர் சனாதிபதியின் ஆலோசனையோ அல்லது அறிவுறுத்தலோ அல்லது ஏதோ ஒருவகையான சமிக்ஞையோ இன்றி எதனையும் செய்யமாட்டாரோ. அதுவும் கருணா விவகாரத்தில் ஒன்றுக்கு நூறு முறை சனாதிபதியுடன் யோசித்தல்லவா செயற்பட்டிருப்பார்!

இந்தவகையில் பார்க்கும் போது நீங்கள் உங்கள் முன்னைய அதிகாரி பாதிக்கப்பட்டாலும் சனாதிபதியைப்பாதுகாத்து உங்களின் விசுவாசத்தை அவருக்கு வெளிப்படுத்த வேண்டும் என நினைத்துச் செயல்பட்டிருக்கிறீர்கள்... அப்படித்தானே!

தொலைநோக்குச் சிந்தனையுள்ள ஆளய்யா நீங்கள்...!

அதுசரி முதலில் அரசியல்வாதிகளின் செயற்பாடுகளால்தான் சமாதான முயற்சிகள் தடைப்பட்டுள்ளன என அழுத்தமாகச்சொல்லியிருக்கிறீர்களே யார் அந்த அரசியல் வாதிகள் என விளக்கமாகச்சொன்னால் மக்களுக்கு அது பயனுள்ளதாக இருக்குமே.....

சொல்லமாட்டீர்கள்... சொன்னால் அது உங்கள் பதவியை, எதிர்காலத்தைப்பாதிக்கும் அப்படித்தானே....!

## இனி நகரவோ,நகர்த்தவோ அம்மணியால் முடியுமா...?



சிறிலங்காவின் சனாதிபதி சமாதானத்தேரை எங்கெங்கெல்லாமோ இழுத்துத் திரிந்துவிட்டுக் கடைசியில் அதன் வழமையான தரிப்பிடத்திற்கு கொண்டுவந்து சேர்த்துவிட்டார் போலுள்ளது.

அதாவது அது இனி நகரவோ அல்லது அதனை நகர்த்தவோ முடியாத நிலைக்குக் கொண்டு வந்து சேர்த்துள்ளார்.

சமாதானப்பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க மிகவும் அவசிய மானதாகக் கருதப்பட்ட விடுதலைப்புலிகளின் நியாயமானதும், முக்கியமானதுமான இடைக்கால நிர்வாகத்திற்கான கோரிக் கையை இதுவரை காலமும் "அப்படி இப்படி" பேக்காட்டி இழுத்தடித்து விட்டு கடைசியில் நிராகரித்துவிட்டார் என்று தெரியவந்துள்ளது.

இதனை நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக்சொல் ஹெய்மிடம் தெளிவாக அம்மணி கூறியுள்ளாராம்!

"இடைக்கால நிர்வாகம் என்பது சமஷ்டித்தீர்வு என்ற கட்டமைப்புக்கள் வரவில்லையாம்..." அது தனி நாட்டை நிறுவுவதற்கான அடிப்படை அமைப்பாக உள்ளதாம்- அம்மணி காரணம் சொல்லியிருக்கிறாராம்....

"இடைக்கால நிர்வாகம் என்பது... தற்காலிக மானதும் இறுதி அரசியல் தீர்வு குறித்த பேச்சுக்களை நம்பிக்கையின் பின் ஆரம்பிக்க வைப்ப தற்குமான ஒரு சபையே தவிர அது ஒரு அரசல்ல என்ற விடயம் தெளிவாகவே உணர்த்தப்பட்டி ருந்தும், அம்மையார் அந்த விடயத்தில் கவனம் செலுத்தாது தட்டிக்கழிக்க முற்பட்டிருப்பது, அவர் இன்னமும் சமாதான நோக்குடன் சிந்தித்துச் செயற்படும் மனப்பக்குவத்திற்கு வரவில்லை என்பதையே உணர்த்துவதாக உள்ளது.

அல்லது அவரால் அவரது பாரம்பரிய பேரினவாத நோயில் இருந்து விடுபடமுடியவில்லை என்றும் கூறலாம். எதுவோ எதுவானாலும் சந்திரிகா மூலம் இந்த நாட்டிற்கு சமாதானம் ஏற்படாது என்பது மட்டும் நம்பிக்கையாகத்தெரிகிறது.

சர்வதேச நிதியுதவிகளை "சுருட்டிக்" கொள்ள சமாதானம் பேசவேண்டும், பேரின வாதிகளை- பௌத்தபீடங்களைத் திருப்திப்படுத்த யுத்தமும் செய்யவேண்டும், ஆட்சிஅதிகாரத்தைத் தக்கவைக்கும் தந்திரோபாயமாக சமாதானத்தையும், யுத்தத்தையும் கையாளவேண்டும், எல்லாவற்றிற்கும் மேலாக தமிழர்களுக்கு உரிமைகளைக்கொடுக்கவும் கூடாது அவர்களின் வலிமையை, தேசிய ஒருமைப்பாட்டை சிதைக்கவும் வேண்டும்....

சந்திரிகா அட்டாவதானியாக அரசியல் பண்ண முயல்கிறார், ஆனால் பரிதாபத்திற்கு ரியவர்கள் அம்மணியால் சமாதான அனுசரணைக்காக அழைக்கப்பட்ட நோர்வேக்காரர்கள்தான்.

அம்மணி மீது இன்னமும் நம்பிக்கை வைத்து அவரை வந்து சந்தித்துப் பேசிப்போகிறார்களே....?

இடைக்கால நிர்வாகத்திற்கே இந்த இழுபறி என்றால் நிரந்தரத் தீர்வொன்றிற்கு நியாயமான தீர்வுகாண அம்மணி தயார் என்று கூறுவதை எப்படி நம்புவதாம்?

நோர்வேக்காரர்களே ... சர்வதேச சமூகமே... நீங்கள் இதற்கு மேலும் சந்திரிகாவின் சமாதான வேஷத்தை நம்புகிறீர்களா?

அப்படியானால் நீங்கள் அப்பாவிகளாக உங்களை அடையாளப்படுத்தப்போகிறீர்களா அவ்வளவுதான்.... முன்னதாகவே உங்களுக்கு எனது அனுதாபங்கள்....

## நாடாளுமன்றமா...? காடாளுமன்றமா...?



சர்வதேசகணிப்பீடுகள் பல தடவைகள் தவறிவிடுவதுண்டு அதற்குப் பல காரணங்களும் உண்டு. ஆனால் இம்முறை பொய்க்காகவே இல்லை. கனகச்சிதமாக அந்தக் கணிப்பீடு சரியாகவே அமைந்துள்ளது.

அந்தக்கணிப்பீடு இதுதான் "சிறிலங் காவில் பொதுமக்களால் அதிகம் வெறுத் தொதுக்கப்படும் இடங்களில் நாடாளுமன்றமே முதன்மை ஸ்தானம் வகிக்கிறது".- என்பதே ஆகும்.

அதோடு வெறுத் தொதுக்கப்படும் நபர்களும் யார் என்ற கணிப்பீட்டையும் அது தெரிவித்திருக்கலாம்.

வெறுத்தொதுக்கப்படும் இடங்களில் அமர நீயா நானா எனப்போட்டியிடுவோர் தான் அவர்களாக இருக்க முடியும்... (நான் சொல்வது சிறிலங்காவின் நாடாளுமன்ற உறுப்பினர்களை....) சரிதானே! "ஏசியா பரோமீற்றர்" (ASIA BAROM ETER) என்ற நிறுவனமே இந்தக் கணிப்பீடு தொடர்பான ஆய்வினை மேற்கொண்டதாம்....!

அது கிடக்கட்டும், நாடாளுமன்றத்தை ஏன் அவர்கள் வெறுக்கிறார்களாம்? அதற்குத் தலைவியாக ஒரு அதி உத்தம நிறைவேற்று அதிகார சனாதிபதி இருக்கையில்....!

மக்கள் சுதந்திரத்தை ஐக்கியமாக முன்னெடுக்கும் முன்னணியின் ஆட்சி அங்கு நடைபெறுகையில்.... ஐக்கியத்தையே பேணும் (?!) தேசிய முன்னணியினர் எதிர்க்கட்சி வரிசையில் ஐக்கியமாக இருக்கையில்.


சமாதானத்தையே எதிர்த்து யுத்தம் புரிந்தோரும் பௌத்த தர்மராஜ்ஜியத்தை உருவாக்க திடசங்கர்ப்பம் பூண்டு நாடாளுமன்றத்துக்குள்ளேயே யுத்தத்திற்கு முகம் கொடுத்து பயிற்சியை எடுத்துவரும் ஹெல உறுமய பிக்குகள் நவக்கிரகங்களாய் அமர்ந்து ஆசி வழங்குமிடமாக இருக்கையில் புத்தகங்களை வீசியெறிந்து விளையாடும் நூல்அறிஞர்கள் உறுப்பினர்களாக அங்கு வாசம் செய்கையில்.....வேண்டாம் இவ்வளவே இப்போதைக்குப் போதும்.....

நாடாளுமன்றத்தை ஏன் வெறுக்க வேண்டும்? அதுதான் புதிர்!

ஒருவரிடம் இதுபற்றிகேட்டேன்.... அவர் சொன்னார். மக்கள் தமது பிரதிநிதிகளை மக்குகளாகத் தெரிவு செய்தால் நாடாளுமன்றம் காடாளுமன்றமாகத்தான் இருக்கும் என்றார்.

செங்கோலைத் தூக்கிக்கொண்டு ஒழிக்கவேண்டிய அளவுக்குத் தென்பகுதி அரசியல்வாதிகள் நாடாளுமன்றத்தை ஒரு பாதாள உலகமாக்கி அங்கு ரௌடிகள் ராஜ்ஜியம் ஒன்றை உருவாக்க முனைகின்றார்கள் என்று அண்மையில் யாழ்ப்பாணம் வந்த சிங்கள கலைஞர் ஒருவர் தனிப்பட்ட முறையில், வேதனையோடு கூறியதே நினைவுக்கு வருகிறது.

செங்குட்டுவன்






# யாருடைய... அரசாங்கம்?



**மூஞ்சூறு** விழுங்கிய சாரையாக 'முழுசிக்' கொண்டிருக்கிறார் சந்திரிகா. வெறுமனே வாக்கு விகிதாசாரத்தை மட்டும் கணக்குப் பார்த்து, ஐ.தே.கட்சியை வீழ்த்துவதற்கான தேர்தல் உத்தியாக அவர் அமைத்த 'ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி', அவர் எதிர்பார்த்த விளைவுகளைத் தராமல் அவர்விரும்பாத எதிர் விளைவுகளை ஏற்படுத்திவருவதுதான் இந்த 'முழுசலுக்குக்' காரணம்.

சிறிலங்காவின் விகிதாசாரத் தேர்தல் முறைமையின் கீழ் ஐ.தே.கட்சியை முறியடிக்கவும்,சிறுபான்மை இனக்கட்சிகளின் ஆதரவின்றித்தனித்து அரசமைக்க வும் சந்திரிகாவால் அமைக்கப்பட்டதே சிறிலங்கா சுதந்திரக்கட்சி- ஜே.வி.பி. கூட்டணியான ஐ.ம.சு.முன்னணி, இக்கூட்டணியே சந்திரிகா இன்று எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு காரணமாகிவிட்டது. தனது பிரச்சினைகளுக்கான அருமருந்து என அவர் நினைத்த உத்தி அவரையே பழிவாங்குவதற்கு வாய்பிளக்கும் அவலம் சந்திரிகாவுக்கு நேர்ந்து விட்டது.

பின் ஐம்பதுகளில் இருக்கும் சந்திரிகா அரசியலில் இருந்து ஓய்வுபெற்றுவிட விரும்பவில்லை. அதாவது, மூன்றாவது தடவையும் சனாதிபதியாக இருக்க விளைகிறார். அல்லது நிறைவேற்றதிகாரமுள்ள சனாதிபதிமுறையினை ஒழித்துவிட்டு, அதிகாரமுள்ள, நாடாளுமன்றத்துக்கு பதிலளிக்க வேண்டிய பிரதமர் பதவியை உருவாக்கி அப்பதவியில் தான் அமர்ந்துவிடுவதே சந்திரிகாவின் உடனடி அரசியல் இலக்கு. இதற்கு ஐ.தே.கட்சியும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசும் அடியோடு ஆதரவளிக்க மறுக்கின்றன. எனவேதான் சந்திரிகா ஜே.வி.பி.யை நாடினார்.

இது ஒரு தற்கொலை முயற்சி என சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் பலர் இடித்துக்கூறியபோதும் சந்திரிகா அதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. அவருக்கு தனது பதவியை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டியிருக்கிறதே!

ஆனால் நடந்தது என்ன?

அவர் எதிர்பார்த்தளவுக்கு நாடாளுமன்ற ஆசனங்களை அவரது 'இலட்சியக் கூட்டணி' யால் பெறமுடியாமற்போனதோடு13ஆவது நாடாளுமன்றில் கட்சிகள் பெற்றிருக்கும் சமநிலையற்ற ஆசன எண்ணிக்கையும் சந்திரிகாவுக்குத் தலையிடியைக்கொடுத்துவிட்டது. அதீதமான பெரும்பான்மைக்குக் கனவு கண்டவருக்கு அறுதிப் பெரும்பான்மைக்கே 7 ஆசனங்கள் பற்றாக்குறையாகிப் போய்விட அவலம் நேர்ந்தது. அதை இட்டு நிரப்ப அவர் மேற்கொண்ட பேச்சு வார்த்தைகளும் தடாலடி, அதிரடி நடவடிக்கைகள் தந்த எதிர்விளைவுகளும் சந்திரிகாவை ஏமாற்றத்துக் குள்ளாக்கி விட்டுள்ளன.

ஆனால், இவை எல்லாவற்றிற்கும் மேலாக 'ஒட்டகம் நுழைந்தகூடாரமாக' அவரது அரசு இன்று மாறிவருகிறது. சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்கள் பலர் முன்னெச்சரித்தது போலவே புதிய கூட்டாளியான ஜே.வி.பி. என்ற ஒட்டகம் சுதந்திரக்கட்சியையே ஏப்பம்விட்டு விடக்கூடிய புறநிலை தோன்றியிருக்கிறது. மறுவளமாக சுதந்திரக்கட்சி என்னும் மரத்தினை ஜே.வி.பி. என்னும் ஒட்டுண்ணி ஒட்ட உறிஞ்சிவிடக்கூடிய அபாயம் நிகழ்ந்தேறிவருகிறது.

நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல்களில் இந்த அரசியல் அவலம் நிகழ்ந்து விடக்கூடிய ஏதுக்கள் காணப்படுகின்றன. இரண்டு வருடங்களுக்கு முன்னர் 16 நாடாளுமன்ற ஆசனங்களுடன் இருந்த ஜே.வி.பி. இன்று 39 ஆசனங்களுடன் நிற்கிறது. இதனை அது வெளிப்படையாகவே சொல்லவும் தொடங்கிவிட்டது. அதாவது சந்திரிகாவின் கட்சி இன்று ஆட்சி பீடமேறியிருப்பது தம்மாலேதான் என்பதை ஜே.வி.பி. மக்கள்முன் வலியுறுத்திக்கூறுகிறது. இது சந்திரிகாவின் சொந்தக்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு பலத்த அசௌகரியங்களை ஏற்படுத்தி வருகிறது.

ஆனால், ஜே.வி.பி. இதனையெல்லாம் கண்டுகொள்ளவில்லை என்பதுடன், அது அடுத்தபடி நிலைக்கு நகர்ந்தும் விட்டது. 'அரசாங்கத்தின் பங்காளிகள்' என்ற நிலையில் இருந்து 'அரசாங்கத்தை நடத்துபவர்கள்' என்ற நிலைக்கு அவர்கள் தங்களைத் தாங்களே பிரகடனப் படுத்திவிட்டிருக்கிறார்கள்.

சில நாட்களுக்கு முன்னர் ஜே.வி.பி.யின் அமைச்சரான லால்காந்த தொழிலாளர் அமைப்புக்களுடனான கூட்டமொன்றில் வெளியிட்டகருத்துக்கள் ஐ.ம.சு. கூட்டமைப்பின் உள்நிலைமையின் அந்தரங்கத்தைப் போட்டுடைத்து விட்டன.

"நாங்கள் அரசாங்கத்தின் பங்காளிகளல்ல எங்களுடையதே அரசாங்கம். இந்த அரசாங்கத்தை அமைத்துள்ள கூட்டணியை உருவாக்கி, அதன் கொள்கைகளை உருவாக்கி அதனை மக்களிடம் கொண்டு சென்றவர்கள் நாங்களே" என்று முழங்கினார் லால்காந்த.

''தொழிலாளர்களின் வாக்குகளால் அமைந்த இந்த அரசாங்கம் தொழிலாளர்களுக்கு எதிராகச் செயற்படுமானால் தொழிலாளர்களின் நலன்களை கவனத்திலெடுக்காவிட்டால் அதற்கெதிராக வீதியிலிறங்கிப் போராடுவோம்." என்றும் லால்காந்த தெரிவித்தார்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக விடுதலைப்புலிகளுடன் பேசும் போது அதுகுறித்துத் தம்முடன் அரசு முதலிற் பேசியாகவேண்டுமென சந்திரிகாவை நிர்ப்பந்திக்கிறது. ஜே.வி.பி. முன்வைக்கப்படும் தீர்வுத்திட்டம் குறித்தும், நிபந்தனைகள் குறித்தும் எதன் மீது அல்லது எதனைமுன்வைத்துப் பேச்சுக்களைத் தொடர்வது என்பது குறித்தும் சந்திரிகா தம்மிடம் 'கிளியரன்ஸ்' பெற்றுக்கொள்ள வேண்டுமென்பது ஜே.வி.பி.யின் நிலைப்பாடு.

அத்தோடு பொருளாதார நடவடிக்கைகளிலும் ஜே.வி.பி.யின் கொள்கைகள் சந்திரிகாவுக்குப் பலத்த அசௌகரியத்தைத் தோற்றுவித்து விட்டன. ஜே.வி.பி.யினரின் 'இடது சாரிக்' கொள்கைகளும் சர்வதேசத் தலையீடுகள் சர்வதேச நிதிநிறுவனங்கள் மீதான விமர்சனங்கள் பார்வைகளும் நிரந்தரமாகவே வெளிநாட்டுதவிகளில் தங்கிநிற்கும் சிறிலங்காவின் பொருளாதாரத்தினைக் கட்டிநிமிர்த்தி ஓடவிடமுடியாத சூழலைச் சந்திரிகாவுக்கு ஏற்படுத்தி விட்டன.

இவையெல்லாம் சேர்ந்து வெளிநாட்டுதவிகள், நிதிநிறுவனங்களின் உதவிகள், கடன்கள் என்பனவற்றின்மீது பாதகமான தாக்கத்தைச் செலுத்துவதாலும், மறுவளமாக தேர்தற்காலத்தில் வழங்கிய, வானத்தைவில்லாக வளைக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு நிதி ஆதாரங்கள் இல்லாததாலும் சந்திரிகா தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கிறார்.

ஆக சமாதானமும் பேச முடியாது, அரசாங்கத்தையும் கொண்டு நடாத்தமுடியாது தன்னுடைய அரசியல் அபிலாசைகளை யாவது நிறைவேற்றலாமெனில் அதற்கும் முடியாது என சந்திரிகா அம்மையார் மூஞ்சூறு விழுங்கிய சாரையாக முழுசிப்போய் நிற்கிறார்.

இதிலிருந்து மீள்வது எப்படி?

ஜே.வி.பி.யைக் கொழுவிக்கொண்டால் எல்லாம் சுகமாகிவிடும் என்று நினைத்ததுதான் பிரச்சினையாகிப்போய்விட்டது - அதைக் கழற்றிவிடுவோமா? என்றால் ஏற்கனவே கலகலத்துப் போய்விட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியை வைத்துக்கொண்டு ஐ.தே.கட்சியை எதிர்கொள்ள முடியாமற் போய்விடும். அது ஜே.வி.பி.யை இன்னும் வளர்த்து விட்டுவிடலாம். சிறிலங்கா சுதந்திரக்கட்சி மூன்றாமிடத்துக்குப்போக நேரிடலாம்.

தலையைப் பிய்த்துக் கொள்கிறார் சந்திரிகா.

வேலியில் போன ஓணானைப் பிடித்து மடியிற் கட்டிக் கொண்டு 'சொறிகிறது' என்றால் யார்தான் என்ன செய்யமுடியும்?

**பு.சத்தியமூர்த்தி**

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 09. 07. 2004
மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

## யாரைக்குற்றம் சொல்ல...!

கொழும்பு கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச்சம்பவத்தையடுத்துக்கொழும்பில் அச்ச நிலை தோன்றியது.

இதனையடுத்து இக்குண்டு வெடிப்புச் சம்பவம் யுத்த நிறுத் தத்தை மீறும் செயலா என்ற கேள்வியும், இந்தக்குண்டு வெடிப்புச் சம்பவம் சமாதானத்தைக்குழப்பும் முயற்சி அல்ல என இன்னொரு புறமும்: ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியின் விளைவு இது என்றும், கொள்ளுப்பிட்டித் தாக்குதல் சமாதான விரோதச்செயலல்ல என மறுபுறமும் இக்குண்டு வெடிப்புத்தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் வெளிவந்துகொண்டிருக்கையில்: இக்குண்டு வெடிப்புச்சம்பவத்திற் கும் தமக்கும் தொடர்பில்லை என புலிகள் இயக்கம் மறுத்துள்ள தோடு, இந்தச்சம்பவத்தைக் கண்டித்துமிருக்கின்றனர்.

அத்தோடு, இந்தக்குண்டுவெடிப்பு சமாதான முயற்சிக்கு விரோதமான செயல் எனவும், இது ஒரு சமாத்ான விரோதிகளின் செயற்பாடு எனவும் தெரிவித்துள்ளனர்.

கொள்ளுப்பிட்டியில் வெடித்த இக்குண்டு வெடிப்புச் சம்பவ மானது சுமார் நான்கு வருடங்களின் பின்னர் கொழும்பில் வெடித்த ஒரு குண்டு வெடிப்புச்சம்பவமாகவும் அமைகிறது.

இதில் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது.

கொழும்பில் நான்கு வருடங்களுக்கு முன்னர் இத்தகைய தொரு குண்டு வெடிப்புச் சம்பவம் நிகழுகிறபோது அரசு வெளியிடும் கருத்துகளுக்கும் தற்போதுவெளியிட்டுவரும் கருத்துக்களுக்கு மிடையில் பெரும்வேறுபாடு உள்ளது.

முன்பு இப்படியொரு குண்டு வெடிப்புச்சம்பவம் நிகழ்ந்தால் அதற்கான முழுப்பழியையும் புலிகள் இயக்கம் மீது சுமத்திவிடும் ஒரு பாங்கு காணப்பட்டது.

ஆனால் இப்போது அப்படி குற்றம் சுமத்தமுடியாதநிலை யில் அரசு உள்ளது என்பதைக்கவனத்தில் கொள்ளவேண்டும்.

இதற்கு காரணம் கொழும்பு உட்பட தென்னிலங்கையில் அரசின் கூற்றின் பிரகாரமே, ஒவ்வொரு கட்சியும், பிரத்தியேகமாக இராணுவ அதிகாரிகளும், படைத்துறை பிரிவுகளும் பௌத்த விகாரைகள் முதல் பௌத்த பிக்குகள்வரை ஆயுதக்கும்பல்களையும் ஆயுதங்களையும் பாதுகாத்துவருகின்ற நிலைமை காணப்படுகின்றது.

அண்மையில்கூட பொலநறுவை ஹிங்குராங்கொடவில் உள்ள ஒரு விகாரையிலிருந்து துப்பாக்கிகளோடு ஒரு ஆயுதக்கும்பல் கைதுசெய்யப்பட்டதுடன், அவர்களை விடுதலை செய்வதற்காக இராணுவத்தின் உயர்அழுத்தம் பிரயோகிக்கப்பட்டிருந்ததாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதனைவிட கொழும்பு தனியார் வைத்தியசாலை ஒன்றில் கருணா குழுவினருக்கிடையில் நடந்த சர்ச்சை ஒன்றில் காயமுற்ற கருணா குழுவைச்சேர்ந்த ஒருவருக்குப் பாதுகாப்புடன் சிகிச்சை அளிக் கப்பட்டதாக ஆங்கில நாளிதழ்கள் செய்திகள் வெளியிட்டிருந்தன.

இத்தகைய சம்பவுங்களின் தொடர்ச்சியாகக் கொள்ளுப் பிட்டிகுண்டு வெடிப்புச் சம்பவமும் நிகழ்ந்திருக்கிறது.

இதனால்தான் அரசு இந்தக்குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு யார்காரணம் என குற்றம் சுமத்த முடியாத நிலையிலுள்ளது.

அத்தோடு சனாதிபதி சந்திரிகாவும் இந்தக்குண்டு வெடிப்பு சமாதானத்தைப் பாதிக்காது என கூறுவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதுடன், கண்காணிப்புக்குழுவினரும் இது ஒரு யுத்தநிறுத்தத்தை மீறும்செயல் என் அறிவிக்கமுடியாத நிலையிலுள்ளனர்.

உண்மையில் இக்குண்டுவெடிப்புச் சம்பவத்துக்கு குற்றம் சுமத்துவதாக இருந்தால் அரசைத்தான் குற்றம் சுமத்தவேண்டும்.

ஏனெனில், அரசின் ஆதரவுடன்தான் இன்று சமாதான விரோத சக்திகள் கொழும்பில் பாதுகாக்கப்பட்டுவருகிறார்கள்.

அத்துடன், இக்குழுக்களுக்கிடையில் சர்ச்சைகளும் முரண்பாடுகளும் காணப்படுகின்றன. அத்தோடு, சிறிய சிறிய குழுக்களுக்குமிடையில்கூட சர்ச்சைகள் இருப்பதாக அரசதகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த சம்பவமானது புலிகள் இயக்கம் தெரிவித்திருப்பது போல இதுவொரு சமாதான விரோத செயற்பாடாக அமைந்துள்ள தோடு, சமாதானத்தைக் குழப்பும்வகையில் மேற்கொள்ளப்படும் ஒரு முயற்சியாகக்கூட இருக்கலாம்.

இந்த நான்கு வருடகாலமாக கட்டிக்காக்கப்படும் சமாதானத்தின் வளர்ச்சிப்போக்குக்குப் பதிலாக எதிரான நிலைப்பாடுகளை வளர்ப்பதில்தான் அரசு அக்கறையோடு இருந்திருக்கிறது போலுள்ளது.

ஏனென்றால் சமாதானத்துக்கு விரோதமான சக்திகளை பாதுகாப்பதில் அரசு காட்டிய அக்கறையின் விளைவுதான் கொழும் பில் விபரிதமான ஒருகுண்டு வெடிப்பு நடைபெறும் அளவுக்கு நிலைமையைக்கொண்டுசென்றுள்ளது.

அந்தவகையில் கொழும்பு கொள்ளுப்பிட்டியில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவமானது அரசின் சமாதானம் மீதான அசண் டையீனத்தாலும், சமாதான முயற்சியை இழுத்தடிக்கமுனைவதோடு சமாதான விரோத சக்திகளைப் பாதுகாக்க முனைவதன் பயனாக விளைந்த விபரீதமாகும்.

## தூரனின் பார்வை

# சாத்தானுக்கு வேதம் ஓதி என்ன பயன்...?

கடந்த இரண்டரை ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வரும் உறுதியற்ற சமாதான காலத் தில் யுத்தநிறுத்த உடன்பாட்டின் அடிப்படையில் போர்நிறுத்தம் ஒன்று கடைப்பிடிக்கப்பட்டு வந்தாலும் எந்த நேரத்திலும் இந்த உடன்பாடு உடைந்து மீண்டும் மோதல் உரு வாகும் சந்தர்ப்பம் ஏற்படக்கூடிய சூழல் அச்சமூட்டும் வகையில் தொடர்ந்த வண்ணமேயுள்ளது.

சனாதிபதி சந்திரிகா உட் பட சமாதானத்திற்குளந்தவிதத்திலும் ஆதரவில்லாதபேரினவாத சக்திக ளும், படைதரப்பும், வெளிப்படை யாகச் சமாதானத்தை ஆதரிப்பது போல் காட்டிக்கொண்டாலும் உள்ளூற தமிழினவிரோதக் கொள் கைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்தபடி மீண்டும் ஒரு போரைத் தொடங்கும் உள்நோக்குடனேயே தொடர்ந்து தமது அரசியல் நகர்வுகளை மேற்கொண்டுவருகி றார்கள் என்பது தெளிவான விடய மாகும்.

ஐக்கியதேசிய முன்னணி ஆட்சியில் இருந்தகாலத்தில் ஆரம்பித்த சமாதான முன்னெடுப்புக் களை சனாதிபதி எந்தவகையிலும் அங்கீகரித்தது கிடையாது. இதற்கு அவர் அதனை அணுகிய விதமே சான்று.

நிறைவேற்று அதிகார பலம் தன்வசம் இருக்கும் அதிகார அகங்காரத்துடன் அவர் சமாதானம் தொடர்பான ரணிலின் முன்னெடுப்பு களை வெறுப்புடனும், இன்னும் சொல்லப்போனால் குரோத மனப் பான்மையுடனுமே அணுகியதுடன் விமர்சித்தும் வந்தார்.

சமாதானம் ஒரு தேசிய அவசியம் என்ற நோக்கு சனாதி பதி அம்மணிக்கு எந்தக்காலத் திலும் எந்தக்கட்டத்திலும் இருந்த தும் கிடையாது.

அவரைப் பொறுத்த வரையில் சமாதானம் என்பது தனது ஆட்சியதிகாரத்தை முழுமையாக்கி ஸ்திரநிலைப்படுத்துவதற்கான ஒரு அரசியல் தந்திரோபாய தார்மீக நடவடிக்கை அவ்வளவுதான்.

பேரினவாதம் சமாதானத் தின் அடிப்படையிலான, தமிழ் மக்களுக்குரிய உரிமைகளை வழங் கும் விடயத்துடன் எக்காலத்திலும் சமரசம் செய்து கொள்ளவிரும்பி யது கிடையாது.

சிங்களபௌத்த மேலா திக்க சிந்தனையில் மூழ்கிக்கிடக் கும், சிறிலங்காவை மாறிமாறி ஆட்சி செய்துவரும், பெரும் பான்மைக்கட்சிகள் தமிழர்களுக்கு, சிறுபான்மையினருக்கு, எதிரான தமது அரசியல் நிலைப்பாடுகளில் இருந்து ஒருபோதுமே இறங்கி வரமனப்பூர்வமாக விரும்பியதே இல்லை.

அப்படி எவரும் தேசிய நலனின் அடிப்படையில் நியாயபூர் வமாகச் சிந்தித்திருப்பார்களேயா னால் சிறிலங்காவுக்கு இன்று இந் தப் பிச்சைக்கார நிலை ஏற்பட்டிருக் காது. சண்டையைக் காரணம் காட்டி கையேந்திய சிறிலங்கா ஆட்சிப்பீடத்தவர் சமாதானத்தின் பேராலும் திருவோடு தெருவோடு அலைவதுதான் அவமானகரமான துயரமாகும்.

சகோதர இனத்தின் அரசியல் வாழ்வியல் உரிமை களை வழங்க மறுக்கும் அரசியல் முதிர்ச்சியோ நாகரிகமோ இல்லாத பேரினவாத வெறியர்கள் பௌத்த தர்மராஜ்ஜியம் அமைக்கப்போவதாக சூளுரைத்து வருவது தான் இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய கோமா ளித்தனமாகும்.

உண்மையில் தேசியநலன் குறித்த ஆழமான உணர்வு சிங்களத் தலைமைகளுக்கு இருந்திருக்கு மேயானால் இனப்பிரச்சினை தோன் றியே இருக்காது, அல்லது அதன் ஆரம்பகட்டத்திலேயே சுமுகமாகவும் நீதியாகவும் தீர்க்கப்பட்டாவது இருக் கும்.

ஆனால் சிங்களத் தலை மைகளுக்குப் பட்டறிவோ, பகுத்தறி வோ மந்தமாக இருந்ததாலேயே யுத்தமா? சமாதானமா? என்ற முட்டால்தனமான தொலைநோக்குச் சிந்தனையற்ற கேள்வியை அவர்கள் தமிழ்மக்களை நோக்கி கேட்க வேண்டியதாயிற்று.

பின்னர் 'சமாதானத்திற் கான யுத்தம்' என்ற பேரினவாதச் சித்தாந்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டியதாயிற்று.

அந்தக்கேள்விக்கும், இந்தச் சித்தாந்தத்திற்கும் விழுந்த மரண அடிகூட பேரினவாதத்தலை மைகளுக்கு சிந்திக்கும் திறனை ஏற்படுத்தவில்லையென்றா சர்வதேச சமூகம் சமாதானம்பற்றி ஓதி என்ன பயன் விளையப்போகிறது?

புதிய ஐக்கியமக்கள் சுதந் திரமுன்னணி அரசு அமைக்கப்பட்டு மூன்றுமாதங்களாகியும் நாடாளு மன்றக்கூட்டத்தை ஒரு நாள்தானும் - ஏன் ஒரு மணிநேரமாகிலும் அமை தியாக, சமாதானமாக, கூட்ட வக்கற்ற, பலவீனமான அரசாகவே அது இன்ன மும் இருக்கிறது'

செங்கோலையே தூக்கிக் கொண்டோடிப்போய் ஒளித்துவைத்துப் பாதுகாக்கவேண்டிய நிலையில், நாடாளுமன்றத்தின் சனநாயகத் தன்மையும் அரசியல்கலாசாரமும் இழிவுநிலையை அடைந்துள்ளது.

பௌத்த தர்மம்பேசும் ஜாதிக ஹெல உறுமயவின் பிக்கு களும், மக்கள் விடுதலைபற்றி வாய் கிளியப்பேசும் ஜே.வி.பி.யினரும் சிறிலங் காவின் நாடாளுமன்ற நடவடிக்கை களை கேலிக்கூத்தாக்கி வருகின் றனர்.

இத்தகையதோர் நாடாளு மன்றமும், அதனை ஆளும் உறுப் பினர்களும் (தென்பகுதியைச்சேர்ந்த வர்கள்) சிறிலங்காவை அமைதி வழியில் சமாதானமாக வழிநடத்தும் என எவரும் நம்பினால் அவர்களை விட அறிவிலிகள் எவரும் இருக் கவே முடியாது. தங்களுக்குள்ளேயே அமைதியை பேண, நியாயமாக நடந்து கொள்ள, சக உறுப்பினரை மதிக்க, சனநாயகப் பண்பைமதிக்கத் தவறும் சிங்கள பௌத்த பேரின வாதிகள், தமிழ்மக்களின் பிரச்சி னையை முதிர்ச்சியான அரசியல் நாகரிகத்துடன், மனித உரிமைகளை மதிக்கும் பண்புடன் அணுகுவார்கள் என நம்புதல் சாத்தியமேயில்லை.

சனாதிபதி தலைமை தாங்கி வழிநடத்தும் ஆட்சிபீட அரசி யல் அணியின் விறுத்தம் இவ்வாறு இருக்குமானால், அவர் எப்படிப்பட்ட மனோநிலையில் இருப்பார் என்பதை விபரிக்கவேண்டிய அவசியமே யில்லை.

இந்த அரசின் சமாதானம் தொடர்பான கொள்கை அல்லது கோட்பாடு அதனை முன்னெடுத்துச் செல்லமுடியாத சிக்கலைக் கொண் டது என்பதற்கு அது குறித்த சனாதி பதியும் அவரது தோழமைக்குரிய வர்களும் ஆளுக்காள் அன்றாடம் அறிவித்துவரும் அறிக்கைகளே சான்றாகும்.

தங்கள் கூட்டணித் தோழ மைக் கட்சிகளுடனான முரண்பாடுக ளுடன் அன்றாடம் முட்டிமோதி, உடன்பாடற்ற உடன்பாட்டுடன் இயங் கும் அரசும், அதனை ஒருவாறு எல் லாரையும், பேய்க்காட்டி' இழுத்துச் செல்லமுயலும் சனாதிபதி அம் மணியும், சிறிலங்காவின் எதிர்காலத் தை எந்தவகையிலும் முன்னெடுத் துச் செல்லும் வலுவற்றவர்களே...

இப்போதுள்ள அரசை உடையவிடாமல் பார்ப்பதுதான் சனா திபதியின் பிரதான இலக்காக இப் போது இருக்கிறது. இந்த நிலையில் அவரால் இன்றைய சமாதான சூழலை உடையவிடாமல் பாது காப்பது என்பது அவரால் முடியாத விடமேயாகும். அவருடன் உள்ள வர்கள் இப்போதைய சமாதான முயற்சிகள் தொடர்வதை எந்த வகையிலும் ஆதரிக்கப் போவ தில்லை. அப்படியே சில வேளை தவிர்க்க முடியாத சூழலில் ஆதரிக்க முன் வந்தாலும் அதில் அவர்கள் விசுவாசத்துடன் இருக்கப் போவ தில்லை.

விசுவாசமற்றவர்களின் சமாதான முன்னெடுப்பு இலக்கற்ற தொன்றாகவே இருக்கும்.

கருணா விவகாரத்திலும், இடைக்கால நிர்வாகம் தொடர்பான விடயத்திலும் சனாதிபதியினதும், அரசினதும், படைத்தரப்பினதும், நேர் மையும், உறுதியுமற்ற ஏமாற்றுத்தந்தி ரோபாயத்துடன் கூடிய செயற்பாடு கள், சமாதானம் தொடர்பான தமிழ் மக்களின் அனைத்து நம்பிக்கை களையும் தகர்ந்து போகச் செய் துள்ளன. சந்திரிகாவின் சமாதான சந்தர்ப்பவாதமும், பேரினவாதச் சுயரூபமும் மீண்டும் ஒரு தடவை வெளிச்சத்திற்கு வர ஆரம்பித்துள் ளது.

இந்தநிலை ஒரு போருக் கான தயார்ப்படுத்தலில் அரசு முனைப் புடன் இறங்கியுள்ளதைக் கடந்த இருவாரகால படைத்தரப்பினரின் செயற்பாடுகள் உறுதிசெய்து வரு கின்றன.

கிழக்கில் பதற்ற நிலை யொன்றினை, கருணாவின் பெய ரைப்பயன்படுத்தி இராணுவப்புலனாய் வுப் பிரிவினர் தொடர்ந்தும் நிலை நிறுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருவதானது விடுதலைப்புலிகளை சினங்கொள்ள வைத்து போரில் ஈடு படவைக்கும் சதிமுயற்சியின் அங்க மேயாகும்.

இந்தச் சதிப் பொறியில் புலிகளை வீழ்த்த சந்திரிகா அரசு கனவு காணுமேயானால் அதன் விளைவுகளையும் அதுதான் அனுப விக்கவேண்டிவரும் என்பதில் ஐய மில்லை.

ஏனெனில்... வரலாறு ஒரு போதும் அயோக்கியத்தனத்திற்கு சாதகமாக நிரந்தரமாக இயங்கியது கிடையாது.

அறியாயத்திற்கு எதிரான விடுதலைப் புலிகளின் போராட்டமும் பின்னடைவுகளும் கண்டிருக்கலாம், ஆனால் தோல்வியில் முடிந்ததாக வரலாறு பதிவுசெய்து கொண்டது மில்லை.

□

# விபரீதங்களின் விளைவுகளை அரசு எதிர்பார்க்கிறதா?

கொலை கலாசாரத்தின் தொடர் நடவடிக்கையொன்று மீண்டும் கடந்த 5ஆம் நாள் கரும்புலிகள் தினத்தன்று மட்டக்களப்பில் நிறைவேறியிருக்கின்றது, நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

ஊடகவியலாளர் ஜி.நடேசனின் படுகொலை உலகின் காதுகளுக்கு எட்டப்பட்ட நிலையில் மட்டக்களப்பின் கொலைக்கும்பலின் நடவடிக்

தின செயற்பாடுகளை முடக்கி விடவேண்டும் என்பது மட்டுமல்ல. இதுபோன்ற மாவீரர் நினைவுதின செயற்பாடுகளை இனிவரும் காலங்களில் இந்தப் பகுதிகளில் முன்னெடுப்பதைத் தடுக்கவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதே தமிழீழவிடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் மீது 2004 யூலை 5இல் மட்டக்களப்பு அரசடித்தீவு மற்றும் வந்

களையும் அழிக்கும் நோக்கே இந்தத் தொடர்படுகொலைகளின் பிரதான இலக்காக இருக்கிறது.

தமிழ்த் தேசத்தின் உணர்வாளர்கயையும் ஆதரவாளர்களையும் அழித்துவிடலாம் என என்றும் இந்த கும்பலின் முயற்சி கைகூடப்போவதில்லை. பின் இந்தகொலை வெறியர்களின் நடவடிக்கையின் தொடர் முயற்சி என்ன என்பதுதான் இன்று ஆழமாக உய்த்தறிய வேண்டியவிடயமாகின்றது.

செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டுவருவதை காணக்கூடியதாக உள்ளது.

கரும்புலிகள் தினத்தன்று நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலை அடுத்து கரும்புலிகள் தின நிகழ்வில் பங்குபற்றுவதில் பிரதேச மக்கள் பின்னடிப்பர் என எதிர்பார்த்தற்கு மாறாக போராளிகளின் எழுச்சியின் காரணமாக எதிர்பார்த்ததைவிட பெருமளவான மக்கள் நிகழ்வுகளில் கலந்துகொண்டமை

வரும் கரும்புலிகளாகவும் மக்கள் அனைவரும் போராளிகளாகவும் மாறும் காலம் வெகுதூரமில்லை எமது தலைவனின் ஆணைக்காகவே நாம் காத்திருகின்றோம்" என உணர்ச்சிவசப்பட கூறியது எதிரியை எச்சரிக்கை செய்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

கரும்புலிகளின் தாக்குதல்களினாலே இன்று சிறிலங்கா அரசு போரியலில் பெரும் பின்னடைவை எதிர்கொண்டுள்ள நிலையில் இந்த உரையின் வெளிப்பாடு மிகப்பெரிய செய்தியை மட்டுமல்ல, எதிர்காலத்தில் சிறிலங்கா அரசு எதிர்நோக்கும் இக்கட்டான நிலையையும் தெளிவுபடுத்தியுள்ளது.

எனவே தென்தமிழீழத்தில் தொடரும்கொலைகளால் சிறிலங்கா அரசதரப்பு எதிர்காலத்தில் எதிர்நோக்கவிருக்கும் முகம்கொடுக்கமுடியாத நிலை உருவாகும் என்பது உண்மை.

கிழக்கின் பாதுகாப்பை செயற்படுத்த முடியாவிட்டால் ஆயுதங்களுடன் நடமாடவும் விடுதலைப் புலிகள் ஏற்கனவே அனுமதி கேட்டிருக்கின்றார்கள். இதனை சிறிலங்கா அரசு தராது என்பது தெரியும். ஆனால் சிறிலங்கா அரசு விரும்பியோ, விரும்பாமலோ கிழக்கில் விடுதலைப் புலிகள் ஆயுதங்களுடன் நடமாட வேண்டிய ஒரு சூழலைஉருவாக்க முற்படுகின்றதா என்ற கேள்வியை தோற்றுவிக்கிறது.

படைதரப்பின் கெடுபிடிகள், மறைமுகநிலைகளில் இருந்து பயணிக்கும் மக்களை வீடியோ படம்பிடித்தல் கொலை பயமுறுத்தல், கொலைகள் என்பன தென்தமிழீழத்தில் தொடர்கின்றன.

கருணா குழுவினரிற்கு சாதகமான ஒரு சூழலை அமைக்கும் முயற்சியில் சிறிலங்கா அரசதரப்பு மறைமுக முயற்சியில் ஈடுபட்டுவருகின்றது என்பது இதனூடாக புலனாகிறது.


இது நடக்கும் நடக்காது என்பதற்கு அப்பால் விபரீத விளைவொன்றை வெகுவிரைவில் சிறிலங்கா அரசு எதிர்நோக்கும் என்பதை மட்டும் உண்மையாக எதிர்பார்க்கமுடியும்.

**—— தேவி ——**



கைகள் நிறுத்தப்பட்டுவிடும் என எதிர்பார்க்கவில்லை. எனினும் நீண்ட இடைவெளிக்குப் பின்

தாறுமூலைப்பகுதிகளில் மேற் கொள்ளப்பட்ட தாக்குதலின்



இந்தக் கொலைவெறியர்கள் தமது கைவரிசையினை வெளிப்படுத்துவார்கள் என எண்ணியிருந்தபோது, அதுவும் விடுதலைப் போரின் தற்கொடையாளர்களை நினைவுகூரும் புனித நாளொன்றில் வெறியர்கள் மீண்டும் தமது கைவரிசையைக் காட்டியிருப்பதானது தாயக மீட்பு வேகத்தை மீண்டும் உரமூட்டியிருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் கரும்புலிகள்

வெளிப்பாடாகத் தெரிகிறது.

ஆகவே மட்டக் களப்புப் பகுதிகளில் இதுவரை நடத்தப்பட்டுள்ள கொலைகளை மீட்டுப்பார்த்தால் தமிழ்த்தேசியத்தின் ஆதரவாளர்கள் மீதும் தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் மீதும் இந்தத் தாக்குதல்களின் இலக்கு பிரதானமாக அமைந்திருக்கிறது.

இனிவரும் காலங்களில் மட்டக்களப்பு அம்பாறைப் பகுதிகளில்களையும் ஆதரவாளர்

இப்போது மட்டக்களப்பிலிருந்து தேசத்தின் விடுதலை மூச்சோடு செய்திகளை வெளிக்கொண்டுவருவதற்கான ஊடகவியலாளர் சமூகம் மட்டக்களப்பைவிட்டு தென்னிலங்கைக்கும் சர்வதேச நாடுகளுக்கும் இடம்பெயர்ந்துள்ளார்கள், இடம் பெயரவைக்கப்பட்டுள்ளார்கள்.

ஊடகவியல் சமூகத்தின் செயற்பாடுகளை முடக்கிவிடலாம் என எண்ணியது போல தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் செயற்பாடுகளையும் முடக்கிவிடலாம் அல்லது முடக்கமுடியும் என கொலை வெறியர்கள் நினைத்து சாதானத்திற்கு விரோதமான

நிச்சயம் பெரும் ஏமாற்றத்தை அளித்திருக்கும்.

சம்பவத்தை அடுத்து அம்பாறையில் நடைபெற்ற கரும்புலிகள் தினநிகழ்வு மிகவும் எழுச்சியுடன் நடைபெற்றது. போராளிகள் எழுச்சிகொண்டு கரும்புலிகள் தின செயற்பாடுகளை வேகமாக முன்னெடுத்தனர். இதனை அடுத்து பிரதேச மக்கள் போராளிகளின் பின்னால் அணிதிரண்டு எழுச்சி கொண்டனர்.

கரும்புலிகள் தின சிறப்புரைகள் யாவும் மிகவும் ஆவேசமாகவும் இருந்தது. அம் பாறை சிறப்புரையில் மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் குயிலின் பனின் உரையில்

"போராளிகள் அனை

---

# நாசாவின் செய்மதி காலடிகளைக்கண்டதா?



ஆறு வருடங்களாக 2பில்லியன் மைல்கள் பயணம் செய்து சனவரியில் வைல்ட் 2 (WILD 2) என்ற வால் வெள்ளியை நெருங்கிய நாஸா விண்கலமான ஸ்ராடஸ்ற் (STAR DUST) அண்ணளவாக 1 மைல் நீளமான காலடி வடிவ அடையாளங்களை அவ்வால் வெள்ளியில் கண்டு கொண்டிருக்கிறது.

பெரியதொரு பாதையையும் பனிக்கட்டிகளையும் எதிர்பார்க்கும் விஞ்ஞானிகள் அவை ஏனைய எதையும் பார்க்க முடியாமல் தடைசெய்யலாம் என எதிர்வு கூறியுள்ளார்கள்.

வால் வெள்ளியின் மையப் பகுதியில் இருந்து 150 மைல்கள் வரை நெருங்கிச் சென்ற ஸ்ராடஸ்ற் இன் வால் வெள்ளியுடனான சந்திப்பு பற்றிய விபரங்களை வெளியிட்ட விஞ்ஞானிகள், இந்த 'காலடி' களும் பரந்த அளவிலானவையும் செங்குத்தான பக்கவாட்டுகளை கொண்டவையுமான மேட்டுப்பாங்கான நிலங்கள், பாரிய குழிகள், சிகரங்கள் மற்றும் தட்டையான தரையையும் செங்குத்தான சுவர்களையுமுடைய

பள்ளத்தாக்குகள் முதலியவை இவ் வால் வெள்ளியினுடைய கிட்டத்தட்ட 20 சதுரமைல் அளவான மேற்பரப்பில் காணப்படுகின்றன. இவை எல்லாமே தெளிவாக வரையறுக்கப்பட்டு தெரிகின்றன.

"இது எதிர்பார்க்காத ஒன்றாகும். நாங்கள் தூளாக்கப்பட்ட நிலக்கரி போன்ற ஏதாவதால் மூடப்பட்டிருக்கும் என்றே எதிர்பார்த்தோம்." என்கிறார் ஸ்ராடஸ்ற ஆய்வுகளுக்கு பொறுப்பான பேராசிரியர் டொனால்ட் பிறவுண்லி.

"வலதுகால்" "இடதுகால்" என இக் காலடையாளங்களுக்குப் பெயர்களிடப்பட்டிருக்கின்றன. "இடதுகால்" ஆனது 650 அடி நீளமும் 140 அடி அகலமும் கொண்டது. "வலதுகால்" 1000 அடி நீளமும் 200 அடி அகலமும் கொண்ட தாகும்.

இரண்டு வகை குழிகளை விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இவை வேறுவிண் பொருட்கள் வந்து மோதியதால் ஏற்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

ஒரு குழியில் வட்டமான மையப்பகுதியும், அதனைச் சூழ கரடுமுரடான பகுதிகளும் காணப்படுகின்றன. வந்து மோதிய பொருள் மீள எறியப்பட்டிருக்கலாம் என் பதை இது காட்டுகிறது மற்றைய குழிதட்டையான கீழ்ப்பரப்பையும் கிட்டத்தட்ட செங்குத்தான சுவர்களையும் கொண்டுள்ளது.

வால்வெள்ளிகளின் ஆக்க அமைப்பு வழமையாகவே தளர்வாகக் குவிந்திருக்கும் சிதைவுகளால் ஆனது என்ற கோட்பாடு வைல்ட் 2 க்கு பொருந்தாது என்று பேரா பிறவுண்லி கூறியதோடு "ஏனென்றால் இது குன்றுகளையும் கூர்க் கோபுரங்கள் போன்ற அமைப்புகளையும் தாங்கும் அளவுக்கு இது கட்டுறுதியானதாக இருக்கிறது என்றும் அவர் கூறினார்.

இந்த வால்வெள்ளியின் மேற்பரப்பிலுள்ள பல அம்சங்கள் அநேகமாக பல பில்லியன் வருடங்கள் பழமையானவையாக, அதாவது பூமியில் உயிரினம் தோன்றிய காலப் பகுதிவரையான பழமையானவையாக இருக்கலாம். நிலைமை அப்படித்தான் என்றால் இந்த வால் வெள்ளியினுடைய மையக் கூறினுள், எப்படி சூரியக்குடும்பம் உருவானது என்பதற்கான சான்றுகள் இருக்கலாம் என்றும் இந்தச் சான்று, தற்போது பூமியை நோக்கி வந்து கொண்டிருக்கும் அதன் மாதிரி பகுதியில் இருக்கும் என்றும் விஞ்ஞானிகள் நம்புகிறார்கள்.

# ஏ9-ஏரம்பு



எல்லாருக்கும் வணக்கம் என்னமாதிரி சுகமா இருக்கிறியளோ எல்லாரும்? அடிக்கடி சந்திக்க வயசும், வசதியும் இடம் கொடுக்குதில்லை. ஏதோ ஒருகிழமைக்கு ஒருக்காலாவது முடியுது. உங்களோட கதைக்கிறதால எனக்கும் கொஞ்சம் நிம்மதி கிடைக்குது, அதிலையும் பாருங்கோ! போனகிழமை ஒரு வெட்கக்கேடான விசயம் எனக்கு நடந்திட்டுது. அந்தச் சோகத்தை என்ர வாயால நான் சொல்லேலாது. அது தான் கையால எழுதிறன்.

போன திங்கட்கிழமை கிளிநொச்சி மைதானத்திலை ஹெலி இறங்கினது கேள்விப்பட்டிருப்பியல் அதிலை ஒருத்தர் நான் முந்தி கொழும்பில வேலைசெய்கிற நேரம் பழக்கமானவர். மனுசன் என்னை தற்செயலாறோட்டில கண்டவுடன், வெள்ளைக்காரன் எண்ட ஒரு பவுசில்லாமல், இறங்கி வந்து கைதந்து கதைச்சிது. "டபிள் ஏ! உம்மோட முந்தி தினமும் வோக்கிங் (Walking) போறதை நினைத்தால் ஏதோ நேற்று மாதிரியிருக்குது" எண்டார். "டபிள் ஏ" எண்டிறது அவர், என்ர பெயரிலை வாற ரண்டு 'ஏ'யையும் வைச்சு உண்டாக்கின பட்டப்பெயர். என்னோட ஆற அமர இருந்து கதைக்கோணுமெண்டு அவர் சொன்னதால, அடுத்த நாள் நாலுமணிக்கு என்ர வழமையான ஏ-9 பிராக்குப் பாக்கிற குந்தடியில சந்திப்போம் எண்டு முடிவு செய்திருந்தோம்.

மத்தியானம் சாப்பிட்ட மரக்கறிச் சாப்பாடு நல்லா அமத்திட்டுது. சோக்கான நித்திரை. அப்படியே எழும்பி வீட்டில கிடந்த கொஞ்ச அலுவல்களையும் முடிச்சுப்போட்டு, ஒரு குளிப்பும் போட்டுட்டு என்ரை வெள்ளைக்கார நண்பரைச் சந்திக்கப்புறப்பட்டேன். மனுசி தந்த மளிகைக்கடை லிஸ்ரையும் கடை பூட்ட முதல், போய் முடிச்சிட்டு என்ர வழமையான இடத்துக்கு வந்துசேர்ந்தன்.

"ஹலோ டியர் frind! எப்படி சுகங்கள்? வந்து கனநேரம் ஆகுதோ? "சைக்கிளை கரையிலை விட்டுக்கொண்டு கேட்டன்.

ஒரு புன்னகையோட எழும்பிக்கைதந்தார். பழைய கொழும்பு வாழ்க்கை, இப்போதைய சமாதானப் பேச்சு வார்த்தை எண்டு எல்லாத்தைப் பற்றியும் கதைச்சுக்கொண்டிருந்தம். என்னை வேலை வெட்டியில்லாத பழசு எண்டு வழமையா நக்கல் பார்வை பார்த்துக்கொண்டு போறவை, வெள்ளைக்காரன் ஓராளையே சீரியஸா டிஸ்கஸ் பண்ணிறதை 'ஆ'வெண்டு பார்த்துக்கொண்டு போச்சினம். நானும் கடைக்கண்ணாலை அதைப்பார்த்து பெருமைப்பட்டுக் கொண்டிருக்கேக்கதான் அது நடந்தது.

"மிஸ்ரர் டபிள் ஏ! நாங்கள் நாலு மணிக்கு சந்திக்கிறதெண்டெல்லே கதைச்சனாங்கள். நீர் 75 நிமிஷம் பிந்தி வந்தனீர், ஏன் அவசரமா ஏதும் அலுவல் வந்திட்டுதோ?"

நான் மரக்கறிச் சாப்பாட்டின்ரை மகிமையைப் பற்றியும், மனிசி தந்த மளிகைச் சாமான் லிஸ்ரைப் பற்றியும் சொன்னன். "கொஞ்சம் வேளைக்குப்போய் அலுவல்களைப் பார்த்திருக்கலாம்தானே. அல்லாட்டி அஞ்சு மணிக்கு வரச்சொல்லி முதலே எனக்குச்சொல்லியிருக்கலாம். உங்கை பாரும் நிலத்திலை! வாழ்க்கையிலை உத்தினை சிகரெட்களைத் தொடர்ந்து பிடிச்சது இண்டைக்காத்தானிருக்கும்," நிலத்திலை 6,7 அடிக்கட்டைகள் கிடந்தன. "சொல்லிறனெண்டு கோவிக்க வேண்டாம்! ஆனால், உங்கடை இனக்காரர் எல்லாம் இந்த விசயத்திலை படுமோசம். நேரத்துக்கொரு சாட்டுக்கள் சொல்லுவினமே தவிர, மற்றையபடி நேரத்துக்கு மதிப்புக் கொடுக்கத்தெரியாத சோம்பேறிகள். உந்தச்சாபக்கேட்டில இருந்து நீங்கள் மீளாதவரைக்கும், என்னதான் தீர்வு வந்தாலும், உங்கட பிரச்சினை தீராது!" படபடவென்று பொரிந்து தள்ளினார்.

எனக்குப் பெரிய கோபம் வந்திட்டுது. ஏதோ ஒரு விசயத்துக்கு கொஞ்சம் பிந்திப்போனால், என்ன குடியே மூழ்கி விடும்! ஆகலும் தான் துள்ளுறார். இது எங்களுக்குள்ள வழக்கம்தானே! எட நான் நேரத்துக்குப் போறன் எண்டு வைச்சுக் கொள்ளுங்கோ, வரச்சொன்னவர் மட்டும் நேரத்துக்கு அங்க நிற்கவே போறார்? இந்த வெள்ளை மட்டும் நல்லாத் துள்ளுது. நாங்கள் தமிழர் நேரத்துக்கு எவ்வளவு மதிப்புக் கொடுத்து வாறோம் எண்டு விளங்கி, அவற்றை வாயைஅடைக்கவேணும். அவசரத்திலை பொருத்தமான திருக்குறள் ஒண்டுகூட ஞாபகத்துக்கு வரேலை. இனி அது வேறபொருத்தமா ஞாபகம் வந்தாலும், அதை இங்கிலிஸ் ஆக்கிற சோலி வேற இருக்கு. இருந்தும் நானும் விடேல்ல பாருங்கோ "நீர் விளக்கம் இல்லாம சும்மா ஒரு சில விசயங்களை வைச்சுக் கதைக்கக்கூடாது. உலகத்திலை வேறு எந்த இனமும் கொடுக்காத முக்கியத்துவத்தை நாங்கள் தமிழர் நேரத்துக் குக்குடுக்கிறம், வடிவாக்கேளும்! நாங்கள் பிறக்கிறதிலை இருந்து சாகிறவரைக்கும், ஏன் செத்தபிறகு கூட மதிப்புக்கொடுக்கிறம். பிறப்பு, குறிப்பு, திருமணம், குடிபுகுதல், கடைதிறத்தல், வாகனம் வேண்டுதல் எண்டு எல்லா விசயத்திலையும் தென்னாசியாக்காரர் மணித்தியாலம், நிமிஷம் ஏன் செக்கன் எண்டு எல்லாம் கவனிக்கினம். நீங்கள் ஐரோப்பியக்காரர் மாதிரி இல்லை நாங்கள். ஒவ்வொண்டுக்கும் சுபநேரம், ராகுகாலம், யமகண்டம், முகூர்த்த நேரம் எண்டெல்லாம் எத்தின விசயம் கவனிக்கிறோம் எண்டு உமக்கு விளங்காது. உங்கட நாடெல்லாம் தொழிற்புரட்சியோட நேத்துத்தான் முன்னுக்கு வந்தது. நேரம் பார்த்து காரியம் ஆற்றிற எங்கட வழக்கம், கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திலை இருந்து எங்கட நடைமுறையா எங்கட ரத்தத்தோட ஊறியிருக்கு. ஏன் வெளிநாட்டுக்குப் போன எங்கடசனம் கூட இஞ்சை அடிச்சு விசாரிச்சுத்தான், நல்லதுகெட்டதுகளை அங்கை ஆற்றினம். அப்படியிருக்க நீர்சும்மா அவசரப்பட்டுக் கதைக்கக்கூடாது" நல்லா உறைக்கக் குடுத்த திருப்தியிலை எனக்கு நல்ல சந்தோசம்.

"டபிள் ஏ! நீர் சொல்லுறது எனக்கு விளங்கிறது. நான் ஒண்டும் ஆத்திரத்திலை இதைச் சொல்லவில்லை. நேரத்துக்கு மதிப்புக் கொடுத்து நீங்களெல்லாரும் நடந்தால், ஒவ்வொருதருக்கும் எவ்வளவு நேரம் மிஞ்சும்தெரியுமே. சும்மா வீணாய்ப்போற இப்படிப்பட்ட நேரத்திலை எத்தினை உருப்படியானகாரியங்களைச் செய்யமுடியும். ஒவ்வொரு நாளும் இப்படி வீணாகும் மணித்தியாலங்களைக் கூட்டிப்பாருங்கோ! எவ்வளவு பெரிய பொருளாதார இழப்பு? விதண்டாவாதம் கதைக்காமல் நான் சொல்லுறதிலை இருக்கிற நியாயத்தைப் பாருங்கோ!"

"மற்றது எங்கட நாட்டிலையும் எனக்குக் கன தமிழ் நண்பர்கள் இருக்கினம். பழகிறதுக்கு நல்ல அன்பானவை. நிகழ்ச்சியள், கலியாண வீடுகள் எண்டு கூப்பிடுவினம். நானும் கார்ட்டிலை இருக்கிற 'சுபநேர'த்துக்குப் போய் நிற்பன். ஒரு சனமும் வந்திராது. நல்லநேரம் பார்த்து காரியம் ஆற்றிற எண்டு சொல்லிறியள் உங்கட ஓராள்தானே'நாளும், கோளும் நாதன் அடியாருக்கில்லை' எண்டவர். நேரம் பார்த்தாமட்டும் போதாது, அதைக் கடைப்பிடிக்கவும் தயாரா இருக்கோணும். ஏதோ காலம் காலமா நேரம் பார்த்த கதையள் சொன்னனீர். போர்த்துக்கேயரின்ர 'உரிலோசு' தானே நீங்கள் கண்டமுதல் மணிக்கூடு. அதுக்கு முன்னாலை சூரிய மணிக்கூட்டில நிமிஷம், செக்கன் எல்லாம் பார்த்து சுபநேரம், ராகுகாலம் எல்லாம் கடைப்பிடிச்சனீங்களோ? ஒழுங்கான மணிக்கூடு இருக்கேக்கிளையே கடைப்பிடிக்காத நீங்கள், அந்தக்காலத்திலை.... ம்.. ம்.. விதண்டாவாதத்தை விட்டிட்டு கொஞ்சம் யோசித்துப்பாரும்!" எனக்கு என்ன பதில்சொல்லுறது எண்டு தெரியாமல் போய்விட்டுது. சங்க நூல்கள் பத்துப்பாட்டு, எட்டுத் தொகை எண்டு யோசித்துப் பார்த்ததிலை, மணிக்கூடு பாவிச்சகதை ஒண்டும் வந்ததா ஞாபகம் வரேல்லை. போர்த்துக்கல்காரன்தான் மணிக்கூட்டை எங்களுக்கு அறிமுகப் படுத்தினவன். அப்பிடியெண்டால் அதுக்கு முன்னாலை இந்த் இராகு காலம் எல்லாம்...? மனுசன் வெளியாலை இருந்து வந்த வெள்ளை எண்டாலும், சம்பந்தர் அப்பருக்குச் சொன்ன கதையெல்லாம் தெரிஞ்சு வைச்சிருக்குது. எனக்கு அவற்றை முகத்தைப் பார்க்க வெட்கமா இருந்துச்சு, கதைக்கவும் ஒண்டும் வரேலை. அதுக்குப் பிறகு என்ன நடந்ததெண்டும் எனக்கொண்டும் ஞாபகமில்லை. எல்லாம் இருண்டு போய்க்கிடந்தது எனக்கு வெளிச்சத்துக்கு வந்தது.

# பெற்றோரை விழிப்படையச்செய்த ஆரம்ப கணிதபாடச்செயலமர்வு

புதிய கல்விச் சிந்தனை நாளுக்கு நாள் அதிகரித்து வர புதிய சமூகங்களும் அதன் பிரதிபலிப்பால் விழிப்புப் பெற்றுவருகின்றன. இன்று மாணவர்/பிள்ளைகளுக்கான பாடசாலைக் கல்வி என்ற நீண்டதூரப்பயணத்திலிருந்து திருப்பமொன்றையடைந்த கல்வி அமைப்பு பிள்ளைகள் சார்பில் பெற்றோருக்கான கல்வியின் அவசியம் பற்றி புதிய பார்வைகளை முன்னெடுக்கின்ற நிலை தோன்றியுள்ளது.

எத்தனைதான் பிள்ளைகளுக்கு அறிவை. திறனைக் மனப்பாங்கினை ஏற்படுத்தினாலும் சாதகமில்லாத பின்புலத்தையுடைய பிள்ளைகள் அடியற்ற மரமாகச் சரிந்துவிடும் நிலை காலாதி காலமாகவே காணப்படுகின்றது. இதனை சரியாக எதிர்கொள்வதற்கு கல்வியலாளர்கள் தலைப்படுகின்றமை மிகவும் ஆரோக்கியமான சமூக வளத்தைத் தோற்றுவிப்பதாக அமையும் என நம்பலாம்.

இவ்வாறான புதிய கல்வி ஒழுங்கின் முதல் நடவடிக்கையாக 26.06.2004 அன்று கிளிநொச்சி மத்தியகல்லூரியில் வலயக் கல்வி அலுவலகத்தின் ஆரம்பக் கல்வி பிரிவினர் நடாத்திய ஆரம்ப கணித பெற்றோர் பிள்ளைகள் விழிப்புணர்வுச் செயற்பாடு காணப்பட்டது. காலை 9 மணியளவிலிருந்து மதியம் 1மணி வரை ஏறத்தாழ 300 பிள்ளைகளும் அவர்களது தாய்மாரும் (பெரும் பாலும்) கலந்து கொண்டனர்.

தன் பிள்ளையின் பலத்தையும் பலவீனத்தையும் அறிதல் இதில் பெற்றோரை அழைத்ததன் பிரதான இலக்காக இருப்பினும் அதற்குமப்பால் தன்னாலேயே முடியாதவற்றை தன்பிள்ளை செவ்வனே செய்கின்றமையை பெற்றவர்கள் நேரடியாக அனுபவித்ததனையும் குறிப்பிடலாம்.

எமது பகுதியில் ஆசிரியர் வளம். பௌதீக வளங்களின் குறைபாடு அதிகமாகக் காணப்பட இவ்வாறான புதுமுறைக் கல்விச்செயற்பாட்டின் அவசியம் கவனிக்கப்பட வேண்டியதே-

பொதுவாகக் கணித பாடத்தில் மாணவர்கள் பின்தங்கி இருக்கின்ற நிலைமை எமது பாடசாலைகளில் அதிகம். இதற்கு கணிதபாடத்தில் குறிப்பிட்ட அலகின் அல்லது கணக்கின் யதார்த்தத்தினை அல்லது அதன் உண்மை இயல்பை. அதற்கான காரணிகளை. அதன் பயன்பாட்டை விளக்குவதற்கு செயற்பாடுதான் மிகவும் பொருத்தமானது என்பது இது எடுத்துக் காட்டியது. இதில் பின்வரும் தலைப்புகளில் செயன்முறைகள் இடம் பெற்றிருந்தன.



முதலாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையான மாணவர்களுக்கான இதில் தலாஒவ்வொரு வகுப்பும் 15 செயன்முறைகளுக்கு ஈடுபடுத்தப்பட்டிருந்தது. இவற்றில்,

1) எண் விளக்கம் - பெறுமானங்கள்.
2) எண் கோலங்கள் - எண்குணாம்சம்.
3) வரைபு எண்ணக்கரு விருத்தி - Graphic elements.
4) டொமினோ விளையாட்டு - எண்சார்ந்த விளையாட்டு.
5) சமச்சீர் வடிவங்கள் - உருவங்களின் ஒத்த தன்மை.
6) தெரிதல் - எண்கள். வடிவங்கள். நிறங்கள். உருவங்கள்.
7) நிறைகள் - நாளாந்தம் பிள்ளை கையாளுபவற்றின் பாரம்.
8) கொள்ளளவு.
9) எண்களின் பெருக்கங்கள் - விளையாட்டு.
10) பொருட்களின் எண்ணிக்கைக் கூடாக் கூட்டல் - கழித்தல்.
11) துண்டங்களைப்பொருத்தி உருக்களை ஆக்குதல்.

என்பன போன்றவற்றுக்கு தனித்தனியாக நேரம்வழங்கப்பட அருகே பெற்றோர் தன் பிள்ளையின் ஒவ்வொரு செயற்பாட்டின் திறனையும் அவதானித்து வியந்தனர். மட்டுமல்லாது தனது வீட்டுச் சூழலை அதற்காக தயார்படுத்துவதற்கும் தூண்டப்பட்டனர்.

இந்தச் செயற்பாடு குறிப்பிட்ட தொகையினரை உள்ளடக்கினும் பரவலாக நடாத்தப்படவும் புதிய புதிய எண்ணக்கருக்களை ஆக்கி இன்னும் வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டுமென்பதை மனங்கள் கூறின.

கல்வி அமைச்சு இத்தகு பிரமாண்டமான. காத்திரமான செயற் பாட்டுக்கு ரூபா500 தான் ஒதுக்கி இருந்த போதிலும் கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளரின் அரும் முயற்சியால் இதனைச் சிறப்பாக நிகழ்த்திக்காட்டும் காரியம் கைகூடி இருந்தது.

இவ்வாறான செயற்பாடுகளுக்குப் பெற்றோரின் ஒத்துழைப்பு நிதி மூல வளங்கள் தாமதமின்றிக் கிடைக்கும் என்பதில் இவற்றை வலயக்கல்வி அலுவலகத் துறைசார்ந்தவர்கள் சோர்வின்றி முன்னெடுக்க பெற்றோரின் உதவியை முன்கூட்டியே நாடிபொருள். பணம் பெற்று மிகவும் கவர்ச்சியாகவும் சௌகரியமாகவும் மேற்கொள்வது பலரையும் இதன் பால் ஈர்ப்பதற்கு அடிகோலும்.

டாவினின் கோட்பாட்டின் படி பெற்றோரைவிட பிள்ளையின் நுண்ணறிவு அதிகமாகவே இருக்கும் என்பதை இங்கு நிகழ்த்தப்பட்ட எண்ணடுக்குகள் என்ற செயற்பாட்டில் கலந்து கொண்ட பெற்றோரையும் பிள்ளைகளையும் வைத்தே தீர்மானிக்க முடிந்தது. தன் பிள்ளை செய்துமுடித்த எண் அடுக்கு நிகழ்ச்சியில் அந்தப் பிள்ளையின் வேகத்திற்கு பெற்றோருக்கு ஈடு கொடுக்கமுடியாமல் இருந்ததை அறிய முடிந்தது. எனவே புதிய சமுதாயம் வினைத்திறனதிகமுடைய செயற்பாட்டுக்குரியது என்பது வெளிப்படை.

காலைமுதல் மதியம்வரை இச் செயற்பாட்டில் ஈடுபட்ட கல்வி அபிவிருத்தி பிரதிக்கல்விப்பணிப்பாளர். ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர். ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோரின் அர்ப்பணிப்பான செயற்பாடுகள் இந்த செயல் ஒழுங்குக்கு நான்கு நாள் முன்பிருந்தே தொடங்கி இருந்தது என்பதும் குறிப்பிடப்பட வேண்டியது.

இதனை அவர்கள் ஒழுங்கு செய்த இடம். காலம். தெரிவுகள் எல்லாமே கச்சிதமாகவும் பொருத்தமாகவும் அமைந்தது எனலாம்.

இது அடுத்ததாக அக்கராயன் ம.வி எதிர்வரும் 10.14 ஆம் திகதிக்கு அண்மித்த தினங்களில் நடைபெறும் போது தவறவிட்ட பெற்றோரும் பிள்ளைகளும் கல்வி விரும்பிகளும் இதனை அனுபவித்தல் வாய்க்கும் என நம்பலாம்.

இவ்வாறான ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு தனவந்தர்கள். கல்வி ஆர்வலர்கள். வள்ளல்கள் பொருளாதார உதவி செய்து ஊக்குவித்து கல்வி மேம்பாட்டுக்குக் கைகொடுத்தல் அவசியமாகியுள்ளது.

பெருமாள் கணேசன்



## நாற்றிசை நடப்புகள்

# உலக அரசியல் நிர்ணயத்துள் சிறுபான்மை இனங்களின் பங்கு?



உலக இயக்கத்திற்கு ஏற்ப சர்வதேச அரசியலும் இயங்கிக் கொண்டிருக்கிறது. அரசுகள் இதன் மூலாதாரங்களாக அமைந்திருந்த போதும், சில அரசுகளுக்குத் தனித்துவம் காணப்பட்டபோதும் குழுக்களும், சிறிய இனப்பிரிவுகளும் உலக மாற்றத்தை ஏற்படுத்தும் வலுவுடையவையாக விளங்குகின்றன. அதனடிப் படையில் உலக அரசியலில் ஏற்பட்டுள்ள விடயங்களை நோக்குவோம்.

### ஓய்வு பெற்ற படையினருக்கு அழைப்பு

ஆப்கானிஸ்தான். ஈராக் போன்ற நாடுகளில் பணியாற்ற ஓய்வு பெற்ற அமெரிக்கப்படைகளை இணையுமாறு அமெரிக்கா அழைப்பு விடுத்துள்ளது. ஏறக்குறைய இந்நாடுகளில் பணிபுரிய ஆறாயிரம் படைகளை மீள இணைக்கும் திட்டத்தை அமெரிக்கா கொண்டுள்ளது. இவ் ஆட்சேர்ப்பானது அமெரிக்க இராணுவத்தின் பற்றாக் குறையையே வெளிப்படுத்துகின்றது. புதிதாக படையினரை இணைத்துக் கொள்வதைவிட அமெரிக்காவுக்கு ஓய்வு பெற்றவர்களால் அதிக இலாபம் உண்டு எனக்கூறினாலும் ஈராக்கில் தற்போதுள்ள நிலையில் அமெரிக்கப்படைகள் ஓய்வில் செல்வதையே அதிகம் விரும்புகின்றனர். இதனால் ஓய்விலுள்ளவர்களை சேவையில் மீண்டும் இணைந்து கொள்வது கடினமான பணியாக அமையப் போகின்றது. அதுமட்டுமன்றி அமெரிக்காவின் ஆப்கான், மற்றும் ஈராக் தொடர்பான தவறான கொள்கையினால் ஏற்பட்ட நெருக்கடியாகவே இதனை மதிப்பீடுசெய்கின்றனர். ஈராக் விடயத்தில் புஷ்ஷின் கொள்கை பலவீனமானதாக அமைந்ததன் நிமிர்த்தம், ஈராக்கில் பணியாற்றிவந்த பல அரசுகள் வெளியேறியதுடன் புதிய அரசுகள் ஆதரவை வழங்கப்பின்னடிக்கின்றனர்.

குறிப்பாகத் துருக்கி. கனடா, தென்கொரியாபோன்ற நாடுகளில் ஈராக்குக்கு மேலதிக படைகளை அனுப்பமுடியாத நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளன. இந்நாடுகளின் ஆட்சியிலுள்ள அரசாங்கங்களை எதிர்த்து மக்கள் போராடுவதுடன் மேலதிக படைகளை அனுப்பக்கூடாது என வீதியில் இறங்கிப் போராட ஆரம்பித்துவிட்டனர். துருக்கியில் நடந்த நேட்டோ மாநாட்டிற்கு பெரும் எதிர்ப்பு ஏற்பட்டதுடன் மக்கள் பெரியளவில் ஆட்சியாளருக்கு நெருக்கடி கொடுப்பவர்களாக மாறிவருகின்றனர். இது அமெரிக்காவின் ஆதிக்க விஸ்தரிப்புக்குப் பெரும் தடையாக அமையவுள்ளது. ஆனால் இன்றைய விஞ்ஞான வளர்ச்சியில் மனித வலுவுக்குப்பதிலாக இயந்திரவலுவை பயன்படுத்துவது அநேகவிடயங்களில் சாத்தியமாகவுள்ளதால் இராணுவத்திலும் அமெரிக்கா இணைக்காதென கணக்குப்போடமுடியாது. ஈராக்கின் கிளர்ச்சியாளர்களும். ஆப்கானிஸ்தானில் மீண்டும் தலைதூக்கும் தீவிரவாதமும் அமெரிக்க விஸ்தரிப்புக்குப் பெரும்நெருக்கடியாக மாறிவருகின்றமை என்பது புதிய மாறுதலாக அவதானிக்கப்பட வேண்டியதாகும்.

### சதாமும் இடைக்கால அரசும

சதாம் ஹுஷைனும் அவருடன் பணியாற்றிய முன்னாள் ஈராக்கிய ஆட்சியாளர்கள் ஈராக்கின் இடைக்கால அரசிடம் கையளிக்கப் பட்டுள்ளனர். சட்டநடவடிக்கைக்காக கையளிக்கப்பட்ட இவர்களில் சதாம் ஹுஷைன் நீதிமன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இராணுவ முகாமுக்குள் நிகழ்ந்த விசாரணையின் நீதி சதாம் ஹுஷைனுக்கானதல்ல. ஈராக்கிய மக்களுக்கும் உலகத்திற்கும் சதாமை நீதியின் முன் அமெரிக்கா நிறுத்தியுள்ளது என்பதைக் காட்டுவதற்கான முயற்சி மட்டுமேயாகும். சதாம் கொல்லப்படுவதற்குக் காரணம் தேடும் அமெரிக்காவுக்கு இடைக்கால அரசும் அதன் ஆட்சியாளர்களும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளனர்.

சதாம் நீதியின் முன் நிறுத்தப்பட்டிருப்பது என்பதை, தொலைக் காட்சிகள் மட்டுமே நிறுவிவருகிறது. சதாமின் குரல்கூட வெளிவராத விசாரணை என்பதையும் அவரது பதில்கள் அமெரிக்க ஆட்சியாளரை புண்படுத்துவதாக உள்ளதென்பதையும் காட்டுவதாக அமைந்திருக்கின்றது. சதாம் மீதான குற்றச் சாட்டுக்கள் காலங்கடந்தவை மட்டுமன்றி, அமெரிக்கா ஈராக் மீது போர் தொடுத்தபோது முன்வைத்த எந்தக் குற்றச்சாட்டும் இல்லை என்பதுடன், அவை நிறுவப்படவில்லை என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். சதாம் முடிந்த சகாப்தமாக நோக்கினாலும் சில வரலாற்றுப்பாடத்தைப் புகட்டும் ஆட்சியாளனாக இருக்கின்றார். எந்த ஆட்சியாளரும் சதாம் போன்று செயற்படக்கூடாது என்பதற்கும் எப்படி செயற்பட்டிருக்கவேண்டும் என்பதற்கும் முன்னுதாரணமானவர் சதாமே.

இடைக்கால ஆட்சி அவசரமாக ஈராக்கிய மிதவாதிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இம்மிதவாதிகளின் ஆதிக்கம் 2005 ஆம் ஆண்டிலிருந்து ஈராக்கில் நிரந்தரமானதாக மாறுவதற்குத்திட்டமிட்டுள்ளது. ஈராக்கில் பொம்மை அரசை ஆரம்பித்த அமெரிக்கா, அதிகாரத்தை ஈராக்கியரிடம் கையளித்துவிட்டதாகக் கூறுகின்றது. இடைக்கால ஆட்சியின் பலவீனமே சதாமின் அரசியல் விவகாரத்தை பொறுப்பேற்றுக்கொண்டதாகும். இதனூடாக அமெரிக்க காலனித்துவ ஆட்சி சனநாயகத்தையும், போலியான அரசியல் மாற்றங்களையும் ஈராக்கிய மக்களிடம் ஒப்படைக்கத் திட்டமிட்டுள்ளது. எப்படி கீழைத் தேசத்தின் ஏனைய பகுதிகள் மேற்குலக சக்திகளால் பயன்படுத்தப் படுகின்றதோ, அதிகாரம் பிரயோகிக் கப்படுகின்றதோ அவ்வாறே மேற்காசியாவும் படிப்படியாக மாற்றப்படப் போகின்றது. ஈராக்கிற்கு முன்னோடியாக குவைத் காணப்பட்டது. ஆனால் குவைத் அமெரிக்காவிடம் சரணடைந்து போலியான சனநாயகத்தைப் பெற்றுக்கொண்டது. ஈராக் போராடி போலியான சனநாயகத்தை பெறவேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது. ஆனால் அது பூரணமான அடைவென்று கூறிவிடமுடியாது. ஏனெனில் ஈராக்கில் வெடிச்சத்தங்கள் இன்னுமே ஓயவில்லை என்பதாகும்.

### தடுப்புச்சுவா

தடுப்புச்சுவர்கள் வரலாற்றுக்காலத்தில் மன்னர்களால் மேற்கொள்ளப்பட்ட ஒருவகைப் போர் உபாயமாக இருந்தது. ஆனால் விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியின் பின்பும் தடுப்புச்சுவர்களுக்கு முக்கியத்துவம் குறையவில்லை என்பதை இஸ்ரேல்- பலஸ்தீன தடுப்புச்சுவர் எடுத்துக்காட்டுகிறது. இஸ்ரேல் பலஸ்தீனர்களின் தற்கொலைத் தாக்குதலைத் தடுப்பதற்கு தடுப்புச் சுவர்களை எழுப்புவதாகவும், அதனால் தாக்குதல்களின் அளவு கட்டுப் படுத்தப்பட்டுவிட்டதென இஸ்ரேல் கூறுகின்றது. ஆனால் இஸ்ரேலின் இந்நடவடிக்கையினால் பலஸ்தீன மக்களின் இயல்பு வாழ்க்கை ஸ்தம்

**ஐங்கரன்**

பிதம் அடைவதுடன் எதிர்கால சந்ததியினரின் வளர்ச்சி முற்றாகப் பாதித்துள்ளதென்றே கூறலாம். ஆனால், இதனால் தற்கொலைத் தாக்குதல்களை நிறுத்தலாம் என்பதைவிட பலஸ்தீனர்களின் முழுமையான இருப்பையும் தகர்த்துவிடலாமென ஷரோன் அரசாங்கம் கருதுகிறது. தடுப்புச்சுவரால் வேலைவாய்ப்பு, பொருளாதாரம், கல்வி என்பன முற்றாகப் பாதிப்படைகின்றன. தற்பொழுது மேற்குக்கரையில் இஸ்ரேல் மேற்கொண்டுவரும் 33 கிலோ மீற்றர் தடுப்புச்சுவரினால் பலஸ்தீனர் தரப்பில் 45 ஆயிரம் பேர் நேரடியாகப் பாதிக்கப்படுகின்றனர். இதனால் பலஸ்தீனரது போராட்டத்தை அழித்துவிடலாமென்பதே இஸ்ரேலின் நோக்கமாகும். பல நெருக்கடிகளை கொடுத்தபோது பலஸ்தீனர்கள் தொடர்ந்தும் போராடுவதுடன் இன பாரம்பரியத்தை பாதுகாத்து வருகின்றது. எனவே தடுப்புச்சுவர் நீண்டகால அரசியல் நோக்கங்களைக் கொண்டது. வேலைவாய்ப்பும், பொருளாதாரமும் கிடைக்காத நிலையில் பலஸ்தீனர்கள் இடம்பெயரவேண்டிய அபாயமும் ஏற்பட வாய்ப்புண்டு. ஆனால் தற்கொலைத் தாக்குதலை நிறுத்துவதென்பதை பலஸ்தீனத்தீவிரவாதிகளே முறியடித்துவிட்டனர். 350 மீற்றர் சுரங்கப்பாதையை அமைத்து இஸ்ரேலிய நிலைகள் மீது பலஸ்தீனர்கள் தாக்கியுள்ளனர். இம்மாதிரியைப் பயன்படுத்துபவர்களாயின் அதிக பாதிப்பினை இஸ்ரேலியரே எதிர்கொள்ளவேண்டிய நிலை ஏற்படும்.

ஆனால் இஸ்ரேல் நீதிமன்றம் இத்தகைய தடுப்புச்சுவர் அமைப்பதற்கான தடையைப் பிறப்பித்துள்ளது. முற்றிலும் மாறுபட்ட தீர்ப்பு என்பதுடன் இதன்படி அமைக்கப்பட்ட வீதித்தடையை அகற்றுமாறும் பணித்துள்ளது. இதனால் பலஸ்தீன மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பதாகவும் உடனடியான வீதித்தடையை நீக்குமாறும் அந் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இது இஸ்ரேலின் வரலாற்றில் ஏற்பட்ட முதல் அம்சமாகும். ஆனால் இதற்கொரு அரசியல் பக்கமும் யதார்த்தமாக இருந்திருக்க வாய்ப்புண்டு. ஷரோன் அரசாங்கத்தின் தவறான நடத்தையாக நீதி மன்றம் கருதுவதுடன் நீதிமன்றங்களின் முடிவுகளை ஏற்கமுடியாது என ஷரோன் கூறும் தகவலும் முன் பின் முரண்பாடான அரசியலைத் நகர்த்துவதாகக்கூட அமையவாய்ப்புண்டு.

### சூடானில் புதிய கிளர்ச்சி

சூடானின் தெற்குப்பிராந்திய அரசியல் சுயாட்சித்திட்டத்தின் மூலம் தீர்வுகாணப்பட்ட நிலை-முழுமையான நீடிப்பைப் பெறமுன்பு மேற்குப்பிராந்தியம் சர்ச்சையை ஆரம்பித்துவிட்டது. மதரீதியான பிணக்கு சுமூகமடைய இனரீதியான பிணக்கு தொடங்கியதாகவே கூற முடியும். சூடானின் யர்வூர் பிரதேசத்தில் இஸ்லாமிய அரசுக்கும் அரபு தீவிரவாதத்துக்கு எதிராகக் கறுப்பின பழங்குடிகளின் ஆயுதப்போராட்டம் ஆரம்பமானது. அரபு தீவிரவாதத்தை ஊக்குவிக்கும் சூடான் அரசு பிரச்சினையை தீர்க்கமுடியாது நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. இப்போரினால் 10ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டதுடன் 20 லட்சம் பேர் வரை இடம்பெயர்ந்துள்ளனர்.

இப்பிரச்சினையின் தீவிரத் தன்மையால் ஐக்கிய நாடுகளின் செயலாளர், மற்றும் அமெரிக்க வெளிவிவகாரச் செயலாளர் ஆகியோர் நேரடியாக விஜயம் செய்துள்ளனர். நிலைமைகளை நேரடியாகப் பார்வையிட்டதுடன், தாக்குதல்களை உடனடியாக நிறுத்துமாறு சம்பந்தப்பட்ட தரப்புக்களை பணித்ததுடன், கொலின் பவல் சூடான் அரசை நேரடியாக விமர்சித்திருந்தார். கொலின் பவலின் எச்சரிக்கையையும் கொபி அனானின் பணிப்பினைத் தொடர்ந்து சூடான அரசு ஐ.நா.சபையின் பாதுகாப்புச் சபையிடம் பிரச்சினையை ஒப்படைத்துவிட்டது. தற்பொழுது பாதுகாப்புச் சபை சூடான் விடயம் பற்றி தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளது.

அரசியல் ரீதியில் சூடான் அரசு தப்பிப்பிழைத்துவிட்டது. போராட்டத்தை அடக்கமுடியும் என்பதுடன் அமெரிக்காவிற்கு விசுவாசமான அரசு என்ற நம்பிகையை அதிபர் அல்-பஷீர் பெற்றுள்ளார். ஒருவகையில் கூறுவதாயின்: சூடான் அரசு அமெரிக்காவிடம் சரணடைந்துவிட்டதென்றே கூறலாம். சூடானின் அமைவிடம் முக்கியம் பெறுவதுடன் அதன் வளமும் ஆபிரிக்கக் கண்டத்தின் அரசியலையும் அமெரிக்கா கையாளும் நோக்கத்துடனேயே அதன் அணுகுமுறைகளை பின்பற்றிவருகிறது. ஆபிரிக்கக் கண்டத்தை சுரண்டுவதுடன் அதன் எழுச்சியைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் அமெரிக்கா அக்கறையுடையதென்பதே அதன் அக்கறைக்கு இன்னோர் காரணமாகும். எனவே பர்வூர் பிராந்திய மக்களின் அரசியல் முனைப்பு சரியாக ஒழுங்கமைக்கப்படாத நிலையில் அமெரிக்கா தலையீடு ஆபத்துமிக்கதாகவே அமையலாம். கடந்த ஒருவருட வளர்ச்சி நிலை அம்மக்களது- போராட்ட வளர்ச்சியையோ எழுச்சியையோ சாத்தியப்படுத்திவிடாது.

சூடானின் அரசியல் கொதிநிலையில் பேணப்படுவதே அமெரிக்க ஆட்சியாளரின் நோக்கமாகும்!.

அதனால் அப்பிராந்தியம் இலகுவாகவும் வாய்ப்பான அணுகுமுறைக்கூடாகவும் கண்காணிக்கப்படும் என்பதுடன் ஆபத்து மிக்க சக்திகளை முறியடித்துவிடலாம் என்ற நோக்கிலும் கையாளப்பட்டுவருகின்றது. சூடான் அரசியல் சூழல் சர்வதேச பரிமாணத்தை அடைந்து வருகிறது.

எனவே ஆப்கான் முதல் சூடானவரை சிறிய அரசியல் பரிமாணங்களும் சர்வதேசத்தில் மாற்றத்தையும், தாக்கத்தையும் நிகழ்த்திவருகின்றன. பாதுகாப்பற்ற அரசியல் இருப்புக்களை சிறுபான்மை இனங்கள் கொண்டிருந்தாலும் தனித்துவமான பரிமாணத்தை உலகிற்குக் காட்ட அவை தவறுவதில்லை. அரசுகளுக்கும்- வல்ல ரசுகளுக்குமான உலகத்தை சிறுபான்மை இனங்களின் தீவிரவாத அணுகுமுறைகள் மாற்றியுள்ளன. இத்தீவிரவாத அணுகுமுறைகளுக்கான போக்குக்கு தீர்வு காணுவதே அரசுக ளுக்கும் - வல்லரசுகளுக்குமான பிரச்சினையாக மாறியுள்ளது. தீர்வற்ற முரண்பாடுகள் நீடிக்கின்றன. நிலையான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. இது வல்லரசு வாதத்திற்கு அச்சுறுத்தலான அம்சம் என்பதே தற்போதைக்கு கூறக்கூடிய விடயமாகும்.

### அவளை ஏற்றுக்கொள்



பெண்:- அப்பா இவர்தான் நெடுக என்னை விரும்புறன் எண்டு பின்னால திரியிறார்.

தந்தை:- சரி தம்பி முன்னால வாரும். அவளை ஏற்றுக் கொள்ளும்....... அ....எங்க ஓடுறீர்...

# நேர்நோக்கு

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி பதவியேற்று 3மாதங்கள் கடந்து விட்டநிலையிலும் அது தனது கொள்கைப் பிரகடனத்தை நாடாளுமன்றத்தில் வெளியிடவில்லை. வெளியிடக்கூடிய நிலையிலும் அது இப்போது இல்லை. உண்மையில் நாடாளுமன்றத்தை விரைவில் கூட்டி தனது பெரும்பான்மைப் பலத்தை நிரூபித்து, ஆட் சிச் சக்கரம் இலகுவாகச் சுழலவழிவகுக்கவேண்டிய

முன்னர் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்துக்கு அஞ்சி சமாதான முயற்சிகளைத் தாமதப்படுத்துவதாக சிலர் கூறினர். இப்பொழுது நிறைவேற்று அதிகாரம்கொண்டுள்ள சனாதிபதி சந்திரிகா ஜே.வி.பி. யினால் தனது நாடாளுமன்ற அதிகாரம் பறிபோய்விடுமோ என்ற அச்ச நிலையில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

எவ்வாறாயினும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க

## சகதிக்குள் சிறிலங்கா அரச இயந்திரம்



ஆட்சியாளர்கள் நாடாளுமன்றத்தை முன் கூட்டிக் கூட்டுவதற்கு எதிர்க் கட்சிகள் முயல்வதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது இன்னமும் அவர்கள் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவைப் பெறவில்லை என்பதை வெட்ட வெளிச்சமாக்குகிறது.

சனாதிபதிசந்திரிகா குமாரதுங்க எந்த ஒரு வாக்குறுதியை நிறைவேற்றவும் சரி, அல்லது தனது திட்டத்தைச் செயற்படுத்தவும் சரி மிகக் குறுகிய காலக் கெடுவை விதிப்பது வழமை. முன்னர் யுத்தம் நடத்திய வேளையிலும் "புலிகளை ஒழிக்க" மிகக்குறுகிய காலக் கெடுக்களை விதித்து அவற்றிலே தோல்வி கண்டார். சனாதிபதி முறையை நீக்க 6 மாதங்கள் காலக்கெடுவுடன் வாக்குறுதி வழங்கினார்.

இப்பொழுது வழங்கப்பட்ட தேர்தல் வாக்குறுதிகளுக்கும் குறுகிய காலக்கெடுக்களே வழங்கப்பட்டன. அத்தோடு,

நிறைவேற்றுஅதிகாரம் கொண்ட சனாதிபதி முறையை ஒழித்து அதே அதிகாரம் கொண்ட பிரதமராகத் தான் வருவதற்கு மூன்று மாதகாலக் கெடுவிதித்து திட்டமொன்றைத் தீட்டியிருந்ததாகவும் தகவல்கள் கூறுகின்றன.

ஆனால் அவரது இந்த மூன்று மாத ஆட் சிக் காலத்தில் சாதிக்கப்பட்டதென்று கூறிக்கொள்ள எதுவுமே இல்லை. ஐக்கிய தேசிய முன்னணியின் இரண்டாண்டு காலம்-. தேர்தல் காலம்- ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியின் மூன்று மாத காலம் என்பன மக்களை அரசியலிலிருந்து ஒதுங்கும் நிலைக்குத்தள்ளியுள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சிக்காலத்தில் அபிவிருத்தி இன்மை அல்லது வறியமக்களின் வாழ்வு மேம்படாமையே அதன் தோல்விக்குக் காரணமாக அமைந்ததாக விமர்சகர்கள் கூறுகின்றனர். ஐ.தே.மு. விற்கு இருந்த சாதக நிலைமை சமாதான முயற்சிகளாகும். சமாதானம் நிலவுவதால் அத்துடன் சமாதான சூழல் நீடிக்கும் என்ற நம்பிக்கை ஏற்படுதல் என்பது அபிவிருத்திக்கு இன்றியமையாததாகும். ஐக்கிய தேசியக் கட்சி சமாதான சூழலை உருவாக்குவதில் எடுத்தகரிசனையை அது நீடித்து நிலைத்த சமாதானத்துக்கு வழிவகுக்கும் என்ற நம்பிக்கையை உருவாக்குவதில் காட்டியிருக்குமாயின் ஏழை மக்களின் வாழ்வு மேம்பட்டிருக்கும் என்பதுடன் அது தோல்வியடைந்திருக்கவும் மாட்டாது.

தான் உருவாக்கிய சமாதான சூழல்தான் தனக்குப் பலம் என நன்றாக உணர்ந்திருந்த ஐ.தே. முன்னணி அதனை மேலும் வலுப்படுத்த இதயசுத்தியுடன் முயலாமையே அதன் தோல்விக்குக் காரண்மாக அமைந்தது.

இப்பொழுது சந்திரிகா அம்மையாரும் சமதானம் பற்றிப் பேசினாலும் அதனைத் தக்கவைக்கும் முயற்சிகளில் ஈடுபடுவதாகத் தெரியவில்லை. ஐ.தே. முன்னணி ஆட்சிக் காலத்தில் மக்களுக்கு சமாதானம் குறித்து இருந்த நம்பிக்கையிலும் இப்பொழுது குறைவடைந்த நிலையே காணப்படுகிறது.

தொடர்ச்சியாக ஆறுவருடங்களுக்கு மேலாக நடத்திய கொடூர யுத்தத்தால் சீரழிந்த பொருளாதாரம் சீரடைவதற்கான பாதையில் இந்த இரு வேறு அதிகாரங்களுக்கும் இடையேயான சிக்கல் மிக மோசமான தடைக்கல்லாக இருந்து வருவது வெளிப்படை.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதன் மூலம் தோன்றும் அமைதிநிலை, வெளிநாட்டு நிதி உதவி என்பவற்றின் மூலம் ஆட்சியை சுமுகமானமுறையில் நடத்த முயற்சித்தது. பொருளாதார நிலையில் சிறிய மறுமலர்ச்சியும் ஏற்பட்டது. சமாதான முயற்சிகள் மந்தகதியில் இருந்தாலும் அது குறித்த நம்பிக்கைகள் சர்வதேச ரீதியில் ஏற்பட்டிருந்தது. ஆனால் ஜே.வி.பி. யுடன் இணைந்து சந்திரிகா அம்மையார் அமைத்துள்ள ஆட்சியானது அந்த நம்பிக்கையையும் தகர்த்துள்ளமையால் பொருளாதார ரீதியான நம்பிக்கைகளும் சிதைவடைந்திருக்கின்றன.

இப்பொழுது மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க மாகாணசபைத் தேர்தல் முடிவுகளையே நம்பியிருக்கிறது. அதாவது பலமற்ற ஓர் ஆட்சியுடன் இணைந்துகொள்ளத் தயக்கம் காட்டும் இ.தொ.கா போன்ற கட்சிகள் தம்முடன் இணைந்துகொள்ள மாகாண சபைத் தேர்தல் வெற்றிக்கு வழிவகுக்கும் என அது நம்புகிறது. இதன் மூலம் தனது ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ளவும் முயல்கிறது.

இந்த முயற்சியில் இவ்வாறாக இல்லாவிடினும் வேறெந்த வழியாவது வெற்றி பெற்றாலும் சனாதிபதி சந்திரிகாவைப் பொறுத்து தனிப்பட்ட முறையில் ஒரு பெரிய காரியத்தைச் சாதிக்கவேண்டிய தேவை உள்ளது.

அதாவது அவரது பதவிக்காலம் முடிவடைய முன்னர், தற்போதைய அரசியலமைப்பை மாற்றியமைக்க வேண்டிய தேவை அவருக்கு உள்ளது. எப்பொழுது அவரது பதவிக்காலம் முடிவடையும் என்ற சர்ச்சை எழுந்து அடங்கியுள்ள போதும் அது முடிவுக்கு வந்துவிட்டதாகக் கருதிவிட முடியாது. ஏனெனில் பதவியைத் தக்கவைத்துக்கொள்ள அரசியலமைப்பு ரீதியான இந்த விவகாரத்தை அவர் பயன்படுத்தவும் கூடும். இதனால் குழப்பங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

அடுத்ததாகத் தொடர்ந்தும் தேர்தலில் போட்டியிட்டு பதவியைப் பிடித்துக் கொள்ளும் அவரது ஆசையும் அரசியலமைப்பு ரீதியாகக் குழப்பங்களை ஏற்படுத்தக் காத்திருக்கிறது.

சாதாரண பெரும்பான்மையே இல்லாத ஒரு அரசாங்கத்தை வைத்துக்கொண்டு மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற வேண்டிய ஒரு விடயத்துக்கு மூன்றுமாதகாலக் கெடுவுடன் சந்திரிகா திட்டம் தீட்டியிருக்கிறார்.

இது அவர் சூழ்ச்சிகரமான நடவடிக்கை ஒன்றுக்கு தயாராகிவருகின்றமையையே வெளிப்படுத்துகிறது.

அதாவது ஓர் அரசியல் நிர்ணய சபையை உருவாக்கி அதன் தீர்மானங்களை நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றி அதனை அரசியலமைப்பாக்கிக்கொள்ள அவர் தனக்கு இப்பொழுதிருக்கும் அதிகாரங்களைப் பயன்படுத்திக்கொள்ளத் திட்டமிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இதனை நிறைவேற்று அதிகாரம்கொண்ட சனாதிபதி பதவிக்குக் குறிவைத்திருக்கும் ரணில்விக்கிரமசிங்கவும் ஐக்கிய தேசியக் கட்சியினரும் எவ்வளவு தூரம் அனுமதிப்பார்கள் என்ற கேள்வியும் எழுகிறது. சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க திட்டமிட்டிருந்த மூன்று மாத காலக்கெடு முடிவடைந்திருக்கலாம் அதற்குள் அவரால நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையைப் பெற முடியா திருந்திருக்கலாம். ஆனால் அவர் தன்னுடைய திட்டத்தைக் கைவிட்டு விட்டார் என நம்பமுடியாது.

இந்த விவகாரத்தால் ஏற்படப்போகும் குழப்பங்கள் சிறிலங்கா அரசியலில் பல சிக்கல்களை ஏற்படுத்தும் என்பது வெளிப்படையாகும். எனவே சகதிக்குள் சிக்கிக் கொண்டுள்ள சிறிலங்காவின் அரச இயந்திரம் மீள்வதற்கான வழிகள் எதுவும் தென்படவில்லை. மேலும் மோசமடைவதற்கான அறிகுறிகளே தென்படுகிறது.

இந்தச் சந்தடியில் சிறிலங்காவிலுள்ள ஏழை மக்களின் பாதிப்பு சமாதான நடவடிக்கைகள் கவனிப்பாரற்ற நிலைக்குச் செல்லவே வாய்ப்பு அதிகம்.

**வேலவன்**

இலங்கையில் அடிக்கடி பாதிப்புக்குள்ளாகிவரும் நீர் மின்சார வழங்கலை சீர்செய்யக்கூடிய நிலையில் அரசு இல்லாத நிலையில் அனலமின் நிலையம் அமைப்பது தொடர்பாக அரசின் கவனம் திருமபியது.

ஏற்கனவே இந்த அனல்மின் நிலையம் அமைப்பது தொடர்பாக ஆய்வுகள் இலங்கையின் பல பாகங்களிலும் மேற்கொள்ளப்பட்டது.

இந்த அனல்மின் நிலைய அமைப்புக்கான ஆய்வுக்கான நிதி உதவியினை ஜப்பானிய அரசு சிறிலங்கா அரசிற்கு வழங்கியிருந்ததுடன் அனல்மின் நிலையம் அமைக்கப்படுமாயின் அதற்கான நிதி வழங்கலையும் ஜப்பானிய அரசு வழங்கவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது இப்படியிருக்க இந்த அனல்மின் நிலையம் அமைப்பதற்காகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் இடம் தமிழர் தாயகத்தின் மன்னார் மாவட்டத்தின் நுரைச்சோலைக் கிராமமாகும்.

இந்தத் நுரைச்சோலை கிராமத்தின் மக்கள் மீனவத்தொழிலை நம்பி வாழ்க்கை நடாத்திவருகின்றனர் இங்கு அனல்மின்நிலையம் அமைக்கப்படுமாயின் இங்கிருந்து நுரைச்சோலை மக்கள் அகற்றப் படப்போவதுடன். இங்கு அமைக்கப்படும் அனல்மின் நிலையத்தினால் சுற்றுச்சூழல் பெரும் பாதிப்புக்குள்ளாகப்போகிறது.

ஏற்கனவே நுரைச்சோலை மக்களின் கடும் எதிர்ப்புக்குள்ளான இந்த திட்டத்திற்கு மீள்வடிவம்கொடுக்கப் புதிய அரசு திட்டமிடுகிறது.

இதற்கான தற்போதைய நடவடிக்கைகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இங்கு நாம் கவனத்தில்கொள்ள வேண்டியது, வளம்மிக்க தமிழர் தாயகப்பிரதேசங்கள் வேகமாக ஒப்பந்தங்கள் என்ற அடிப்படையிலும், தனியார்மயமாக்கலின் கீழ் அந்நிய நிறுவனங்களிற்கு வழங்குதல் என்ற அடிப்படையிலும் ஒப்படைக்கப்படுவதற்கான முயற்சியில் சிறிலங்கா அரசு கவனம்செலுத்தி வருகிறது.

திருகோணமலைமுதல் மன்னார்வரை அரசு இந்தச் செயற்பாடுகளில் ஈடுபடுகிறது என்பதே முக்கியத்துவம் பெறுகிறது.

முன்னர் திருகோணமலையில் எண்ணெய்க்குதங்களைநூறு ஆண்டுகால குத்தகை என்ற அடிப்படையில் இந்திய அரசுக்கு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மக்களின் எதிர்ப்புக்குள்ளாகும் மன்னார் அனல் மின் நிலையம்




இது இப்படியிருக்க மன்னாரில் அனல்மின்நிலையம் அமைப்பு என்ற பெயரில் இப்போது அரசின் கவனம் திரும்பியிருக்கிறது.

இதனைவிட மன்னாரின் கடற்படுக்கையில் காணப்படுவதாகக் கூறப்படும் எண்ணெய்க்கசிவுகளையடுத்து அங்கு எண்ணெய் ஆய்வும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆக மன்னார் மாவட்டம், அரசின் முக்கிய கவனத்தை ஈர்ப்பதாக உள்ளது. இது இந்து சமுத்திரப்பிராந்தியத்தில் இலங்கை எவ் வளவு முக்கியத்துவம்மிக்க பூகோள பிராந்தியத்தில் காணப்படுகிறதோ, அதனால் இலங்கையின் திசையில் மேற்குலகநாடுகளின் கவனம் திருப்பப்பட்டுள்ளதோ, அதன் இன்னொரு வடிவமாக மன்னார் மாவட்டத்தின் பூகோளஅமைவு முக்கியம் பெறுகிறது போலத்தெரிகிறது.

ஏற்கெனவே சிறிலங்கா அரசின் கொத்மலை நீர்த்தேக்கம் சர்ச்சைக்குள்ளாகி மலையக மக்களின் கடும் எதிர்ப்புக்குள்ளாகியிருக்கும் நிலையில இப்போது மன்னாரிலிருந்து மின்சார வழங்கலை மேற்கொள்ள அரசு திட்டமிடுகிறது.

தமிழர் தாயகப் பிரதேசத்தில் இதற்கு எத்தகைய எதிர்ப்புக்கள் தோன்றினாலும் அது எவ்வளவு விளைவுகளை சந்தித்தாலும் இங்கிருந்து தென்பகுதி மக்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கான வழியைத் தேடுவதிலேயே அரசு கவனத்தைச் செலுத்துவதாக உள்ளது.

அத்துடன் நுரைச்சோலையில் அமைக்கப்படும் அனல்மின் நிலையத்தினூடாகப் பெரும் வருமானத்தை அரசு ஈட்டிக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இலங்கையில் அதாவது தென்பகுதியில் பெருமளவு அந்நிய முதலீட்டாளர்களைக் கவர்ந்து இழுக்க முடியும் எனவும் அரசு எண்ணுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.


போரினால் பாதிக்கப்பட்ட தமிழீ மக்களிற்கான வாழ்வாதாரங்களை வழங்குவதிலோ அவர்கள் தமது பொருளாதார பலத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்கே தேவையான நடவடிக்கைகளை எடுக்காத அரசு மன்னாரில் இந்த அனல் மின் நிலையம் அமைப்பதில் கவனம் செலுத்துவது எந்த அடிபபடையிலானதாக இருக்கமுடியும்.

ஏற்கெனவே மன்னார் மாவட்டத்தை இலங்கையின் சோமாலியா என வர்ணிக்கும் அளவுக்கு அந்த மாவட்டத்தின் அவலநிலை காணப்படுகிறது.

அரசு தமிழ் மக்களுக்குரிய நிரந்தர சமாதானமும்....வாழ்வும் எட்டாத நிலையில் நிலவும் சமாதானக் காலத்தை பயன்படுத்தி நீண்டகால அடிப்படையில் தமிழர் தாயகத்தில் பல்வேறு குழப்பங்களையும் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளுக்குமான காலமாகப்பயன்படுத்திவரும் இக்காலத்தில் மன்னார் நுரைச்சோலை அனல் மின் நிலைய விவகாரத்தையும் கையாள முனைகிறதுபோல் உள்ளது.

**நக்கீரர்**

### காதலிக்கத் தயார்



ஒருவர்:- என்ன ராசன் விழுந்து விழுந்து காதலிச்சாய் இப்ப அவளின்ர வீட்டுப்பக்கமும் போறதில்லையாம்.

ராசன்:- காதலிக்க நான் இப்பவும் தயார்தான் அவள் கலியாணம் செய்வம் எண்டுறாள் அதுதான்.

திரிவிடபலய - இராணுவம் ஊர்காவற்துறை ஊருண்டி முனையிலிருந்து பருத்தியடைப்பு, ஊர்காவற்துறை, கரம்பொன், நாரந்தனை, சரவணை கிராமங்கள் வழி நரபலிவேட்டையாடியவாறு அராலித்துறைச் சந்தியை கால்நாள் அளவில் வந்தடைந்தது.

அராலிச்சந்தியிலிருந்து- கரையோர யாழ்ப்பாணத்துக்கான சாலை வெட்டைவெளியானது. யாழ்ப்பாணக்கரையிலிருந்து பார்த்தால் தெரியக்கூடிய அப்பட்டமான வெளி.

இதன் காரணத்தால் அராலிச்சந்தியை வந்தடைந்த சிங்களப் படைகள் மீளவும் மக்களின் குடியிருப்புக்களூடாக நகர்வதற்காக அராலிச் சந்தியிலிருந்து தெற்காக வங்களாவடிக்கு அண்மையான குடியிருப்புக்களை நோக்கி நகர்ந்தன.

முன் குறிப்பிட்ட ஊர்களில் கா(ல்)நாள் நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட நரபலிவேட்டையில் பால்- வயது வேறுபாடின்றி 79 அப்பாவிமக்கள் படுகொலைசெய்யப்பட்டனர்.

மீளவும் அடுத்த நரபலிவேட்டைக்காகப் படைகள் அந்தத் தீவின் தெற்குக் கரையோரக்கிராமங்களை நோக்கி நகரத்தொடங்கின. ஏற்கனவே படைநகர்வினால் அச்சமுற்ற மக்கள் வேலணையின் சாட்டி,

# ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்...

04



(படம்:- திரு)

மண்கும்பான், அல்லைப்பிட்டி மக்கள் தேவாலயங்களில் தஞ்சமடைந்திருந்தனர். சாட்டியில் புகழ்பெற்ற யாத்திரைத் தேவாலயமான சிந்தாதிரை மாதாகோவில், முஸ்லிம் பள்ளிவாசல், அல்லைப்பிட்டி தேவாலயம் என்பவற்றிலேயே ஆயிரக்கணக்கில் மக்கள் தஞ்சமடைந்திருந்தனர். ஆனால் அப்பகுதிக்குச் சிங்களப் படைகள் வரும் என மக்கள் எதிர்பார்க்கவில்லை. மண்டைதீவிலிருந்தும் மக்கள் அங்கு படையினர் வருவர் என எதிர்பார்த்து உடமைகள் எதனையும் எடுக்காது தெற்குப்புற கரையோர வழியாக அல்லைப்பிட்டிக்கு வந்துகொண்டிருந்தனர். படையினர் வடக்குக் கரையோர பிரதான சாலை வழியாக வருவார்கள் எனக்கருதியே மக்கள் தெற்குப் புறத்தில் வேலணைத்தீவுக்கும் - மண்டைதீவுக்கும் இடையேயான கண்ணாக் காட்டுப்பற்றைகளூடான கடல் நீர் வற்றிய கரையோரமாக நடந்து அல்லைப்பிட்டியை நோக்கி வந்துகொண்டிருந்தனர். வெறும் கையுடன் இந்த இடப்பெயர்வு நிகழ்ந்தது.

சிங்களப்படைகள் அராலித்துறைச் சந்தியிலிருந்து தெற்காக நகர்ந்து மக்கள் குடியிருப்புள் ஊடுருவிக் கிழக்காக மண்டைதீவு நோக்கி நகரத்தொடங்கின. இதன் முதல்இரையாக ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டிருந்த சாட்டி மாதா கோவிலை முற்றுகையிட்டன.

இந்த முற்றுகையின் போது படையினர் மக்களை தம் முன் நிறுத்தினர். நிறுத்தி பெண்களைத் தனியாக்கினர்- ஆண்களைத் தனியாக்கினர். தனியாக்கிய ஆண்களை வயது வகை(யின)ர்களாகப் பிரிக்கத்தொடங்கினர்.

14 வயதுக்குட்பட்டவர்கள் தனியாக, 14 வயது முதல் 30 வரையானோர் தனியாக, 30முதல் 45 வயது வரையானோர் தனியாக, வயோதிபர்கள் தனியாக பிரிக்கப்பட்டனர். இவர்களில் 14-30, 30-45 வயது வரையானோரில் திடகாத்திர தோற்றம் கொண்டவர்கள் படையினரால் தெரிவுசெய்யப்பட்டனர்.

இவர்கள் தனியாகப் படையினரால் பிடித்துச் செல்லப்பட்டனர். உறவுகள் கதறி அழ விடாப்பிடியாக சுமார் 100 வரையானோர் படைகளால் பிடிக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டனர். இந்தப் பிடித்துச் செல்லல் அவர்களை கேடயமாகப்பயன்படுத்துவதாகும். பிடிக்கப்பட்டவர்கள் முன்னால் ஒரு சிறிய இராணுவ அணி செல்ல அதன் பின் பிடிக்கப்பட்ட ஆண்கள் செல்ல அவர்களின் பின்னால் பெரும் இராணுவ அணி சாட்டி பள்ளிவாசல் நோக்கி நகரத்தொடங்கியது.

பள்ளிவாசலில் முஸ்லிம்களும் - அவர்தம் தமிழ் நண்பர்களும் அடைக்கலம் புகுந்திருந்தனர். படையினர் வரவு கண்டு முஸ்லிம்கள் பள்ளிவாசல் கதவை மூடிவிட்டனர். படையினர் பள்ளிவாசலுக்குள் செல்ல முயல முஸ்லிம்கள் கதவை திறக்க மறுத்தனர். வன்மையை பயன்படுத்தி படையினர் பள்ளிவாசலுள் நுழையாமல் மண்கும்பான் அல்லைப்பிட்டி நோக்கி நகரத் தொடங்கினர்.

படையினரின் வரவறிந்து மண்கும்பான், அல்லைப்பிட்டி மக்கள ஒன்றாகி அல்லைப்பிட்டி தேவாலயத்தில் ஒன்று திரண்டனர் நடக்கப் போவது அறியாது.

துருவன்

## அன்பு



**ஒருவர்:-** அன்பு எங்கே வாழ்கிறது.

**மற்றவர்:-** கடிதத்தில். கோபத்தோடு எழுதினாலும் அன்புள்ள என்று தானே ஆரம்பிக்கிறோம்.

## தொல்லியல்

# மல்லாவியில் கண்டெடுக்கப்பட்ட தொன்மைக்கால சுடுமண் சிற்பங்கள்

வன்னியின் துணுக்காய் மல்லாவியில் தொல்கால சுடுமண் சிற்பங்கள் உட்பட சுடுமண் தொல்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மல்லாவியின்



வயற்பகுதி ஒன்றில் வரம்புப் பாதை துப்புரவுசெய்யப்பட்டுக்கொண்டிருக்கையில் சுடுமண் சிற்பங்கள், மக்களால் கண்டெடுக்கப்பட்டன.

பாதை துப்புரவுப் பணியின்போது மண்வெட்டிகளால் பொருட்கள் உடைபட்டுமுள்ளன.

இருந்தும் அப்பொருட்கள் அப்பகுதி மக்களின் விழிப்புணர்வு மிக்க செயற்பாடுகளால் தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் அவர்களிடம் கையளிக்கப்பட்டன.

இந்தச் சுடுமண் சிற்பங்கள் பெண் உருவங்களாக உள்ளன. அங்கு



5 மனித உருவங்கள் இது வரை எடுக்கப்பட்டுள்ளன. ஒன்றின தலைப்பகுதி மட்டும் கிடைத்தது. மற்றொன்று தலை முதல் இடுப்புவரையான பகுதியுடன் கிடைத்திருக்கிறது, இன்னொன்று தலைமுதல் அடிவரையும், மற்றொன்று தலைமுதல் மார்புவரையும், வேறொன்று முண்டமாகவும் கிடைத்துள்ளன.

இதைவிட இரு குடவடிவ மட்கலங்களும் கிடைத்துளளன. இவற்றில் ஒவ்வொன்றிலும் 3 திசைகளில் துளைகள் காணப்படுகின்றன. அத்துடன் இதற்குரிய மூடிகளாக கருதப்படுவையும் எடுக்கப்பட்டுள்ளன.

இவற்றைவிட சிதைந்த ஏராளமான ஓடுகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன.

இவ்விடம மேலும் அகழ்வுசெய்யப்படின் ஏராளமான சான்றுகள் கிடைக்கலாம்.

இதற்கு முன் மிகத் தொன்மையான சுடுமண் சிற்பங்கள் மிக நேர்த்தியான கலை நயத்துடன் கிளிநொச்சி ஆனைவிழுந்தான் காட்டுப் பகுதியில் எடுக்கப்பட்டிருந்தன.

ஆனைவிழுந்தான் சுடுமண் சிற்பங்களைவிட இவை நேர்த்தி குறைந்தவையாக உள்ளன.

அத்துடன் மேலும் ஆனைவிழுந்தான் சுடுமண் சிற்ப முகங்களுக்கும் மல்லாவி சுடுமண் சிற்ப முகங்களுக்கும் இடையே அதிகளவிலான வேறுபாடுகள் உள்ளன. 1960களில் கிளிநொச்சி உருத்திரபுரத்தில் சிறிலங்கா தொல்லியல் ஆணையாளர் கலாநிதி S.U. தெரனியகலை சுடுமண் சிற்பங்களைக் கண்டெடுத்தார்.

இவையுடன் ஒத்தவையாக ஆனைவிழுந்தான் சிற்பங்கள் இருக்கின்றன.

மல்லாவி சிற்பங்கள் இவற்றிலிருந்து வேறுபட்டு உள்ளன. உருத்திரபுர சிற்பங்கள் 2000 ஆண்டுகளிற்கு முற்பட்டவை என S.U.தெரனியகலை தெரிவித்திருந்தார். இவற்றை



விட கிளிநொச்சி உருத்திரபுரத்தில் எடுக்கப்பட்ட சுடுமண் சிற்பங்கள் வவுனியா நகர சிறிலங்கா தொல்பொருட்கலைச்சாலையில் உள்ளன. தமிழர்களின் மிகத்தொன்மையான கலை





(படங்கள்:- திரு)

வடிவங்கள் சுடுமண் ஆக்கங்களிலேயே உள்ளன.

சிந்துவெளி முதல் தமிழகம் ஆதிச்ச நல்லூர் வரை தமிழர் தாயகத்தில் வன்னியில் தமிழரின் தொன்மை சொந்தக்கலைச் சான்றுகளாக சுடுமண் சிற்பங்களே உள்ளன.

தமிழரிடம் கற்சிறபம் உருவானபோது அதில் அந்நியக் கலப்புகள் வந்து விட்டன.

சுடுமண் சிற்பக் கலைகள் தமிழரின் கிராமியத் தெய்வங்களுக்குரியவையே தவிர ஆரியக் கடவுளருடைய வையல்ல.

இதன் மூலம் சுடுமண் சிற்பங்களின் பெறுமதியை தமிழ் மக்கள் உணர்வர்.


குரலோன்




# அறிவியலின் புதிய வருகை
# காட்சி வானொலி

காட்சி வானொலி- வானொலியில் நவீன வருகை இது. காட்சி வானொலி என்றதும் தொலைக்காட்சி என நினைத்து விடாதீர்கள் அது அப்படியல்ல.





சிங்கப்பூரில் கடந்த மாதம் நடந்த Broad Castasia 2004இல் அந்த காட்சி வானொலி அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.

இந்தக் கண்காட்சி- எக்ஸ்போ என்ற பொருளியல் கண்காட்சி நடக்கும் பெரியதொரு இராட்சத மண்டபத்தில் தான் நடந்தது. 6 மண்டபங்களைக் கொண்ட அங்கு ஒலி ஒளி கண்காட்சி 6 ஆக பிரிக்கப்பட்டிருந்தது.

இதன் 4ஆவது மண்டபம் ஒலி- ஒளி பரப்பு சாதனங்களுக்கானது, அதற்குள் உரிய அனுமதி அட்டைகளைப் பெயர்களைக் கொடுத்து உடனடியாகவே அச்சிட்டு பிளாஸ்ரிக்கில் (மீள அளிக்கக்கூடியது) பொதியிட்டு நம் ஆடையில் கொழுவித்தான் உள்நுழைய வேண்டும்.

அப்படி நுழைந்த போது அந்த அதி நவீன அறிவியல் மலைப்பினை ஏற்படுத்தியது. முதலில் நாம் பார்த்தது காட்சி வானொலி. அதனைக் கையில் வைத்து வருவோருக்கு எல்லாம் சலியாது ஆங்கிலத்தில் விளக்கமளித்துக் கொண்டிருந்தார் ஒருபெண்.

ஒரு ஆறு அங்குல அகல கையகல தொலைக்காட்சி அல்லது செல்பேசி போன்ற காட்சித்திரை கொண்டதாக காட்சி வானொலி இருந்தது. செல்பேசியை தயாரிக்கும் நொக்கியா நிறுவனம் அதனைத் தயாரித்திருந்தது. இது எப்படி எனக் கேட்டோம்.

காட்சி வானொலி என்பது- வானொலிக்குரிய அசையும் படங்களைக் கொண்டது அல்ல. வானொலி ஒலிபரப்பாகிக் கொண்டிருக்கும் வேளை- வானொலியில் நிற்கும் குரலசைவிற்குரிய அசைபடம், ஒலிபரப்பாகிக்கொண்டிருக்கும் நிகழ்ச்சி நிரல் உள்ளிட்ட விடயங்களை திரையில் காணலாம் என்றார் அவர். திரையில் தேவையான விபரக் குறிகளை கூர்முனையினால் தொட்டு அதனை இயக்கச் செய்யலாம். இது என்ன விலை என்ற கேள்வியைக் கேட்டோம். இதன் தொழில்நுட்பக் கையேடு உள்ளதா என்றோம்.

இது இப்பொழுதே முதல் தடவையாக அறிமுகம் செய்யப்படுகின்றது. இன்னமும் இது சந்தைக்கு வரவில்லை என்றார் அவர். இந்தக் காட்சி வானொலிக்கென சிறப்பு ஒலிபரப்பு உண்டா என்று மற்றொரு கேள்வியைக் கேட்டோம். அறியும் ஆவல்தான்!

நமது குடைதலை பார்த்துக் கொண்டிருந்த மூத்த தொழில்நுட்பவியலாளர் கிட்டவந்தார் தன்குறிப்பேட்டைக் கையிலெடுத்து விளக்கமளிக்கத் தொடங்கினார்.

இது ஒரு சாதாரண பண்பலை FM-ஒலி பரப்புத்தான் அப்படியானால் பண்பலையுடன் இந்தக் காட்சிகளை ஏற்றி அனுப்புதலா என்றோம். அப்படியல்ல இது ஒரு வித்தியாசமான முறை என்றார்.

பண்பலை ஒலிபரப்பு ஒன்று இதற்குரிய இணைய இணைப்பைப் பெற்று இந்தக் காட்சி வசதியைச் செய்து கொள்ளலாம் என்றார். கொஞ்சம் குழப்பமாகத்தான் இருந்தது. சந்தைக்கு வந்ததும் தான் இதனை மிகச்சரியாக விளங்கிக்கொள்ள முடியும்.

வானொலி ஒரு குருட்டு ஊடகம்- அதுதான் அதன் தனித்துவம். வானொலி குரலாளர்கள் மக்கள் முன் தோன்றக்கூடாது என்பார்கள் குருட்டு ஊடகமான வானொலியில் அதன் குரலாளர்களை கேட்போர் கற்பனை செய்து வைத்திருப்பர். நேரடி தரிசனம் அந்தக் கற்பனைத் தோற்றத்தை சிதைக்கும் அது அந்த விம்பத்தை உடைக்கும். வானொலியின் தனித்தன்மை அது. ஆனால் இந்தக்காட்சி வானொலி வரும்போது இது உடைந்து போகும். பிறகு வானொலிக் குரலாளர்கள் சினிமா கதா நாயகர்கள் போல மாற வேண்டும்.

**த.அருவி**

---




## வெயில் காலத்தில் வேனல் கட்டியா?

வெயில் காலத்தில் உடம்பில் அதிகமாக வியர்ப்பது இயல்பு. அப்போது வியர்வை எவ்வித தடங்கலுமின்றி வெளியேறிவிட்டல் பிரச்சினை இல்லை. தோலில் அழுக்கு, தூசி போன்றவை இருந்தால் அவை வியர்வைத் துவாரங்களை அடைத்துக்கொள்ளும்.

இதனால் வியர்வை வெளியேற இயலாமல் சிறு கொப்புளங்களை தோற்றுவிக்கும். இவற்றில் பக்ரீறியா கிருமிகள் தொற்றிக்கொள்ளும் போது கொப்புளங்கள் பெரிதாகும். இது வராமல் இருப்பதற்கு மட்டுமல்ல கோடைகாலத்தில் தனிமனித சுதந்திரத்திற்கு அதிக முக்கியத்துவம் தரப்படவேண்டும்

* அதிகாலையில் எழுந்து சிறிது நேரம் உடற்பயிற்சி செய்வது முக்கியம்.
* தினமும் இரண்டு முறை குளித்து உடம்பைச் சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும்.
* வெயில் காலத்தில் லேசான பருத்தி ஆடைகளையே அணிய வேண்டும்.
* போத்தல் குளிர்பானங்கள் குடிப்பதற்குப் பதிலாக இளநீர், மோர் சாப்பிடலாம்.

## மூட்டு வலிக்கான அறிகுறிகள்

மூட்டுக்கள் விறைப்பாக, குறிப்பாக விடியற்காலையில் நீட்டி, மடக்க முடியாமல் மிக விறைப்பாகக் காணப்படும்.

மூட்டுக்களில் வலி, வீக்கம், மூட்டுக்கள் பகுதியில் சிவந்து காணப்படும். எடை குறைதல், காய்ச்சல், சோம்பல், களைப்பு போன்றன ஏற்படும்.

மூட்டுவலி உள்ள இடத்தில் குறைந்தது ஆறு வாரத்திற்கும் மேலாக வீக்கம் குறையாமலிருக்கும். மூட்டு வலி ஒரு இடத்தில் இருந்து அடுத்த மூட்டுப்பகுதிகளுக்குப் பரவிக்கொண்டே இருக்கும். மூட்டுவலியின்காரணமாக தசைகளில் சக்தி குறைதல், மற்றும் தசைகள் தேய்ந்து போதல் போன்ற பிரச்சினைகள் வரலாம். மூட்டுவலி முற்றிய நிலையில் மூட்டுக்களை நீட்டி, மடக்கும் சக்தி குறைந்துவிடும். நாளடைவில் மூட்டுக்களில் உள்ள எலும்புகள் தன் இடத்திலிருந்து மாறிவிடும். மூட்டுக்களின் அசைவுகள் குறைந்து விடுவதால் சரிவர உட்கார முடியாமை எழ முடியாமை மற்றும் நடக்க முடியாமை போன்ற அறிகுறிகள் காணப்படும்.

## குழந்தை சாப்பிட மறுக்கிறதா?

குழந்தைக்கு சாப்பாடு ஊட்டுவது அம்மாக்களுக்கு அவஸ்தையான வேலை. கதை சொல்லி, பாட்டுப்பாடி, வேடிக்கை காட்டி, என்னென்னவோ செய்தும் ஒரு வேளை சாப்பாட்டைக்கூட ஒழுங்காகச் சாப்பிடாத குழந்தைகளே அதிகம். குழந்தைகளுக்குச் சாப்பாடு கொடுக்கும் போது நினைவில்கொள்ளவேண்டிய சில விசயங்கள்.

சாப்பாடு கொடுக்கிற நேரம் அமைதியானதாகச் சண்டை, சச்சரவுகள் இல்லாததாக இருக்கவேண்டும். சாப்பிடுவதிலிருந்து குழந்தையின் கவனத்தைத் திருப்பும்வகையில் ரிவியோ, ரேப் றெக்கோடரோ அலறக்கூடாது. அடம்பிடிக்கிற குழந்தைகளுக்குக் கொஞ்சம் பொறுமையாக, பக்குவமாகத்தான் சாப்பாடு ஊட்டவேண்டும். அதைத்தவிர்த்துச் சாப்பாடு ஊட்டும் நேரம் ஏன் வருகிறதோ என்ற ரீதியில் குழந்தையிடம் கோபத்தைக் காட்டக் கூடாது. ஒழுங்காகச் சாப்பிட்டால் அதையும், இதையும் தருவதாகக் குழந்தைக்கு ஆசை காட்டுவதைத் தவிர்ப்பதே நல்லது காலப்போக்கில் குறிப்பிட்ட சில உணவுகளின் மீது குழந்தைகளுக்கு நிரந்தர வெறுப்பு ஏற்பட இந்தப் பழக்கம் காரணமாகிவிடும்.



## குழந்தையின் பற்களை பேணுவது எப்படி

ஆறாவது மாதம் குழந்தையின் வாயை, பல் முளைக்கும்போது பஞ்சு அல்லது தூய்மையான துணியில் விரலை உபயோகித்து துடைத்து விடவும். சில குழந்தைகள் கைவிரலை வாயில் வைக்கும் பழக்கம் இயற்கையாக வருவது. பால் குடிக்கும் குழந்தையின் இயல்பான உணர்வை ஒட்டி இப்பழக்கம் ஏற்படுகிறது. இதனால் பல் அமைப்பு பாதிக்கப்பட்டு பல் முன்னால் துருத்திக்கொள்ளும் என்று அஞ்சவேண்டாம். பற்களைச் சுத்தம் செய்து கொள்ளவே இந்த ஏற்பாடு.

வெண்சக்கரையை பாலிலோ, உணவிலோ சேர்க்கக்கூடாது. கேள்வரகை மசித்துக் களி போலக் கொஞ்சம் கொஞ்சமாக ஊட்டலாம். பொட்டுக் கடலையைப் பொடி செய்து, நாட்டுச் சர்க்கரையையும் சேர்த்துக்கொள்ளலாம். சொக்லெட், மிட்டாய், ஐஸ்கிறீம் ஆகியவற்றை கொடுக்கக்கூடாது. கடித்து, மென்று சாப்பிடக்கூடிய காய்கறிகள், பழங்கள் இவைகளைக்கொடுக்கலாம். இதை குழந்தையிடம் தாய் செய்து காட்டினால் குழந்தையும் அதைப் போலவே செய்ய முயலும். அப்பிள், தக்காளி, கரட், முள்ளங்கி, வெள்ளரி போன்றவை நல்லது. கடித்து, மென்று சாப்பிடுவது பல்லுக்கு நல்லது.

## விஷப்பாம்புகள்



01:-வியட்நாமில் விசப்பாம்புகள் அதிகம்.

அநேகமாக நூற்றுக்கு தொண்ணூற்றொன்பது வீதமானவை கடித்தால் கொடியவிஷம்.

02:- மற்ற ஒரு வீதம்?

உயிருடன் முழுதாக விழுங்கக் கூடியவை.

# வதந்தி ஒரு புலனாய்வு தந்திரோபாய நடவடிக்கை




பொய்த்தகவல் பரப்பும் நடவடிக்கைகள் மரபு வழியிலான பிரசார நடவடிக்கைகளிலிருந்து வேறுபடுகின்றன. அதில் உண்மையான நோக்கங்கள் மறைக்கப்படுகின்றன.

இவையனைத்தும் பெரியளவில் வதந்திகளைப் பரவச்செய்து ஏய்க்கும் நடவடிக்கையாக இருக்கும். இவ் வதந்திகளில் எந்த உண்மையும் இல்லாத போதும் அவைகள் பொய்த்தகவல் பரப்பும் பிரிவினரால் நன்கு திட்டமிட்டு சாதுர்யமான முறையில் தகவல்கள் பரப்பப்படுகின்றன.

இப்பொய்த்தகவல்களை மக்களது அறிவுணர்வு, உணர்ச்சிபோன்றவற்றிற்கு திரும்பத்திரும்ப சொல்வதன்மூலம் மக்களின் கவனத்தையும் கருத்தையும் திசை திருப்ப முடியுமென புலனாய்வு நிறுவனங்கள் நம்புகின்றன.

இத்தந்திரோபாய நடவடிக்கைக்காகப் பொய்த்தகவல் பரப்பும் பிரிவு ஊடகங்களில் பாரிய முதலீடுகளைச்செய்கின்றன. அதாவது தொலைக்காட்சி வானொலி, இணையத்தளம், பத்திரிகைகள், சஞ்சிகைகள், சுவரொட்டிகள், மற்றும் துண்டுப்பிரசுரங்கள் ஆகியவைகளிலாகும். இவற்றிற்கு அப்பால் மக்களோடு மக்களாகக் கலந்துகொண்டு இயங்கும் அரசபுலனாய்வு முகவர்களையும் இப்பணிகளில் ஈடுபடுத்துகின்றனர்.

இவ் ஊடகங்கள் மற்றும் மறைமுக வாய்மொழி மூல பொய்த்தகவல்களைப் பரப்புவதால் புல னாய்வு நிறுவனங்கள் தாம் பெறமுனையும் விளைவுகள் பற்றி சற்று விரிந்து நோக்குவோம்.

01) நாடுகளுக்கிடையிலான உறவுகளைச் சீர்குலைத்தல்.

02)மக்கள் தம் தலைவர்கள் மீதும், அரசாங் கத்தின் மீதும் கொண்டுள்ள நம்பிக்கையைச்சிதைத்தல்.

03) இராணுவம் சார்ந்த தந்திரோபாய நோக்கங்களுக்காகப் போராயுதமாக பயன்படுத்தல்.


04)தேசிய இனவிடுதலைப் போராட்டத்தின் மீதான மக்களின் நம்பிக்கையை இழக்கச்செய்தல்.

ஆகிய பணிகளை முன்னெடுக்கும் புலனாய்வு நிறுவனங்கள் தம் நேரடி கட்டுப்பாட்டினுள் பொய்த்தகவல் பரப்பும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

இப்பிரிவானது நாட்டுமக்களின் பராம்பரியம், கலாசாரப் பின்னணி, மூடநம்பிக்கைகள், இனங்களுக்கிடையேயான முரண்பாடுகள், சாதி,மத மொழிப்பிரச்சினை போன்ற பல விடயங்களை ஆய்வுசெய்கின்றன.

இவ்வாறான ஆய்வுகளின் பிற்பாடு தமது பொய்த்தகவல் பரப்புதலுக்கான "எண்ணக்கருவை" தேர்ந்தெடுத்து அதற்குத்தக்கவாறு தந்திர உத்திகள் உள்ளடங்கலான பிரசார வேலைகளை முன்னெடுக்கின்றது.

## உணவு வகைகள்



ஒருவர்:- தமிழீழத்தின் தரமான உணவுவகைகளை எங்கே பெறலாம்.
மற்றவர்:- லண்டனில்.
ஒருவர்:-வன்னியில் கிடைக்காதா?
மற்றவர்:- மேல் நாட்டுப்பாணியில் சமைத்த உணவுகள் தானே கிடைக்கும்.

இத்தகையதொரு தந்திரோபாயத்தை விளங்கக்கூடிய ரஷ்சிய புலனாய்வு நிறுவனமான KGB மேற்கொண்ட உண்மை நிகழ்வை இங்கு உன்னிப்பாக கவனிப்போம்.

பொய்த்தகவல் பரப்புதல் பிரிவானது KGB யின் "D"பிரிவாக இருந்து பின்னாளில் "A" பிரிவாக செயலாற்றுகின்றது. இதனை இயக்குபவராக ஜெனரல் "ஐவன்" இருந்துள்ளார்.

1964 களில் KGB செக்நாட்டின் புலனாய்வு நிறுவனம் STB யின் உதவியுடன் ஐக்கிய அமெரிக்காவிற்கு எதிராக இந்தோனேசிய மக்களை கிளர்ந்தெழச்செய்யவென சாதுர்யமான நடவடிக்கை யொன்றை ஆரம்பித்திருந்தது.

அதாவது இந்தோனேசிய சனாதிபதி சுகர்னோவை கொலை செய்ய அமெரிக்க CIA திட்டமிட்டிருக்கும் போலி ஆவணத்தையும் மற்றயது. இந்தோனேசியாவை [illegible]க்கிரமிக்கும் ஓர் அமெரிக்க [illegible]ரிய கூட்டுத்திட்டம் பற்றிய [illegible]வணத்தையும் STB தம் [illegible] வீழ்த்திய இந்தோனேசி[illegible] மூலம் சுகர்னோவிற்கு [illegible] செய்தது.

இவ் ஆவணங்கள் உண்[illegible]யன நம்பி சுகர்னோ அமெரிக்காவிற்கு எதிரான கருத்துக்களை வெளியிட ஆரம்பித்தார். இக்கருத்துக்களை மிகைப்படுத்தி பத்திரிகைகளில் வெளிவர KGBயும், STB யும் இணைந்து தம்மால் கைக்கூலி வழங்கப்பட்ட பத்திரிகையாளர்களை தீவிரமாக ஈடுபடுத்தின.

இவ்வாறு பத்திரிகைகளில் மிகைப்படுத்தி வெளியான செய்திகளை KGB தம் மொஸ்கோ வானொலி நிலையத்தினால் இந்தோனேசிய மக்களுக்கு ஒலிபரப்புச் செய்தது.

இச்செய்தி ளை வாசித்த, கேட்ட மக்கள் கூட்டத்தினர் நாடெங்கும் அமெரிக்காவிற்கு எதிராக வெறிகொண்டெழுந்தார்கள். இதனால் அமெரிக்க இந்தோனேசிய நாடுகளுக்கிடையிலான உறவு சீர்குலைந்து போனது.

இப்படிப்பினை மீது தமிழர்கள் கருத்தூன்றி கவனிக்கும் போதே சிறிலங்காப்புலனாய்வுத்துறையின் "பொய்த்தகவல் பரப்புதல் பிரிவு" தமிழ்மக்களின் மனங்களுக்குள் ஊடுருவல் செய்ய எத்தனிப்பது பற்றி அறிந்துகொள்ளமுடியும்.

அதாவது தமிழர் தேசிய விடுதலைப்போராட்டத்தை குழப்பவும் சீர்குலைக்கவும் போராளிகள் மற்றும் தலைமைத்துவத்தினரிடையே குழப்பங்களையும், முரண்பாடுகளையும் ஏற்படுத்தவும் மக்களை இயக்கத்திடமிருந்து அந்நியப்படுத்தவும் மக்கள் மத்தியில் போராட்டம் குறித்து நம்பிக்கையீனத்தை உருவாக்கவும் பொய்த்தகவல் பரப்புதல் என்பதை ஒரு போராயுதமாக சிறிலங்கா புலனாய்வு அமைப்பு பயன்படுத்துகின்றது.

இப் பொய்த்தகவல் தமிழ் மக்களது உணர்வுகளுக்குள், நோக்கங்களுக்குள் செல்வாக்குச் செலுத்துவதனை குறிக்கோளாகக் கொண்டது. அதாவது தமிழ் மக்களின் மனவலிமையை குன்றச்செய்தல், போரில் தாக்குப்பிடிக்கவோ அல்லது போரிடவோ தேவையான ஊக்கத்தை குறைத்தல் ஆகிய இலக்கைக் கொண்டுள்ளன.

**--- நீலன் ---**

தமிழரின் ஆயுதப்போராட்டம் கருக்கொண்ட காலம் தொட்டு தமிழ்த் தேசியத்தை சிதைப்பதற்கு "பிரதேச வாதம்" பலமான ஆயுதமாகக் காணப்படுவதால் "பொய்த்தகவல் பரப்புதல் பிரிவு" ஊடகங்களின் அனைத்து சக்திகளையும் பிரதேசவாதத்தை தூண்டுவதற்கே பாவிக்கின்றது.

அண்மையில் மட்டக்களப்பில் தோன்றியுள்ள பிரதேசவாதத்தையும் குழப்பமான சூழ்நிலையையும் தொடர்ந்தும் தக்கவைப்பதும் அவைகள் மேலும் தீவிர நோயாக பரவச் செய்வதிலும் பொய்த்தகவல் பரப்பும் பிரிவு விடாப்பிடியாக இயங்குகின்றது.

கருணா குழு என்கிற பெயரில் வெளியாகும் துண்டுப்பிரசுரங்கள் ஒரு புறம் இருக்க மறுபுறம் ஆங்காங்கே ரமேஸ் இறந்தார், பல போராளிகள் கொல்லப்பட்டு உடல்கள் மீட்பு என்கின்ற சிறிலங்கா வானொலிச் செய்திகள் அதற்கு அப்பால் சிறிலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலால் போராளிகள் சிலர் வீரச்சாவு அடைந்தார்கள். இதனை திரிபுபடுத்தி புலிகள்தான் இவ்வாறான தாக்குதல்களை மேற்கொண்டனர் என்கின்ற செய்திகளை சிறிலங்கா ஊடகங்கள் வெளி யிட்டன.

அத்தோடு இப்படியான குழப்பமான தகவல்களை "நெருப்பு" இணையத் தளத்தில் இணைப்புக் கொடுக்கப்பட்டிருந்த "INFO LANKA" இணையத் தளம் தொடர்ந்தும் வழங்கி வருகின்றது. இத்தளத்தின் பின்னணியிலும் சிறிலங்காப் புலனாய்வு நிறுவனம் இருந்துள்ள தகவல் வெளியாகியுள்ளது.

இப்படியாகத் தனக்கு சாதகமான கருத்துருவாக்கத்தை உருவாக்க ஊடக வளங்களையும் முகவர் வளங்களையும் பயன்படுத்துவ்தன்மூலம் தமிழரின் தேசிய விடுத்லைப்போரை பலவீனப்படுத்தும் பணியை இலக்காகக்கொண்டு பொய்த்தகவல் பரப்புதல் பிரிவு செயலாற்றுகின்றது.

இதன் ஓர் அங்கமாக இலண்டனில் TBC வானொலி ஒலிபரப்பு நிலையம் இயங்குகின்றது. இதன் இயக்குநர்களாக ENDLF ராம்ராஜ், அவரது மனைவியார் உள்ளார்கள். இதனுடைய நோக்கம் தமிழர்களை குழப்பத்தில் ஆழ்த்தும் பொய்த்தகவல்களைப் பரப்புவதாகும்.

இதுபோன்ற வானொலி ஒலிபரப்புக்கள் முன்னைய காலங்களில் மேற்கொள்ளப்பட்டும் உள்ளன. அவைகள் தமிழீழத்தின் குரல், மக்களின் குரல், லங்காபுவத் என்கிற பெயரில் இயங்கின.

இவைகள் அனைத்தும் மூளைச் சலவை அணுகுமுறைக்கான தந்திரோபாயமாக இருந்ததனால் தமிழ் மக்களின் போராட்ட உணர்வுகளை மழுங்கடிக்கவும், திசைதிருப்பவும் செய்யத்தக்க ஓர் போராயுதமாகவே இருந்து வருகின்றது. இதனை ஒத்த KGBயின் இன்னொரு தந்திர நடவடிக்கையை கண்ணோக்கிப் பார்ப்போம்.

1956 இல் STB யின் உதவியுடன் மேற்கு ஜேர்மனி பற்றிய தப்பான கருத்துக்களை ஐரோப்பாவில் ஏற்படுத்தி அந்நாடுகளை மேற்கு ஜேர்மனியருக்கு எதிராக திருப்பும் நோக்கம் கொண்ட நடவடிக்கையை KGB ஆரம்பித்தது.

அதாவது "சுதந்திர ஜேர்மனிக்காய் போராடும் குழு"என அழைக்கப்படும் பெயரில் பிரசுரங்கள் வெளியிட்டன. ஆனால் உண்மையில் அவ்வாறான ஒரு குழு இருக்கவில்லை.

இப்பொய்யான பெயரில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்ட பிரசாரம் மேற்கு ஜேர்மனியில் நாசிவெறியர் குழுவொன்று புத்துயிர் பெற்றுள்ளது என்கிற அபிப்பிராயத்தை உருவாக்கியது.

இக்குழுவின் பெயரில் யூத எதிர்ப்புச் சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்களுடன் யூதர்களை அச்சுறுத்தும் வகையில் அனைத்துப் பணிகளையும் KGB யும் STB யும் இணைந்து முன்னெடுத்தன.

இச்செய்திகளை மேற்கு ஜேர்மனிய பத்திரிகைகள் வெளியிட்டன. அவைகள் வெளிநாட்டுப் பத்திரிகைகளில் வெளிவந்ததனால் நாசிவாதம் மேற்கு ஜேர்மனியில் மேலோங்கியுள்ளது என்கின்ற முடிவிற்கு ஐரோப்பா வந்தது.

இதன் விளைவாக மேற்கு ஜேர்மனியுடனான அனைத்து இராஜ தந்திர உறவுகளையும் ஐரோப்பா நாடுகள் துண்டித்தன.

இந்நிகழ்வை சீர்தூக்கிப் பார்க்கும் போது அன்றும் சரி இன்றும் சரி தமிழர் தாயகப்பகுதிகளில் புதிய புதிய பெயரில் பொய்த்தகவல்களைப் பரப்பும் ஊடகங்களின் உண்மையான நோக்கத்தை இனம் காணலாம்.

உலக போர் வரலாற்றில் "பொய்த்தகவல் பரப்புதல்" தந்திரோபாய நடவடிக்கைகளில் ஒரு சிலவற்றை இங்கு கண்ணோக்கிப்பார்ப்போம்.

உலக மகா வீரரான அலெக்ஸ்சாண்டர் பலபோர்களைப் புரிந்து பல நாடுகளைத் தம் வசம் கொண்டு வந்தார். அவ்வாறு கைப்பற்றிய இடங்களை தக்க வைக்கவும், எதிரிப்படைகளை தோற்கடிக்கவும் தந்திரோபாய நடவடிக்கைகளில் ஒன்றான பொய்த்தகவல் பரப்புதலைச் செய்தார்.

அதாவது தன்னிடமுள்ள அடிமைகள் மூலம் அலெக்ஸ்சாண்டர் தனது படையில் "பிசாசுப்படை " இருப்பதான கதைகளைப்பரப்பினார். அக்கதைகளில் உண்மை இருப்பதற்கான செயல் வடிவத்தையும் கொடுத்தார்.

தன் ஆயுதப்பட்டறையில் பத்துத்தலைகள் ஒரேயடியாகப் போடும் பல தலைக்கவசங்கள், மார்புக்கவசங்கள் என தயாரித்து எதிரிப்படையாட்கள் கண்டெடுக்கக்கூடியவாறு ஆங்காங்கே அவற்றை விட்டுச்செல்லவும் ஏற்பாடு செய்தார். அக்கவசங்களைக் கண்டெடுத்த எதிரிப்படையாட்கள் அலெக்ஸ்சாண்டர் படையை தோற்கடிப்பதென்பது தங்களால் இயலாத காரியம் என்று எண்ணி எதிர்த்து போரிடும் திறமையையும் மனோபலத்தையும் இழந்தார்கள்.

இப்பழைமை வாய்ந்த அபாரமான தந்திரோபாய நடவடிக்கையை ஒத்த வேறு ஒரு நவீன காலத்து எடுத்துக்காட்டினையும் நோக்குவோம்.

நேச நாடுகளால் ஐரோப்பாக் கண்டத்தின் மீது மேற்கொள்ளப்படவிருந்த படையெடுப்பான நோமண்டி தரையிறக்கத்தை மறைப்பதற்கும் ஜேர்மனியர்களை திசைதிருப்பவும் பொய்த்தகவல் பரப்பும் தந்திர நடவடிக்கை பாரியளவில் மேற்கொள்ளப்பட்டது.

அந்நடவடிக்கை மனோபலம் எனப்பெயரிட்டு "கலாய்ஸ்" என்ற

( 19ஆம் பக்கம் பார்க்க....)



# அசராத உறுதி

**— க. மிரேசு —**

அண்ணா கிட்ட வந்திட்டான்... கிட்டவந்திட்டான் சுடு. சுடு.... எல்லோரும் சுடு... விடாமல் சுடுங்கள்... விடாதே.... விடாதே... எழும்பி ஓடுறான் விடாதே சுடு..... சுடு.

இப்படித்தான் போர் மேகம் சூழ்ந்து. இடியும். மழையுமாக குண்டு மழை பொழிந்து கொண்டிருந்த. சண்டையில் அந்தக்குரல் கேட்டது. அந்தக் குரல் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருந்தது.

வெற்றிலைக்கேணி கட்டைக் காட்டுச் சண்டையை தொடர்ந்து முகாவிலில் அமைந்திருந்த எமது நீண்டதொரு முன்னணிக் காவலரண் தொடர் ஒன்றில் கும்மிருட்டான அந்த இரவில் தான் அந்தக் குரல் கேட்டுக் கொண்டே இருந்தது.

நீண்ட அந்தக் காவலரண் தொடரில் மறைப்பு வேலி கட்டுவதற்காக ஒன்று சேர்ந்து வேலைப்பங்கீட்டை செய்து கொண்டு இருந்த போது சற்றுத் தள்ளி காவல் கடமையிலிருந்த போராளியின் துப்பாக்கி சடசடத்தது டப்... டப்.... டப்.... எனச் சத்தம் கேட்ட பக்கம் திரும்பிப் பார்க்காமலேயே துப்பாக்கியை எடுத்து நிலை எடுத்து தாக்கத் தொடங்கினோம்.

அந்தப் பற்றையில் தான் இருந்து கடந்தான்...

குண்டைக் கழட்டி எறியடி... வேகமாக எறி...

என்று சொல்லிக்கொண்டே சுட்டவள்.

அந்தா ஓடுறான். அந்தா ஓடுறான் என்று கத்திக்கொண்டே சுட்டுவிட்டு....

இச்சே தப்பிவிட்டான் போலக் கிடக்கு என்று சோர்ந்து அமர்ந்தாள்.

என்னடி நடந்தது.... என சக தோழி கேட்க நீங்கள் கதைத்துக்கொண்டிருக்க. அந்தா..... அந்தப்பற்றையைக் கடந்து இந்தப் பக்கம் தான் வந்தவன். வேவுக்காரனாய்த்தான் இருக்கும் எனவே தான் சுட்டேன் என்றாள் அவள்.

பதிலுக்கு மற்றையவள் நீ பன்றிக் குத்தான் சுட்டியோ தெரியாது.... என நக்கலாச் சொல்ல. அப்ப ஏன் நீங்கள் சுட்டனீங்கள்... சுடாம விட்டிருக்கலாமே.... என கோபத்துடன் கேட்டவாறே நான் சுடாமல் இருந்திருந்தால் இப்ப எல்லோரும் பல்லக்காட்டிக். கொண்டு கிடந்திருப்பியல் என்று குமுறினாள். உண்மையில் வேவுக்காரன்தான் வந்தவன் என்பதனை மறுநாள் எதிரியின் சிந்தியிருந்த இரத்தத்தால் உறுதி செய்ய முடிந்தது. நாம் வேலி அடைத்துக் கொண்டிருந்த பகுதியானது சூனியப் பிரதேசம் என்பதனால் எதிரியின் நடமாட்டம் அதிகமாகவே இருந்தது.

மேற்குறிப்பிட்ட சம்பவம் போலவே மீண்டும் ஒரு நாள் எதிரியை திடீரென சந்திக்கவேண்டி வந்துவிட்டது. முகாவிலில் நிலைகொண்டிருந்த எமது அணிகள் எதிரிக்கு ஒரு திகைப் புத்தாக்குதல் ஒன்றைக்கொடுத்துவிட வேண்டும் என்பதற்காய். எமது நிலையிலிருந்து. நேர் முன்னே அமைந்திருந்த எதிரியின் நிலையை நோக்கி. பண்ணையடி. இயக்கச்சி வீதியில் நகரத் தொடங்கினோம். எதிரியின் இலக்கிலிருந்து குறிப்பிட்ட தூரத்தில்வைத்தே தாக்குவதாகத் திட்டமிடப்பட்டிருந்தது. எப்படியும இன்றைக்கு அதிர்ச்சி சண்டையை செய்வது என்று முடிவு செய்துவிட்டோம் அப்படியே எமது பொறுப்பாளரும் எம்மைக்கதைத்து அனுப்பினார். எனவே பகலில் கண்டுகொண்ட எதிரியின் இலக்கை தாக்குவதே எமது திட்டம் நாம் நகர்வது சூனியப்பிரதேசம் என்பதனால் திடீரென எதிரி தாக்கலாம் என நினைத்தவாறு சென்றபோது திடீரென ஏதோ ஒன்றை அந்தச் சிறிய பெண் போராளி கண்டுகொண்டாள்.

முன்னே நகர்ந்த அவளது கைச்சைகை எம்மைத்தடுத்தது. தனககே தெரிந்தமொழியில் ஏதோ கூறினாள். ஒரு கையால் தனது துப்பாக்கியைப்பிடித்துக கொண்டு மற்றைய கையில் தலையை வட்ட மிட்டுக்காட்டி. எம்மைச் சத்த மில்லாமல் இருக்கும்படி சைகை செய்தாள். நாமும் அப்படியே இருக்க. எமக்குப்பக்கத்திலே கேட்ட சரசரப்பு. சற்றுத்தள்ளி நகர்ந்தவண்ணம். கேட்பதாக இருந்தது. நடந்தது என்ன என்பதை அறிய எமக்குக் கன நேரம் எடுக்க வில்லை. நிலைமையை உணர்ந்து எல்லோரும் அப்படியே இருந்தோம். சிறிது நேரம் சென்றதும் எமது ரகசியமாநாடு கூடியது.

நாம் தாக்குவதற்காகச் சென்ற எதிரியின் முற்காப்பு அணியானது தனது இரவு இருப்பை உறுதி செய்யவே. முன் அவதானிப்பு நகர்வைச் செய்துள்ளான். சற்று முந்தியோ அல்லது அவசரப்பட்டோ இருந்திருந்தால். எதிர்பாராத தாக்குதல் நடந்து எமது பக்கமும் இழப்பு ஏற்பட்டிருக்கும். தாக்குதல் அணிகளுக்கு முன்பாகச்சென்ற லெப். அபிராமியே எம்மை தாமதிக்கவைத்து அந்தநேரத்தில் ஏற்படவிருந்த ஆபத்திலிருந்து காப்பாற்றினாள்.

தாக்குதலில் எம்மை எதிரியை தாமதப்படுத்தி அவனது இலக்கை மிக. மிக துள்ளியமாகக் காட்டியதற்கு எதிரிக்கே நன்றி கூறவேண்டும்.

எதிரியின் இடத்தை நன்கு தெரிந்துகொண்ட நாம் இன்னும் கொஞ்சம் தள்ளிச்சென்று நிலை எடுத்தோம். லெப்.அபிராமியே சண்டையை ஆரம்பித்தாள். தனது துப்பாக்கியால் எதிரியின் இருப்பிடத்தை நோக்கிச் சுட்டாள். பக்கத்திலிருந்தவள் தனது உந்துகணை செலுத்தியால் ஒரு துருப் பெதிர்ப்பு உந்துகணையை சுட்டாள். நிச்சயமாக அது குறிதவறவே சந்தர்ப்பம் இல்லை. எதிரியின் இலக்கில் பட்டு மின்னி. பாரிய சத்தத்துடன் வெடித்தது. பிள்ளையல் அதுதான் இடம். விடாம அடியுங்கோ!

சனியன்கள் துலையட்டும் அடியுங்கோ என்று கத்திக்கொண்டே சுட்டுக்கொண்டிருந்தாள். என்ன. நினைத்தாளோ தெரியாது. ஆவேசத்துடன பக்கத்தில் நின்றவளிடம் உந்துகணைச செலுத்தியை வாங்கி ஒரே குறி இலக்கை நோக்கி இரண்டும் நேர் மேலே எதிரியின் இயக்கச்சி முகாமைநோக்கி ஒன்றும் சுட்டாள். மூன்றாவது உந்து கணை எதிரியின் வேலியில் பட்டுவெடித்திருக்கவேண்டும். ஏனெனில் எரியும் சுவாலை ஒன்று எம்க்குத்தெரிந்தது. பல சிங்களச் சிப்பாய்களின் கூச்சலிடும் சத்தம் கேட்கும் அதே நேரத்திலேயே எதிரி யின் பக்கமாக அவளது எறிகணை ஏவு தளங்கள் உயிர் பெற்றதைக்காணக்கூடியதாக இருந்தது. பளிச். பளிச் என மின்னியும் டொம். டொம் என வெடி யொலியும் கேட்பதை உணர்ந்த நாம். எமது இடத்திற்கு விரைந்தோம். முன்னரே எல்லோரும் ஓடிவர கடைசியாக அந்த வீரவேங்கையே துள்ளி ஓடி வந்து ஓடுங்கோ... அண்ணாக்கள் ஓடுங்கோ. ஓடுங்கோ... பிள்ளையல். வேகமாக. வேகமாக ஓடுங்கோ எங்களுக்குத்தான் அடிக்கிறான் என்று சொல்லிக் கொண்டே ஓடியவள் எமது இடத்தை அடைந்ததும் நல்லா எரியட்டும். எரியட்டும் என்றே உற்சாகமாகக் கத்தினாள். ஆனால் ஒரு கவலை அவளுக்கு இருந்தது ஆமியின்ர இழப்பை எப்படியும் அறிந்து விட வேண்டும் என்று ஆவலாய் இருந்தது போலவே மறுநாள் 02 பேர் செத்து ஒருவனுக்குக் காயமாம் என்று அவ னது செய்தி சொன்னது.

இப்படி எதிரி சாவதற்கு எதிரியே காரணமானவன். காரணம் அவளது முன் அவதானிப்பின் போதே இலக்கு அவதானிக் கப்பட்டு உடனடித்தாக்குதலுக்குத் திட்ட மிடப்பட்டது. வெற்றியும் பெறப்பட்டது என்பதும் உண்மை.

லெப். அபிராமி சிறிய வயதினிலேயே விடுதலைத்தாகம் கொண்டு தாயக விடுதலைப் பயணத்தைத் தொடர்ந்தவள். பல தாக்குதலில் முன் அறிவிப்பாளராகவும் எறிகணை சீர்செய் அறிவிப்பாளராகவும் செயற்பட்டு அதில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தாள். இயல்பான அறிவும் செயலூக்கமும் கொண்டவள் குறித்த காலத்திலேயே சண்டை நுணுக்கங்களையும் கிரகித்தல். கட்டளை வழங்குதல் போன்றவற்றிலும் சிறப்பாக விளங்கினாள். எல்லாவற்றையும்விட எறிகணை சீர்செய் முட்டு அறிவிப்பாளராக நீண்டநாட்கள் செயற்பட்டமையினால் அதில் விசேட தேர்ச்சி பெற்றிருந்தாள். மெல்லிய ஒல்லியான அந்த உருவம் எப்போதுமே கையில்துப்பாக்கியுடனும். நடைபேசியுடனுமே இருக்கும். அவளுடைய மெல்லிய குரலில் கேட்கும் கட்டளை மிகவும் இனிமையாக இருக்கும். இந்தா நான் அறிவிக்கிறதுக்கு அடியுங்கோ... நான் சொல்றன் வேகமாக எடுங்கோ... என்றும்.

இன்னும் ஏன் அனுப்பேல்ல.

கெதியா. அனுப்புங்கோ... கெதியா அனுப்புங்கோ என்று கெஞ்சும் குரலில் கேட்கும்போது பரிதாபமாக இருக்கும்.

ஏவுதளப் பொறுப்பாளர் சொல்வார் அபிராமி. அபிராமி இந்தா வருகுது. இந்தா வருகுது என்றதும் துள்ளிக் குதிப்பாள் அதுதான் இதே இடம்தான் போடுங்கோ. போடுங்கோ துலையட்டும் என்று கத்துவாள். தவறுதலாக மாறிவிழுந்துவிட்டால். அவளது முகத்தைப் பார்க்கவே ஏலாது. என்ன அடி அடிக்கிறியல் என்று சினுங்குவாள். இப்படியாகத்தான் அவளது செயல் நீண்ட களம் எங்கிலும் எல்லைக் காவலரண் எங்கிலும் நிறைந்து கிடந்தன என்பதே எம்மால் மறக்காமல் இருக்கமுடியாமல் உள்ளது. என்றாலும் அவளது அந்த இறுதி நேரத்தை நினைக்கும் போது நெஞ்சம் வெடித்துவிடும் போல் இருக்கிறது.

சுமாராக பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட சிங்கள எதிரி இராணுவம் எம்மைச் சுற்றிலுமாக இத்தாவிலில் மூன்று பக்கங்களிலும் நிலை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. எஞ்சியுள்ள ஒரே பக்கமான கடலிலும் எதிரியின் கடற் கலங்கள் தொடர்வேட்டோசையை தீர்த்து பதிலுக்குத் தனது பணியை செய்துகொண்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும் எதிரியின் இராணுவ தலைக்கவசங்களே தெரிகின்றன. தொடர்ச்சியான வெடியோசை காதைக் கிழித்துக்கொண்டே இருக்கின்றன. எறிகணை சிதறல்கள் பறந்து ஒருவித ஓசையுடன் காதில் ரீங்காரமிடுகின்றன. எல்லா இடங்களிலும் வேட்டோசையைத் தவிர மரண அமைதிபற்றிக்கொண்டிருக்கின்றன. இடர் நிறைந்த அந்தக் களத்தில் நாம் எத்தினையைத்தான் தாங்கிக்கொள்ளவேண்டும்.

எல்லாவற்றையும்விட சுவாசிக்க சுகமான காற்றுக்கூட அங்கே கிடைக்கவில்லை. சிதறுண்டு கிடக்கும் எதிரியின் பிணங்களிலிருந்து எழுகின்ற ஒரு நொடிக்காற்றுமண்டலத்தைக் காவுகொண்டுவிட்டது.

இத்தனைக்கும் மத்தியில்தான் இத்தாவில்களம் விடுதலைப்புலிகள் வீரத்தால் களைகட்டியிருந்தது.தொடர்ந்து நடந்த சண்டையை விட இன்று காலை 10.04.2000 தொடங்கிய சண்டை மிகவும் உக்கிரமானது. எதிரி பல இடங்களில் உள் நுழைந்துவிட்டதனால் சண்டை. உக்கிரமடைந்தது.

எங்குமே ஒரே வெடிச்சத்தம். பேரிகையாய் ஒலித்தது. எரிமலைகள் மோதுவதுபோல் இருந்தது. இங்கேதான் எத்தனையோ சாதனைகள் நிகழ்த்தப்பட்டுக்கொண்டிருந்த போதும் எங்கள் அபிராமி புதிய வரலாறு ஒன்றைப் படைக்கக்களம் இறங்குகிறாள். தனது துப்பாக்கியால் சுட்டுச்சுட்டுக் கொண்டே ஒவ்வொரு காவலரணாக முன்னேறுகிறாள். எதிரிக்கும் அவளுக்குமான தூரம் நீண்டு விட்டதனால் ஏனைய அணித்தலைவர்களுடன் தொடர்புகொண்டு என்ன நடக்குது... என்ன தேவை என்று கேட்டவண்ணமே இருந்தாள்.

அபி... கிட்டவந்திட்டான்... என்றதுமே. பாகையைச் சொல் என்று கத்துவாள். பாகை சொன்னதுமே.. சில வினாடிகளில் எறிகணையை ஒருங்கிணைத்து எதிரியின் அந்த இடத்துக்கு அடிப்பிப்பாள். பல இடங்களிலும் சண்டை உக்கிரமடைந்ததனால் அந்தப் பகுதியில் எல்லோரும் அபியை தொடர்புகொண்டு கேட்டுக்கொண்டே இருந்தார்கள். அபிராமியும் எறிகணையை ஒழுங்குபடுத்திக் கொடுத்துக்கொண்டே இருந்தாள். எறிகணைகளின் துள்ளியமான தாக்குதலைத் தொடர்ந்து எதிரி ஓட்டமெடுத்துவிட்டான்.

ஓட்டமெடுத்த எதிரி. லெப் அபிராமி நின்ற பக்கமாகவே இத்தாவிலின் இந்திராபுர பகுதியை நோக்கி ஓடத்தொடங்கினான். அபிராமியோடு நின்றவர்கள் சண்டை செய்கிறார்கள் என்பதற்கு அறிகுறிதென்பட்டது. அந்தப்பக்கம். வெடியோசை கணத்த சத்தமாக எழுந்தது.

அபிராமி நடைபேசியில் கதைத்தவாறே சண்டை செய்து கொண்டிருக்கிறாள் என்பது நடைபேசி உரையாடலில் தெரிந்தது. இப்போது அபிராமி கர்ச்சித்தாள். பெரும்பாலும் காயமடைந்திருக்கவேண்டும்.

அண்ணா அடியடா செல்லை (எறிகணையை)

இந்தா 200 மீற்றரில் நிற்கிறான்.... அடியடா வேகமா அடி.....

இந்தா 150 மீற்றரிற்கு வந்திட்டான்....

இந்தா 100 மீற்றரிற்கு வந்திட்டான்.....

இந்தா 75 மீற்றரிற்கு வந்திட்டான்...... டேய் வேகமா அடியுங்கோ. வேகமா அடியுங்கோ. என்றதும் ஏவுதளங்களின் கோணப்பார்வை வேறுபக்கமாக இருந்ததனால் அடிக்கமுடியாமல்போக அவர்களும் வேகப்படுத்திக் கொண்டே இருந்தனர். அடே அண்ணா 50 மீற்றருக்கு வந்திட்டான். அண்ணாக்கள் 25 மீற்றருக்கு வந்திட்டான் நிறையப்பேர் எனக்கு மேலேயே அடியடா துலையட்டும் என்று மட்டும்தான் சொன்னாள்.

எறிகணைகள் சடசடத்து ஓய்ந்தன. எதிரியின் கதறல் வானைப் பிளந்தது. எங்கள் அபிராமி செய்த தியாகத்தால் அன்று பெரிதாக வெற்றியைப் பெற்று. எதிரிக்கு நல்ல பாடம் புகட்டி தமிழச்சியின் வீரத்தை மறுபடியும் உலகிற்கு எடுத்துக்காட்டினாள். தன் உயிரையும் பாராமல் தாய் நாட்டிற்காய் அவள் செய்த தியாகத்திற்கு விலை கொடுக்க முடியாது. ஏனெனில். அபிராமியின் உயிர்த் தியாகத்தையே மீண்டும் உயிர்ப்பித்துவிட்டது.



# மூதாளர்களை அரவணைக்கும் "அன்புச்சோலை"

**தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட பேரினவாதிகளின் ஒடுக்குமுறையாலும், வன்முறையாலும் தமிழர் தாயகப் பகுதியில் உறவை இழந்து, தமது உடமையை இழந்து பராமரிக்க எவருமற்ற நிலையிலிருக்கும் முதியோர்கள் இனங்காணப்பட்டு, அவர்களைப் பராமரிக்க தமிழீழத் தேசியத்தலைவரின் பணிப்பின்பேரில் மூதாளர்களின் அன்னை இல்லமாக உருவாக்கப்பட்ட மூதாளர் பேணலகத்தின் இயக்குநர் திரு. விக்கி அவர்களின் கருத்துக்களையும் அங்கு வைத்து பராமரிக்கப்படும் மூதாளர்களின் ஒரு சிலரின் கருத்துக்களையும் இங்கே பகிர்ந்துகொள்கிறோம்.**





சிறிலங்கா பேரினவாத அரசுகள் காலம்காலமாக எமது இனத்தின் மீது மேற்கொண்ட இராணுவ வன்முறைகள் பொருளாதாரத்தடைகள், இன ஒடுக்குமுறைகள் என்பவற்றினால் எமது மக்களின் இயல்புநிலை பாதிக்கப்பட்டுத் தமது உறவுகளையும் உடமைகளையும் இழந்தும் பொருளாதாரப் பலத்தை இழந்தும் அல்லல்பட்ட மக்களுள் சில் தமது மூதாளர்களுக் குரியமுறையில் பராமரிக்கப்படாது விட்டமையால் எத்தனையோ வயது முதிர்ந்த மூதாளர்கள் வீதி ஓரங்களிலும் பொது இடங்களிலும் ஆலயங்களிலும் கவனிப்பாரின்றிக் கைவிடப்பட்டனர். இவ்வாறு பராமரிக்க முடியாதநிலைக்குத் தள்ளப்பட்ட மூதாளர்களுக்குக் கைகொடுக்கும் வகையில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் எண்ணத்தின் வெளிப்பாடாகத் தோற்றம்பெற்ற 'அன்புச்சோலை' மூதாளர் பேணலகம் தமிழர் தாயகப்பிரதேசத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளாக அரும்பணியாற்றிவருகின்றது.

இவ் அன்புச்சோலை மூதாளர் பேணலகமானது கடந்த 2001ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ஆம் நாள் முல்லைத்தீவு முள்ளியவளை எனும் இடத்தில் நிறுவப்பட்டது.

சகல மாவட்டங்களையும் சேர்ந்த மூதாளர்களுடன் கிளிநொச்சி கனகபுரத்தில் தற்பொழுது இயங்கி வருகின்றது. ஆதரவற்ற நிலையில் விடப்பட்ட முதியவர்களையும் போராட்டத்திற்காகத் தங்கள் இன்னுயிர்களை ஈந்த மாவீரர்களின் பெற்றோர்களும் போராளிகளினது பெற்றோர்களையும் உள்வாங்கி அவர்களின் உடல் உளரீதியான பாதிப்புக்களை களைந்து அவ்வாறான பாதிப்புக்கள் ஏற்படாதவண்ணம் பராமரிக்கப்படுகின்றனர்.

அதாவது ஆதரவற்ற நிலையில் விடப்பட்ட இருபாலாரையும் உறவினர்கள் இருந்தும் பராமரிக்க முடியாது ஏழ்மைக்குடியில் உள்ளவர்களும் பராமரிப்பின்றிக் கைவிடப்பட்ட முதியோர்களையும் இம்மண் மீட்புக்காய் தம் உயிர் ஈந்த மாவீர்களினதும் மண்மீட்பிற்காய் போராடிக் கொண்டிருக்கின்ற போராளிகளினதும் தாய் தந்தையரையும் அரவணைத்து அவர்களது சகல அடிப்படைத் தேவையையும் பூர்த்திசெய்து இறுதிக்காலம் வரையும் நிம்மதியாகவும் அமைதியாகவும் வாழும் வாழ்வை ஏற்படுத்திக்கொடுக்கும் ஒரு புண்ணிய தலமாக இது அமைந்துள்ளது.

இவ் அன்புச்சோலையின் இயக்குநர் விக்கி அவர்களை சந்தித்து இதன் செயற்பாடு தொடர்பாகக் கேட்டபோது; ஏனைய இடங்களில் முதியோர் இல்லங்கள், பராமரிப்பு நிலையங்கள் இருக்கின்றன. அதே போன்று தமிழர் தாயகப்பகுதிகளில் இல்லாது காணப்பட்டது. இதனால் முதியோர்கள் கவனிப்பாரின்றிக் காணபபட்டனர். அந்த நிலையை மாற்றிய மைக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்ட இவ்வில்லத்திற்கு கிராம மட்டக்குழுக்களினாலும் கிராம அலுவலர் பக்கத்தினாலும் ஊனமுற்றோர் சங்கக்குழு என பொது அமைப்புக்களூடாக இனங்காணப்பட்ட மூதாளர்களைக் கிராமரீதியாகச் சென்று அவர்களைக் கொண்டு வந்து பராமரிக்கின்றனர். இவர்களைப் பராமரிக்கின்ற இவ்வில்லமானது பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றது. மருத்துவப்பிரச்சினை என்று எடுத்துக கொண்டால் கூடுதலான முதியோர்கள் நோய்வாய்ப்பட்ட நிலையில்தான் இங்குவருகின்றனர். இவர்களை வாரத்தில் ஒருநாள் சிகிச்சைக்குக் கொண்டுசெல்லவேண்டும், அவர்களுக்கு ஏற்ற சிகிச்சை அளிக்க வேண்டும், அதற்குப் பணியாளர்கள் மூலம் பராமரிப்புக்கள் நிகழ்கின்றன. குறிப்பாக நீரிழிவு நோய் குடல் புண் என பல்வேறு நோய்வாய்ப்பட்டவர்கள் உள்ளதால் அவர்களுக்கு ஏற்ற உணவுகள் கொடுக்க வேண்டும். மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகின்ற நோய்வாய்ப்பட்ட முதியோர்களை உரியமுறையில் பராமரிக்கின்றமை போன்ற செயற்பாடுகளை, மேற்கொண்டு வருகின்றது. குழந்தைகளை இலகுவாகப் பராமரித்து விடலாம். ஆனால் முதியோரைப் பராமரிப்பது என்பது உறவினர்களால்கூட கடினமான ஒரு விடயம் அத்தகைய கடினமான மன நிறைவுடன் மேற்கொண்டு வருகின்றது.

இவ் மூதாளர் பேணலகத்திற்கான பராமரிப்பு மற்றும் ஏனைய செயற்பாடுகளுக்குத்தேவையான நிதி உதவியை வெளிநாடுகளில் உள்ள சில தமிழ்அமைப்புக்களும் நல்ல சேவை மனப்பான்மையுள்ள ஒரு சிலரும் வழங்கிவருகின்றனர். அதேபோன்று மருத்துவ வசதிகளை சில தனியார் மருத்துவ நிலையங்களும், மருத்துவ நிபுணர்களும் மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு நோயினால் பாதிக்கப்பட்ட சில முதியோர்கள் ஓரளவு குணமடைந்து நல்ல நிலையில் தற்போது உள்ளனர். அவ்வாறு அண்மையில் ஒருவர் கண் பார்வை இழந்து நீண்டகாலமாக அவதியுற்ற ஒருவரை நாங்கள் உள்வாங்கி மேலதிக சிகிச்சை அளிக்கப்பட்டு தற்பொழுது கண் பார்வை பெற்று நல்ல நிலையில் உள்ளார். அண்மையில் மன்னாரில் இருந்து வந்த முதியவர் ஒருவர் கண்பார்வை பெற்றுச் சென்றுள்ளார். இதேபோன்று கால் நடக்கமுடியாது நீண்ட நாட்கள் படுக்கையில் இருந்த முதியவர்களைக்கூட இன்று சுயமாக நடக்கக்கூடிய வகையில் குணமாக்கப் பட்டுள்ளனர். அத்தோடு அவர்களுக்கு வசதியான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வன்புச்சோலையின் இரு பராமரிப்பு முறைகள் உள்ளன. அதாவது உட்பராமரிப்பு, வெளிப் பராமரிப்பு என்பவையாகும். வெளிப் பராமரிப்பு என்றவகையில் உறவினர்களுடன் உள்ள முதியவர்களை, பொறுப்பேற்று உறவினர்கள் பராமரிப்பில் இருக்கின்றபோது அவர்களுக்கு மருத்துவ வசதி மற்றும் ஏனைய சத்துணவு வசதி என்பவற்றை ஏற்படுத்திக் கொடுப்பது, அவர்களது உறவினர்களுக்கு வருமான அதிகரிப்பை ஏற்படுத்தக்கூடியவகையில் கடன் திட்டங்களை வழங்குதல், வங்கி மூலம் ஒரு மாதாந்தக்கொடுப்பனவுகளை வழங்குதல்.

**நேர்காணல்:- சு.பிரபா**

உட்பராமரிப்பு என்ற வகையில் இங்கு அன்புச் சோலையில் உள்ள முதியோர்களை சகல வழிகளிலும் பராமரிப்பது, மருத்துவ வசதி ஏற்படுத்துதல், அவர்களுக்கு உதவி புரிதல், துன்பதுயரங்களில் இருந்து எந்தவகையிலும் அவர்களை நல்லமுறையில் பராமரிப்பது இவ்வாறு உட்பரா மரிப்பு என்றவகையில் 13 ஆண் மூதாளர்களும் 16 பெண் மூதாளர் களும் இவ்வன்புச் சோலையில் உள்ளனர். இவைதவிர 65 இற்கு மேற்பட்ட மூதாளர்கள் வெளியில் தமது உறவினர்களுடன் தங்கி வெளிப்பராமரிப்பு என்ற வகையில் பயன்பெற்று வருகின்றனர். இத்துடன் மேலும் எந்த இடத்தில் இருந்தும் மூதாளர்கள் இனங்காணும் பட்சத்தில் அவர்களை எந்தவகையிலும் பராமரிப்பதற்கு இவ்வன்புச்சோலை, தயாராக உள்ளது

இவ்வன்புச் சோலை மூதாளர் பேணலகத்தின் பராமரிப்பில் உள்ள மூதாளர்களிடம் இதனுடைய பராமரிப்புத் தொடர்பாகவும் அவர்களது மனநிலை தொடர்பாகவும் வாழ்க்கை தொடர்பாகவும் மூதாளர்களிடம் கேட்டபோது; கிளிநொச்சி முழங்காவில் பிரதேசத்தில் கவனிப்பாரின்றிக் கைவிடப்பட்ட நிலையில் அனாதரவான நிலையில் காணப்பட்டு தற்போது மனநிறைவான மகிழ்வுடன் வாழ்ந்துகொண்டு இருக்கின்ற 55 அகவை மதிக்கத்தக்க வேலுப்பிள்ளை ஆறுமுகம் அவர்கள் தெரிவிக்கையில்; 1983 காலப் பகுதியில் கண்டிப்பகுதியிலிருந்து வன்செயல் காரணமாக இடம் பெயர்ந்து வடமராட்சி கரவெட்டியில் வசித்து, அங்கிருந்து இடம்பெயர்ந்து முழங்காவில் பிரதேசத்தில் வசித்து, வந்த இவரின் குடும்பத்தில் ஒரு பிள்ளை தமிழ்த்தேசவிரோதக் குழுக்களால் 1991இல் நயவஞ்சகமானமுறையில் காட்டிக் கொடுக்கப்பட்டு இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். அடுத்த பிள்ளை இந்தநிலை தனக்கும் ஏற்படக்கூடாது என எதிரியுடன் போராடி மாவீரராகிவிட்டார். எங்கள் இருவரையும் பராமரிக்க யாரும் இல்லாத நிலையில் என்ன செய்வது என்று தெரியாது தவித்தவேளை, இந்த அன்புச்சோலை மூதாளர் பேணலகத்தினர் எம்மைத்தேடிவந்து எமக்கு உதவிகளை மேற்கொண்டனர். நானும் எனது மனைவியும் இங்கு நல்ல சந்தோசமாக ஒரு குறையும் இல்லாது இருக்கின்றோம். இங்கு பொழுது போக்காகக் கோழி வளர்ப்பு கைப்பணிப்பொருட்கள் செய்தல் பூக்கண்டு வைத்துப் பராமரித்தல் என எமது உடலை மருத்துவ ஆலோசனைக்கு ஏற்ப கைகால் அசைவுகளுக்கு ஏற்ற வகையில் சிலவேலைகளைச் செய்கின்றோம். அது இவ் இல்லத்திற்குச் சிறப்பைத்தேடுவதோடு, எமக்கும் ஒருதேக ஆரோக்கியத்தையும் ஏற்படுத்தும். எமக்கும் தற்பொழுது எந்தவிதமான குறையும் இல்லை, நோய்கள் ஏற்பட்டால் உரிய நேரத்தில் நல்ல மருந்துகள் அதற்கேற்ப சாப்பாடு என எல்லா வசதியும் இங்கு எமக்கு வழங்கப் படுகின்றது.

இதேபோன்று இந்தியாவில் பிறந்த ஒருவர் இங்கு பராமரிக்கப்பட்டு வருகின்றார். இவர் இந்தியாவில் பிறந்து ஒரு வயது அளவில் இலங்கைக்கு வந்து நாவலப்பிட்டியில் பெற்றோருடன் இருந்ததாகவும் பின்னர் தனக்கு 40 அகவையளவில் விசுவமடுவிற்கு வந்ததாகவும் தொடர்ந்து 36 வருடங்களுக்கு மேல் நாளாந்தக் கூலிவேலைசெய்து எனது பிள்ளைகளை வளர்த்தேன். அவர்கள் எல்லாம் திருமணமாகி சென்று விட்டனர். எனக்கு இந்திய இராணுவம் அடித்ததிலிருந்து, நோய்வாய்ப்பட்டு தற்பொழுது இங்கு இரண்டு வருடங்களுக்கு மேலாக ஒரு குறையும் இல்லாது தங்கி வாழ்கிறேன் என்றார்.

கிளிநொச்சி மருத்துவமனையில் பராமரிப்புக்கள் ஏதும் இன்றி அனாதரவான நிலையில் கைவிடப்பட்ட ஒருவர் தனது முதுநிலையில் இங்கு இருப்பது தொடர்பாகவும் தனக்கு ஏற்பட்ட இன்னல்கள் தொடர்பாகவும் தனது துன்பகிடக்கைகளை எடுத்துக்கூறினார். நான் கிளிநொச்சி மருத்துவமனையில் நெஞ்சு வருத்தத்துடன் அவதிப்பட்டு இருந்தபோது அங்கு சிலர் கூறினார்கள், உங்களை நல்ல முறையில் அன்புச்சோலை பராமரிக்கும் அங்கே போய் நீங்கள் நன்றாக இருக்கமுடியும் என கூறினார்கள். அதைக்கேட்டு இங்கு தொடர்பு கொண்டு நான் இங்கு வந்தேன், எந்தவித ஒரு குறையுமின்றி சந்தோசமாக இருக்கின்றேன் என்னை கடைசிவரையும் இங்கு சந்தோசமாக வாழவைத்த இவர்களுக்கு நான் என்றும் கடமைப்பட்டவர் என்றே கூறவேண்டும்.

போர் ஒருபுறம், பொருளாதாரத்தடை ஒரு புறம் என்பவற்றுடன் வாழ்ந்த எமது உறவுகள் சந்தித்த துன்பதுயரங்கள் சொல்லில் அடங்காதவை இராணுவத்தினர் செய்த கொடூரங்கள் சந்தைக்கு சாமான் வாங்கப்போனவன் மீண்டும் திரும்பி வரவில்லை. பாடசாலைக்குச் சீருடை அணிந்து சென்றவர்கள் திரும்பி வரவில்லை. உறவுகளைப் பிரித்தும் அடாவடித்தனம் செய்தும் எமது இனத்தின் இருப்பை அழித்துவிட முயன்ற அரசுகளால் அனாதைகளாக்கப்பட்ட உறவுகளை அரவணைத்து இவ் அன்புச்சோலை பாசமுடன் பராமரித்துவருகின்றது. இதனுடைய பணி மிகவும் அற்புதமானது.

பிறநாடுகளில் இவ்வாறான இல்லங்கள் பெருவருமானங்களை பெற்றுக்கொள்ளும் நோக்குடன் அவர்கள்மூலம் வருமானத்தைப் பெற்றுக்கொள்கிறது. இங்கு அவ்வாறில்லை. அவர்களின் சுயநலங்கள் பேணப்படுகின்றது. அவர்கள் விரும்பினால் பண்ணை வேலைகள்செய் வார்கள். எந்தவிதப்பாதிப்புமின்றி இவ்வில்லம் மூதாளர்களை பராமரித்துவருகின்றது.

**கொத்துரொட்டிக்கடையில்**



**ஒருவர்:-** *லயம் பிசகாத வாசிப்பு இவர் முதல் எங்கே வேலை செய்தவர்.*

**மற்றவர்:-** *தேவ இசைக்குழுவில தபேலா வாசிச்சவர்.*




# இருள் யுகத்தின் முடிவு

ஒரு காலத்தில்
மூச்சுக் குழாய்களுக்குள்
முகில்களை உறிஞ்சிக் கொள்வதற்கு
சிறகு விரிக்கத்துணிந்த பறவை
நான்.
கந்தக நெடியும் காணாமல்போனோர்
பட்டியலும்
யௌவனத்தின் வேர்களைத் தின்று
தீர்க்க
முறிந்த சிறகுகளோடும் அகத்திலும்
புறத்திலும்
வெறுமையை அப்பியவாறு மீண்டும்
பிறப்பூ ர் மீண்டிருக்கிறேன்.

அதோ... அந்த முறிந்துபோன
தென்னை யின்
முளைக்காத தேங்காயை
பட்டினிக்கான ஔடதம் என்று
நினைத்து வந்த அப்பாவுக்கு என்ன
நேர்ந் தது?
அவரைத்தேடிவந்த அம்மாவுக்கு
என்ன வானது?

ஆட்காட்டியும் அரவ மொடுங்கிக்
கொள்ளும்
அன்றைய நாட்களில் நீங்கள்
ஒருவரை யொருவர்
தேடும் பொழுதோ தேடுதலின்
முடிவில்.
கண்டுகொண்ட
ஆனந்தப்பொழுதிலோ
கொல்லப்பட்டிருக்கலாம்.
கூற்றுவனின் பாசக்கயிறு
துப்பாக்கியின் ரவையிலிருந்தோ பின்
கைப்பிடியின் வீசலிலிருந்தோ
பொருத்தப்பட்ட 'பைனட்'
கத்தியிலிருந்தோ பாய்ந்திருக்கலாம்.

பொட்டல் வெளி வெய்யிலில்
காக்கைகளும் நாய்களும் நரிகளும்
உவக்கும் பிணமாக நீங்கள்
நாறியிருக்கலாம்.
இல்லையாயின்
மலக்கிடங்குகளில் நெளியும்
புழுக்களுக்கு
உங்கள் ஊண்தசை உணவாகியிருக்
கலாம்.
அல்லது கிணறுகள் ஆறுகள்
குளங்கள் எங்கேனும்
ஜலசமாதி ஆகியிருக்கவும் கூடும்.

இதுவரைக்கும் காட்சிப்படுத்தப்பட்ட
என்புருக்கூடுகளில் உங்களதை
எங்கனம் யான் பகுத்தறிய முடியும்
ஐம்பொறிக் கூட்டை உதறியபின்
அனைத்தும்சமஇயல்புப்படிமங்களாவது
இந்த என்புருக்களில் மட்டும்தா
னோவென
எண்ணத்தோன்றுகிறதெனக்கு

மௌனியாகக் கிடக்கும்
என்புருக்களின்
அந்த அகன்ற சிரிப்பு
ஓர் இருள்யுகத்தின் முடிவுறுதலைச்
சொல்வதாகவும்
தின்று தீர்க்கப்பட்ட எனது
யௌவனத்தின் வேர்கள்
விழுதெறிவதை
விளைவுபடுத்துவதாகவும் நான்
உணர்கிறேன்.
உணர்தலின் முடிவில்நவயுகமொன்று
உற்பவிக்கப்படும்.
அப்பொழுது எழுதுவேன் ஒரு
கவிதை.

**வேல்.லவன்**

# இங்கே மட்டுமோ?

கறுப்புக் கைகள்!
வெள்ளைக் கைகள்
தங்கத்தோடு தங்கமான கைகள்
மதங்களைப் பறைசாற்றும் கைகள்
தடித்த கைகள் மெலிந்த கைகள்
ஆண் முரட்டுக்கைகள்
பெண்களின் கைகள்
எல்லாவற்றையும் பார்க்கின்றேன்!


உறுதியுடன் ஒன்றுபட்டு ஓர் இடத்தே
தள்ளாடி நிலைதடுமாறி இறுதியில்
பற்றிக் கொள்கின்ற அந்த இடத்தை
சாதிகள் மறந்து சமயங்கள் துறந்து
எல்லாக் கைகளும் உறுதியாய் பற்றிக்
கொள்கின்றன.
சாரதி சடுதியாய் பேருந்தை நிறுத்தும்
போதெல்லாம்.
நடுவில் இருக்கும் கோலைப் பற்றிக்
கொள்கின்றனர் உறுதியாய்.


எண்ணங்களை எங்கோ அலைய
விட்ட நான்
இடர்பட்டு சாரதியின் சடுதி நிறுத்தத்
திற்கு
ஈடுகொடுக்க பற்றிக்கொள்கின்றேன்
பேருந்தின் நடு கோலை.

**இத்தாவில் சீலன்**

## படித்ததில் பிடித்தது

இளம் வயது கவிஞன்
இளவரசியைப்பார்த்துச்சொன்னான்
"நான் உன்னை நேசிக்கிறேன்.."
அவள் அதற்கு "நானும் உன்னை
நேசிக்கிறேன் குழந்தையே" "நான்
ஒன்றும் குழந்தையல்ல... நான்
வாலிபன்... நான் உன்னை
விரும்புகிறேன்" என்றான்.
அதற்கு அவள் "நான்
மகன்களுக்கும் மகள்களுக்கும் தாய்.
என் மகன்களும் மகள்களும் தங்கள்
மகன் மகள்களுக்குத் தாய்
தந்தையாகி இருக்கின்றனர்.
இப்போது என் பேரன் ஒருவனுக்கு
உன்னைவிட வயது அதிகமாகிறது"
என்றாள்.
அதற்கு அவனோ "இருந்தாலும்
உன்னை விரும்புகிறேன்" என்றான்
சில ஆண்டுகளின் பின் அந்த
இளவரசியும் இறந்துவிட்டாள். அவள்
இறக்கும் போது தன்
ஆன்மாவுக்குள்ளேயே
சொல்லிக்கொண்டாள்.
"என்னை விரும்பியவனே என்
குழந்தை. இளையகவிஞனே... என்றோ
ஒரு நாள் நாம் மீண்டும் சந்திப்போம்
அப்போது வயது எழுபதாக இருக்காது."



# இலக்கியப்பகிர்வு

திருகோணமலையைத் தளமாகக் கொண்டு "சுட்டும்விழி" எனும் சிற்றேடு வெளிவருகிறது. அதன் மூன்றாவது இதழ் பார்க்க, படிக்கக்கிடைத்தது. யதீந்திரா அதன் பிரதம ஆசிரியர்.

சுட்டும் விழி இரண்டாவது இதழ் தொடர்பில் கரவெட்டியைச்சேர்ந்த ராகவன் அவர்கள் எழுதிய கடிதத்தின் சில வரிகளை முதலில் பார்ப்போம்.

## சுட்டும் விழி

"சுட்டும் விழி 2- வாசித்ததில் மகிழ்ச்சி. ஆரம்ப இதழ்களே கனதி கூடி வருவது கவனிப்பிற்குரியது. இன்று மழை தூமித்ததும் மேற்கிளம்பும் காளான்களாக சஞ்சிகைகள் முளைக்கும் சூழல். ஆனால் கனதியாக இருத்தல் அபூர்வம் (பக்கங்களால் கனதியாதல் வேறுவிடையம்) இந்நிலையில் சுட்டும் விழியினை மெச்சலாம். தரம்மிக்க சிற்றிதழ்களை பட்டியலிடுகையில் பூரணி, அலை, புதுசு, மூன்றாவது மனிதன் என்னும் மிகச் சிலபெயர்களே எங்கள் சூழலில் அடங்கும் நிலை, சுட்டும் விழியும் இந்தப்பட்டியலில் நெருங்கிக்கொண்டு ஏறிப்பயணிக்கும் போலிருக்கிறது."

எங்கள் இலக்கிய உலகில் சிற்றேடுகளின் தன்மையினை ஒரு பொதுவான செயற்பாட்டின் கீழ் கொண்டு வரலாம்.

அது மழை தூமித்ததும் மேற்கிளம்பும் காளான்களாக வந்த சிற்றேடுகளாக இருந்தால் என்ன. தரமானது என்று சொல்லப்படுகின்ற சிற்றேடுகளாக இருந்தால் என்ன இதனைக் கவனிக்கலாம்.

காளான்களாக வெளிப்படுபவை ஒன்று இரண்டு இதழ்களில் நின்று விட்டால் தரமான சஞ்சிகைகள் எனக் கூறப்படுபவை, எட்டு, பத்து,, இருபது இதழ்களுடன் நின்று விடுகின்றன.

எந்தத் தரமான சஞ்சிகையும் விற்பனை ரீதியாகவும் ஆயுள்ரீதியாகவும் வெற்றி பெறு வதில்லை. பெறவில்லை, இதற்கான காரணங்களாகப் பலவற்றைக்கூறலாம். ஆனால் இதன் காரணங்களை யாரும் அலசி ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை.

இளம் வயது காதல் போல இலக்கியக் காதல் உள்ளவர்கள் சஞ்சிகைகளை வெளியிடுகின்றனர். வெளியிட முனைகின்றனர். பின்னர் சோர்ந்து அல்லது அலுத்துப்போய் விடுகின்றனர்.

சிற்றேடுகளைத் தமது கருத்துக்களை அல்லது கொள்கைகளைத் தமது தாக்குதல்களை, கிண்டல்களை, கேலிகளை வெளிப்படுத்தும் ஊடகமாகவே அவற்றின் ஆசிரியர்களாகப் பயன்படுத்தப்பட்டன; படுகின்றன.

சிற்றேடுகளைப் பலரும் பங்குகொள்ளும் ஒரு பொதுத் தளமாக மாற்றும் மனோபாவம் இந்தச் சிற்றேடுகளின் ஆசிரியர்களாக ஏற்படாத வரை இந்த அவல நிலை மாறாது என்பதைக் கவனிக்கவேண்டும்.

தரமான படைப்புக்கள் என்ற கவசத்தைப் போட்டுக்கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட அல்லது ஒரு சிலரின் படைப்புக்கள் மாத்திரம்பிரசுரிப்பதால் இந்தச் சிற்றேடுகளின் வீச்சும் மட்டுப்படுத்தப்பட்டதாக அமைந்துவிடுகின்றன.

தரமான படைப்புக்கள் நிச்சயம் வரத்தான் வேண்டும் ஆனால் அவை பரந்த தளத்தில் பலபேர் பங்கு கொள்ளாத வரையில் எந்தப் பிரயோசனமும் ஏற்படப் போவதில்லை.

சுட்டும் விழி தரமான கலை இலக்கிய இதழாக அமைந்துள்ளது. மகிழ்ச்சிக்குரியது. இந்த மகிழ்ச்சி நீடிக்கவேண்டும். அதுவே இலக்கியவாதிகளின் வேண்டுகோளாகவும் இருக்கும்.

எனவே சுட்டும் விழி தனது செயற்பரப்பைப் பரந்த தளத்திற்குக் கொண்டுவரவேண்டும். சொந்தக் கருத்தை பலரும் கொண்டு இருக்கலாம். பல்வேறு இலக்கியக் கோட்பாடுகளுக்குப் பின்னால் எந்தப்படைப்பாளியும் இருக்கலாம். ஆனால் அவை தனிப்பட்ட தாக்குதல்களை நிறுத்திக்கொண்டு பொதுத் தளத்திற்கு வரவேண்டும்.

எங்கள் இலக்கியச் சிற்றேடுகள் இலக்கியக் கோட்பாடுகளை கையைவிட்டுவிட்டு தனிப்பட்ட தாக்குதல்களுக்குக் கணிசமாக பக்கங் களை ஒதுக்கியே வந்துள்ளன.

இதற்கு ஒரு உதாரணத்தை இங்கு கூறலாம். தெரிந்தவையும், தெரியாதவையும் என்ற தலைப்பில் வ.தேவசகாயம் அவர்கள் குறிப்பிட்டதைக் கவனிக்கலாம்.

தனிப்பட்ட மனிதர்களை வைத்து கதை எழுதப்பட்ட விடயங்களை அவர் குறிப்பிட்டுள்ள, அவர் குறிப்பிட்டவாறு தான் பலவிடயங்கள் நடக்கின்றன. இவை இவ்வாறு நடப்பது சம்பந்தப்பட்ட பத்திரிகை அல்லது சஞ்சிகை ஆசிரியர்களுக்கு தெரியாமல் நடப்பதில்லை. தெரிந்து தான் நடக்கின்றது. ஒருவரின் தனிப்பட்ட வாழ்க்கையை விமர்சிப்பதால் நடக்கப்போவது என்ன?

சுட்டும் விழியின் ஆசிரியர் தலையங்கம் காலத்தின் தேவையை உணர்ந்து எழுதப்பட்டது.

தமிழ்த் தேசியத்திற்கு ஏற்பட்டுள்ள சவால்களை அது வெளிப்படுத்துகிறது. அந்த வகையில் அதன் ஆசிரியரும் ஆசிரியர் குழுவினரையும் பாராட்டலாம்.


SUTTUM VIZHI 2004
கறுப்பு இலக்கியம்
40/=

அறியப்பட்ட இலக்கியவாதியான நந்தினிசேவியர் அவர்களின் நேர்முகம்கூட உபயோகமானது.

"போர்க்கால இலக்கியங்கள் பற்றி விமர்சனத்தை மேலெழுந்த வாரியாகச் செய்பவர்கள் இங்கிருந்து நல்ல இலக்கியங்கள் வரவில்லை என காட்டமான விமர்சனங்களைச செய்கின்றார்கள் எனக்கு அவ்விதவிமர்சனங்களோடு ஒத்துப்போக முடியவில்லை. தமிழ் தலித் இலக்கிய முன்னோடிகளாக ஈழத்தவர்கள் இருப்பதுபோல வருங்காலத்தில் தமிழ்ச் சூழலில் போர்க்கால இலக்கியத்தின் முன்னோடிகளாக ஈழத்தவர்களே இருக்கப் போகிறார்கள் என்பதை வரலாறு நிரூபிக்கும்." என அவர் கூறுவது கவனிப்புக்குரியது.


கறுப்பு இலக்கியத்தின் கலாசார பின்னணி கட்டுரை பல அரிய தகவல்களைத் தரும் கட்டுரை. பரந்த இலக்கியப் பரப்பைக் கொண்ட ஆபிரிக்க இலக்கியம் பற்றி அது பேசுகின்றது.

**இணுவையூர்**
**சிதம்பரதிருச்செந்திநாதன்**

இலக்கியத்தின் பன் முகத்தன்மைக்கும் விசாலிப்புக்கும் அது பரந்த ஒரு பிரதேசத்தைக் கொண்டதாக அமைந்ததும் ஒரு காரணமாகும்.

"இன்றைய இலக்கிய உலகில் கலைத்துவத்தையும் உயர் ரசனையையும் பேணுபவர்களுக்குச் சில வேளைகளில் இந்நாவல் மிகச் சாதாரணமாகத் தெரியக்கூடும். நிச்சயமாக அவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக தமிழ்க்கவி இந்த நாவலை எழுதவில்லை." அதற்கான நேரமும் அவருக்கு இருப்பதாகத் தெரியவில்லை" என தமிழ்க்கவி அவர்களின் நாவல் தொடர்பாக தாவீது கிறிஸ்ரோ அவர்கள் மிகப் பொருத்தமாகவே சொல்லியுள்ளார்.

## கீரிமலைக்குப் போக....



01:- ஒரு வழிப்பதையாக்கல்லுப் போட்டிருக்கு. அதையும் வெட்டிக் கொண்டு எங்க வேகமாக போறாங்கள்.

02:- கீரி மலைக்கு கல்லுப் போட.



# இளைய நாதம்

## விடுகதைகள்

01) மழைக்காலம் வந்தால் மகராசி பாட்டெடுப்பாள் அவள் யார்?

02) கல்வீட்டுத் தாத்தாமெது வாகத்தான் நடப்பார் அவர் யார்?

03) வயலில் உழுதவன் ஊதியம் வாங்கவில்லை அவன் யார்?

**விடைகள்**
01) தவளை, 02)ஆமை, 03) பென்சில்.

**வி.பிரவீன்**

## சொற்சிலம்பம் - 43

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| றை | தா | தா | ஈ | கூ | வ | சீ |
| ய் | க் | பு | ய் | ழ | செள | பூ |
| வி | ன் | ற | ர | ளை | ரு | வா |
| கை | ன | ய | மா | வ் | த | த |
| மு | சு | உ | ம் | ந் | தா | நோ |
| சி | ல | ரி | தா | ம் | தி | கெள |
| னி | க | மு | ல் | ளீ | ண | ரீ |

கட்டங்களில் காணப் படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் -41 இன் விடைகள்

01. திங்கள்,
02. மதி.

01. கிளி.
02. காகம்.
03. குயில்.

### சொற்சிலம்பம் - 41 இன் பரிசுக்குரியவர்

**க.சமேஸ்சிகா,**
**சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்,**
**புதுக்குடியிருப்பு.**

### சொற்சிலம்பம் - 41 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. த.ஈழநிலா, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு.
02. A.நிரோசி, சின்னக்கடை, மன்னார்.
03. இ.விமலராணி, தருமபுரம், கிளிநொச்சி.
04. யோ.மாலினி, 1ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.
05. இ.தயாநிதி, 172 உருத்திரபுரம் கிளிநொச்சி,
06. க.நாதன், புளியம்பொக்கணை கண்டாவளை.

01. மீனின் வகை மூன்று?
01) ........................................
02) ........................................
03) ........................................

*சொற்சிலம்பம்-43*
*ஈழநாதம்,*
*யாழ் சாலை,*
*கிளிநொச்சி.*


02. அன்னையின் வேறு பெயர்கள்?
01) ........................................
02) ........................................

பெயர் :- ........................................

முகவரி :-........................................

........................................

# எங்கள் சிறுத்தை



உலகத்தின் அதிவேகமாக இயங்கும் அல்லது ஓடும் விலங்கு எது எனக் கேட்டால் சிறுத்தை என உடனடியாகச் சொல்லிவிடுவீர்கள்.

உலகத்தில் அழிவின் விளிம்பில் இது இருக்கின்றது என் பதையும் உங்களுக்குச் சொல்லி வைக்க வேண்டும். ஏன் இதைக் குறிப்பிடுகின்றேன் என்றால் உலகத் திலே மிக வேகமாக ஓடும் சிறுத் தை எமது தாயகத்திலும் அதிவேக மாக ஓடும் விலங்குதான். சிறுத்தை உயரம் குறைந்த வரண்ட காடு களில் தான் வாழும். இலங்கையில் சிறுத்தைகள் அதிகம் இருப்பது எமது தாயகத்தின் வன்னி மன்னார் காடுகளில் தான் .

சிங்கள தேசத்தில் அம் பாந்தோட்டையின் யால, அநுராத புரத்தின் வில்பத்து வனவிலங்கு சரணாலயங்களில் தான் உள்ளன.

கனடிய சிறுத்தை ஆய் வுக்குழு ஒன்று இலங்கைக்கு வந்து இலங்கையில் உள்ள சிறுத்தை கள் உலகின் சிறுத்தை இனங்க ளில் தனித்துவமானவை. இதுவே இலங்கையின் தேசிய விலங்காக இருக்க வேண்டும் என கூறிச் சென்றனர். ஆனால் இலங்கையில் எம் தமிழர் தாயகப்பகுதியிலேயே சிறுத்தை அதிகம் உண்டு. எம்மிடம் உள்ள சிறுத்தை மஞ்சள் உடலில் கறுப்புப் புள்ளிகளைக் கொண்டது. பூனை இன பெரிய விலங்குகளான சிங்கம், புலி போல அல்லாமல்- சிறுத்தை தங்க எந்தக் குறித்த இடமும் தேவை யில்லை. பாறை குன்று, ஒரு திட்டோ, பள்ளமோ, பற்றையோ, மர மோ எங்கும் ஒரு சிறு இடம் சிறுத் தைக்குப் போதும். நமது காட்டு சிறுத்தை, சிறியமான், குரங்கு, மயில், காட்டுக் கோழி, முள்ளம்பன்றி, முயல கள் என்பவற்றை வேட்டையாடி சாப் பிடும். நமது சிறுத்தையின் மூக்குநுனி தொடக்கம் வால் நுனி வரையான நீளம் ஐந்தரையடி. ஆகக் கூடியதாக 8 அடி நீளமான சிறுத்தை உண்டு. நிறை-நூறு கிலோ வரைக்கும் இருக்கும் எங்கடை சிறுத்தைக்குரிய உயிரியல் பெயர் பாந்தரா பார்டஸ் கொட்டியா.


புலிக்குரிய சிங்களப் பெயர் தான் கொட்டியா என்பது உங்களுக் குத் தெரியும்.

புலி, சிங்கம்- பதுங்கிப் பாய்ந்துதான் பிராணிகளை வேட்டை யாடும் ஆனால் சிறுத்தை என்ன செய்யு மென்றால் அது பிராணிகளை வேக மாகத் துரத்திச் சென்று வேட்டையாடும் வேட்டைத்தந்திரம் சிறுத்தைக்குத் தான் கூட இருக்கிறது எண்டும் சொல் வார்கள்.

ஒரு சிறுத்தை 25 கிலோ, 30கிலோ நிறை கொண்ட பிராணி களை வேட்டையாடி அதை இழுத்துத் தூக்கிக் கொண்டு 8 அடிஉயர பாறை யிலும் ஏறும் வல்லமை கொண்டது.

கொஞ்சம் விபரம் கூடி விட்டது போலிருக்கிறது சிறுத்தை பற்றி மேலும் கொஞ்சம் அடுத்த கிழமை பார்ப்போம்.

## நாய் வளர்ப்பு



**ஒருவர்:-** நீங்கள் நாய் வளர்க்கிறீர்களாமே?


**மற்றவர்:-** இல்லையே நான் உணவு கொடுக்கிறேன் அது தானாகவே வளர்கிறது.

## நிலாவே வா

*மெள்ளச் செல்லும் நிலவே வா*
*மிதந்து செல்லும் நிலவே வா*
*துள்ளிக் கொண்டும் நீயோடச்*
*சொல்லித் தருவேன் இங்கேவா*

*பாட்டும் பேச்சும் இல்லாமற்*
*பவனி செல்லும் நிலவே வா*
*பாட்டும் பேச்சுங் கற்றிடலாம்*
*பறந்திங்கிறங்கி வருவாயே!*


*சின்னஞ் சிறிய துண்டமெனத்*
*தேய்ந்து நிற்கும் நிலவே வா*
*தின்னும் பழமும் கறிசோறும்*
*தீற்றியுன்னைத் தேற்றிடுவேன்.*




**ச.வசந்தகலா,**
**பாரதி இல்லம்,**
**வள்ளிபுனம்.**

# யானையின் ஆசை

**பகுதி -01**








# பெரியாச்சியும் சின்னாச்சியும்

நெல் வளமும் பனை வளமும் கடல் வளமும் பெருகி வளர்ந்த மண்வளம் கொண்ட ஊர்தான் பூநகரி, அவ்வூரில் பெரியாச்சி யையும் சின்னாச்சியையும் தெரியாதவர்கள் இல்லை என்றே கூறலாம். இருவரும் கூடிப்பிறந்த சகோதரிகள் அக்காவும் தங்கையும் அன்பால் பிணைக்கப்பட்டவர்கள் மூத்தவள் செல்லம்மா. இரண் டாண்டு இளையவள் வள்ளிப் பிள்ளை அவர்கள் சொந்தப் பெயரை அவர்கள் வயதான ஓரிருவரைத்தவிர வேறுயாரும் அறிந்திருக்கவில்லை. மழலை பேசும் சிறு குழந்தை தொடக்கம் குடுகுடு கிழவர் வரை பெரியாச்சி சின்னாச்சி என்றேஅன்போடு அழைப்பார்கள். தம்மை அன்போடு அழைப்பவர்களை, அரவணைப் பதிலும் உபசரிப்பதிலும் ஏற்படும் இன்பம் சொல்லவே முடியாது. காரணம் இல்லாமல் இல்லை இருவருக்கும் பிள்ளைப்பாக்கியம் என்பதே முயற்கொம்பாகிவிட்டது. தாம் வாழ்ந்த கிராமத்தில் நூற்றுக்கணக்கான குடும்பத்தவரின் அன்புக்கும் அபிமானத்துக்கும் உரியவர்களாய் அவர்கள் பணிவிடைகளை செய்வதில் பரமதிருப்திப் பட்டவர்கள். அவர்களுக்கு முதிசமாகப் பெருந்தொகையான நெற்காணிகளையும் பனந்தோப்புகளையும் கொண்டிருந்ததால் அவர்கள் வீட்டில் கூடத்திலும் தலை வாசலிலும் சிறந்த நெல்லினமான மொட்டைக்கறுப்பன், பச்சைப் பெருமாள், நாலுமொழி, முத்துச் சம்பா வகைகள் கூடையில் நிறைந்திருக்கும் அவர்கள் வீட்டில் புழுக்கொடியல், பாணிப்பனாட்டு, ஒடியல் ஆகிய பனம் பண்டங் களுக்குக் குறைவே இல்லை. எந்நாளும் ஒடியல் பிட்டின் நறுமணம் அவர்கள் இல்லத்தில் வீசிக்கொண்டேயிருக்கும். யாழ் குடாநாட்டில் இருந்து பல வழமையான வாடிக்கையாளர்கள் பனாட்டுக்கும் புழுக்கொடி யலுக்குமாகத் தேடிவருவார்கள்.

பெரியாச்சி வீட்டில் ஒடியல் கூழ் என்றால் அங்கு ஒரு பெரும் கூட்டம், பள்ளிக்குடாக்கடல் விளமீனும், பாரைமீனும் கூழுக்கு உவப்பான கலவாய் மீனும் சங்குப்பிட்டிக்கடல் இறாலும் நண்டும் போட்டு கரிக்கட்டக்குளத்து இராமசாமி தோட்டத்து மரவள்ளிக்கிழங்கும் பயற்றங்காயும் பூதார் பனந்தோப்பு முசுட்டை, அகத்தி வகையும் போட்டு அண்டாவில் பெரியாச்சி காச்சும் கூழை கூடிக்குடித் தவர்கள் வாழ்நாளில் அதன் சுவையை மறக்கவே மாட்டார்கள்.

பனைவடலி ஓலை வெட்டி சிறு சிறு பிளாக்கள் கோலி, தான் வளர்த்த பேரமக்களுடன் சின்னாச்சியும் பெரியாச்சியும் கூழ் குடிக்கும் அழகே அழகு. இரப்போர்க்கு இல்லை என்று சொல்லாது வாரி வழங்கும் இவர்கள் கோவில் கடமைகளை செய்வதிலும் பின்நிற்காமல் கடவுள் நம்பிக்கை கொண்டவர்களாக வாழ்ந்தார்கள். வைத்திய வசதியற்ற அந்தப்பிரதேசத்தில் தாய்மாரின் பிரசவங்களின் போது மருத்துவிச்சிகளாகப் பணிசெய்வதிலும், அக்குழந்தைகளை அழகாக உடல் நலம் மிக்க குழந்தைகளாக வளரச்செய்வதிலும் அவர்கள் ஆற்றிய பணி மகத்தானது. அவர்கள் கைபடாத குழந்தைகளே அரிதெனலாம். குழந்தையின் ஒரு மாத வளர்ச்சி வரை காலிலே பிள்ளையை இருத்தி தாலாட் டுப்பாடி, தலைபிடித்து, மூக்குப் பிடித்து, கை ,கால் எல்லாம் எண்ணெய் தடவிப்பாய்த்தடுக்கிலே கிடத்தி இளவெய்யிலில் பிள்ளையைக் கிடத்தித்தாலாட்டுப் பாடும் பெரியாச்சி இந்தக் கிராமத்துக்குழந்தைகள் எல்லாம் என் பேரப்பிள்ளைகள்தான் என உரிமை கொண்டாடுவாள். பள்ளிவிட்டு வந்ததும் பாணிப் பனங்காய் சூப்புவதற்கு ஓடிவரும் பிள்ளைகளை அன்போடு அரவணைத்து பெரியாச்சியும் சின்னாச்சியும் ஊட்டி மகிழ்வார்கள்.

இவர்களுள் யோகன் என்பவன் மிக நெருக்கமான உறவினன். பெரியாச்சியிலும் சின்னாச்சியிலும் தன் தாயிலும் மேலான அன்பை வைத்திருந்தான். அவர்களுக்கு சிறு சுகயீனம் என்றாலே பொறுக்கமாட்டான். அவர்களும் அவன்மீது தம் உயிரையே வைத்திருந்தனர். ஆச்சிதான் பேரப்பிள்ளைகளுக்கு ஊரின் மகிமைப்பற்றி கதை சொல்வதில் அவர்களுக்கு ஒரு வகை திருப்தி அப்படித்தான் பெரியாச்சி தான் வாழ்ந்த கிராமத்தில் குலதெய்வமாகப் போற்றி வழிபட்டு வரும் சோபாலபிட்டி சித்திவிநாயகர் அருள்பற்றித்தன் பேர மக்களுக்கு எடுத்துக்கூறுவாள். கள்ளிப்பிட்டி என்னும்இடத்தில் நிலத்தின் கீழ் புதை பொருளாய் இருந்த விநாயகர் தன்னை வெளிக்காட்ட விரும்பி அவர் செய்த அற்புதத்தை பேரமக்களுக்குக் கூறி கடவுள் நம்பிக்கையை ஏற்படுத்தினார். எனது பேரமகனான உடையார் இளையதம்பிக்குப் பெருந்தொகையான மாடுகளைக்கொண்ட பட்டி இருந்தது. வயல் வேளாண் மைக்காலத்தில் கள்ளிப்பிட்டி தோட்டக்காணிக்கு இப்பட்டியை நகர்த்துவது வழமை. கள்ளிப் பிட்டியில் பசுக்களில் இருந்து பாலைக் கறந்து பெருங்கலயத்தில் கொண்டு வருவான். தொடர்ச் சியாக ஒருநாள், இரண்டு நாள், மூன்று நாள் ஒரே இடத்திலேயே பாலைக் கொட்டி அழுது கொண்டு வீட்டுக்கு வந்தான் மாட்டுக் காரப்பையன். சினங்கொண்ட உடையார் சிறுவனைத்தாக்கினார். அன்றிரவு கிழப்பிராமண வடிவத்தில் ஒருவர் உடையாரின் கனவில் வந்து "அவனுக்கு ஏன் தண்டனை கொடுத்தாய் என்னை வெளிக்காட்டுவதற்காக உன் பட்டிமாட்டுப்பால் அனைத்தையும் நான் அபிஷேகமாக ஏற்றுக்கொண் டேன். என்னை வெளிக்கொணரும் பணியில் நீயும் உன் சந்ததியும் இறங்கி வெற்றி காண்பீர்களாக." என்று கூறினார். விழித்துக் கொண்ட இளையதம்பி உடையார் மாட்டுக்காரச் சிறுவனுடன் உறவுகளுக்கு விடயத்தைச்

பொன் தில்லைநாதன்

சொல்லி பால் ஊற்றப்பட்ட கள்ளிப்பிட்டிக்குச் சென்றார். "இந்த இடத்தில் தான் பால் ஊற்றப்பட்டது எனச்சொல்லி அழுதான். மூன்று நாட்களும் தொகையான பால் ஊற்றப் பட்டதால் நிலம் கடுமையானதாய் இருந்தது. தைரியமாக உடையாரே மண்வெட்டி கொண்டு இவ் விடத்தை வெட்டத்தொடங்கினார். வயது முதிர்ந்த வேளையிலும் களைப்பு என்பதே தெரியாமல் உற்சாகமாக வெட்டினார். பெரும் அதிசயம் ஒன்று நிகழ்ந்தது. கலீல் என்ற சத்தம் நெருப்புப்பொறி பறந்தது. மண்வெட்டி மடங்கியது" மறைந்திருந்த விக்கிரக தோளின் ஒரு துண்டு வெட்டுப்பட்டதால் உடைந்தது. எல்லோர் கண்களிலும் ஆனந்தக்கண்ணீர் வடிந்தது. மெல்ல மெல்லத் தோண்டி அந்த விக்கிரகத்தை வெளியே எடுத்தார்கள்.

அந்த விநாயக விக்கிரகத்தை பெரும் ஊர்வலமாக எடுத்துவந்து சோபாலப்பிட்டியில் பிரதிஷ்டை செய்தார்கள். அவர் தான் நாம் இன்று வணங்கி அருள் பெற்று வாழும் சோபாலப்பிட்டி சித்திவிநாயகர். பேரப்பிள்ளை ஒருவன் கேட்டான் இது உண்மையான கதையா? பெரியாச்சி நான் கூறுவது கதையல்ல. எங்கள் சித்தி விநாயகரின் உண்மையான கதை நீங்கள் வளர்ந்து இந்தக்கதையைச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டாள். அதுமட்டுமல்ல அவரின் அற்புதம் ஒன்றையும் நான் உங்களுக்குச் சொல்லவேண்டும். "பல ஆண்டுகளுக்குமுன் நெல்வயல்கள் எல்லாம் செழித்து வளர்ந்து குடலை வருவதற்குப் பருவமாய் இருந்த நேரம் வானம் பொய்த்துவிட்டது. மாரிகோடையாகக் காட்சி அளித்த. நெற்பயிர்கள் வாடிவதங்கிக் காட்சி அளித்தன. எம் மக்களே இனி எங்கே மழை பெய்வது. இம்முறை பஞ்சம் தான் என்று பேசிக்கொண்டார்கள். என்னுள்ளம் வெந்தது. விநாயகரை நேந்து தேங்காய் கையிலெடுத்தேன். கோவில் குளத்திலே சென்று முழுகி எழுந்து கோவிலை மூன்று தடவை சுற்றி வந்து தேங்காய் அடிப்பதற்கு ஆயத்தமானேன். பெரியாச்சியின்ர பக்தி இன்று தான் தெரியப்போகிறது என்று மக்கள் பேசிக்கொண்டார்கள். என் கண்களில் இருந்து கண்ணீர் பெருகிஓடியது. வானம் கறுத்தது. குளிர் காற்று வீசியது. எல்லோரும் கண் வெட்டாமல் ஆகாயத் தைப்பார்த்த வண்ணம் இருந் தார்கள். தேங்காய் அடிப்பதும் மழை பொழிவதும் ஒரே நேரத்தில் நிகழ்ந்தது. பெருமழையைத் தாங்க முடியாத உறவுகள் கோவில் மண்டபத்தில் ஓடிச்சென்று ஒதுங்கின். நான் மட்டும் ஒதுங்கவில்லை. மழையும் நின்று விநாயகப்பெருமான் சந்நிதியில் ஆனந்தக் கூத்தாடினேன்." அவர் அருளைச் சொல்லி பெரியாச்சி அழுதார், பிள்ளைகளும் அழுதனர்.

விநாயகரின் அருளில் எவ்வளவு நம்பிக்கை கொண்டி ருந்தாரோ அதேபோல எமது தமிழ்த் தேசம் விடுதலை பெற வேண்டும், சிங்களப்படைகள் எமது தேசத்தில் இருந்து விரட்டிஅடிக்கப்பட வேண்டும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்த பெரியாச்சி பிரபாகரனும் அவரோடு சேர்ந்த போராளிகளும் எமது இரு கண்கள் என அடிக்கடி கூறுவா. அவர்களைப்பாதுகாத்து அவர்களை உபசரித்து அவர்களை உணவு கொடுத்து அனுப்பிவைக்கும் பெரியாச்சியையும், சின்னாச்சியையும் தங்கள் தாய் போல நேசித்தார்கள். இக்கால கட்டத்தில் விடுதலைப்போராட்டம் கூர்மை அடைந்தது. தமிழ்ப் பகுதிகளில் இராணுவ முகாம்கள் விஸ்தரிக்கப்பட்டன. பூநகரி செம்மணக்குண்டுப்பகுதியில் இருந்த பெரிய இராணுவத்தளம் விஸ்தரிக்கப்பட்டது. பூநகரி வாடியடியில் அழகுற அமைந்திருந்த ஒல்லாந்தர் கோட்டை முட்கம்பி வேலிகளாய் பலப்படுத்தப்பட்டு இராணுவ முகாமாக மாறியது. அதன் கிளைகளாக பல காவலரண்கள் சங்குப்பிட்டித்துறை, நாவாந்துறை, பள்ளிக் குடாத்துறைகளில் அமைக்கப்பட்டது. சுற்றி வளைப்புக்களும் கைதுகளும் இடம்பெறத்தொடங்கின மக்கள் சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டது. பீதி கொண்ட தன் உறவுகள் வெளியேற்றத்தைக்கண்டு பெரியாச்சியும் சின்னாச்சியும் அளப்பெரிய கவலை கொண் டார்கள். "தன்மானம் கொண்ட தமிழர் நாம் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த எம் ஊரைவிட்டு வெளியேறினால் எங்கள் நிலைமை என்னவாவது" எங்கள் ஊரை முற்றுகையிட்டு கொடும் செயல்களில் ஈடுபட்டிருக்கும் சிங்களப் படைகளை விரட்டியடிக்க எங்கள் வீர மறவர்களுக்கு நாங்கள் அல்லவா உதவ வேண்டும் இது அவளின் அங்கலாய்ப்பு.

□ □ □

அன்றொருநாள் அதிகாலை வேளை அறுவடை தொடங்கு வதற்கு ஆயத்தமாகி தலைசாய்த்து கூனிக்குறுகி நிற்பது போன்ற ஒரு காட்சி ஏதோ சோக நிகழ்வு நடைபெறப் போகின்றது என்பதைக்காட்டி கண்ணீர் சொரிந்து நிற்கின்றனவா அந்த நெற்கதிர்கள். பரந்த வயல் வெளி பாங்கான புற்தரை நடுவே பெருங்கடல் போலக் காட்சியளிக்கும். ஆனைப்பாப்பான் குளம் ஒல்லாந்தர் கோட்டையில் இருந்து பார்க்கும் போது அழகான காட்சியாகத்தென்படும் அந்தப்பிரதேசம் அன்று காலை அங்கே சரமாரியாக வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. கோட்டை மேற் தளத்தில் இருந்தும் குண்டுகள் குளக்கரையை நோக்கிப் பாய்ந்தன. அவ்வயல் வெளிப்பிரதேசத்தின் ஊடாக பூநகரியின் முதல் முத்து விடுதலைப்போராளி குமா இனத்துரோகி ஒருவரால் காட்டிக் கொடுக்கப்பட்டு சுற்றிவளைக் கப்பட்ட நிலையில் மறைந்து மறைந்து வேட்டுக்களில் இருந்து தான் தப்பிக்கொள்ள முடியாது சுற்றிவளைத்த இராணுவம் அவனை நெருங்கிக்கொண்டு இருந்தது. உயிரோடு பிடிபடக் கூடாது என்று உறுதியாக முடி வெடுத்தான். தேசத்தை நேசித்தவன் தன் தலைவனை நினைத்தான். தான் கொண்ட கொள்கையே பெரிதென்று எண்ணினான். பச்சைக் கம்பளப் படுக்கை போல் இருந்த புற்தரையில் பல தடவை புரண்டு புரண்டு தன்னைக் காப்பாற்றிய குமா சைனற் குப்பியை வாயில் கடித்தான். உயிரற்ற அவன், வித்துடலை சிப்பாய்களின் குண்டுகள் துளைத்தன. ஓராயிரம் வேட்டுக்களைத் தீர்த்து தம்பசியைத்தீர்த்துக்கொண்டார்கள். விடுதலை வேங்கை குமாவின்

(21ஆம் பக்கம் பர்க்க)

## கதிர்காமர்



ஒருவர்:- கதிர் காமர் ஏன் முன்னுக்குப் பின் முரணாகவே பேசுகிறார்?

மற்றவர்:- அவரே முரண் தான் பெயரிலதமிழ் செயலில் சிங்களம்.

# “ஆடு – நின்றால் பால் செத்தால் இறைச்சி”

மண் அகழ்வு அல்லது மணல் திருட்டுப்பற்றி கண்டனங்களும் அறிவுறுத்தல்களும் எதிர்ப்பு நடவடிக்கைகளும் தினமும் வந்து கொண்டும் நிகழ்ந்து கொண்டுமிருக்கின்றன. ஆனாலும் மண் அகழ்வுகள் இன்னும் நின்றபாடில்லை. ஒழுங்கான முறையில், திட்டமிடப்பட்ட அடிப்படையில் மண் அகழ்வுகள் நடக்கவும் இல்லை.

வசதிப்படுகிறமாதிரி, நினைத்த மாதிரி, விரும்பியமாதிரி, வேண்டிய மண்ணை ஏற்ற வேண்டியது தான் யாரென்ன சொன்னாலென்ன யார்தான் தடுத்தா லென்ன என்ற மாதிரியான ஒரு அலட்சியப் போக்கில் மண் அகழ்வு தொடர்ந்து கொண்டிருக்கிறது.

சில இடங்களில் சனங்கள் தமது பகுதிகளில் மண் அகழ்வதைத் தடுத்திருக்கிறார்கள். சில இடங்களில் அப்பகுதியிலுள்ள சில அமைப்புக்கள், நிறுவனங்கள் மண் அகழ்வைத் தடுக்கின்றன.



சில இடங்களில் பிரதேச சபையினர் தடுக்கிறார்கள். ஆனால் இவையெல்லாம் ஒழுங்கமைக்கப்பட்ட, நடைமுறைப் பலம் வாய்ந்த செயற்பாடுகளல்ல.

மண் அகழ்வு பற்றிய அறிவோ, மண் அகழ்வால் ஏற்படுகிற பாதிப்புக்களோ தெரியாத அறிவீனம் ஒரு புறம். என்ன தான் பாதிப்பு வந்தாலும் எமக்கென்ன? ஏற்றக்கூடிய சந்தர்ப்பத்தில் ஏற்றி உழைக்கக்கூடிய வேளையில் உழைத்துப் பணத்தை - பொக்கற்றை- நிறைத்து விடுவோம் என்ற சுயநலத்தனம் மறுபுறம்.

எப்படி இருந்தாலும் எங்கள் சூழலில் மண் அகழ்வால் ஏற்படும் பாதிப்பு நாளுக்குநாள் அதிகரித்தே வருகிறது.

ஆற்றில் மண்ணைக் கண்டபடி அள்ளிப்போகிறார்கள். இது ஆற்றோர மரங்களை வீழ்த்திவிடுகிறது. சில இடங்களில் ஆற்றின் போக்கையே மாற்றிவிடுகிறது. ஆறு பள்ளமாகும்போது அதன் அயல் விளிம்புகள் அரிபடுகின்றன. நீர் பள்ளத்தை நோக்கிவரும்போது மண்ணரிப்பு மிக மோசமாகிறது.

சில இடங்களில் வீடு கட்டுவதற்கென வெண்மணலை அள்ளுகிறார்கள். மண்ணுக்காகவே சில இடங்கள் உள்ளது போல அந்தப் பகுதிகளுக்கு வாகனங்கள் வரிசையாகப் போகின்றன.

மண்கும்பான், நாகர்கோவில், மணற்காடு, அல்லிப்பளை, இயக்கச்சி, பூநகரி, வட்டக்கச்சி, முறிகண்டி என இந்த இடங்களில் எல்லாம் மண் கொள்ளை நடக்கிறது.

இந்த இடங்களை யாராவது பார்த்தீர்களானால் காயப்பட்ட நிலங்களாக, சிதைந்துபோன புண்களாக தோற்றமளிப்பதைப் பார்ப்பீர்கள். இந்த இடங்களின் நிலக்காட்சியே மாறிவிட்டது. அழகே தொலைந்து போயிற்று.

மண்ணை வெட்டியேற்றும்போது கூட ஒழுங்காக ஒரு வடிவத்தில் அதாவது பயன்பாட்டுக்கேற்ற மாதிரி நிலத்தை ஆழப்படுத்துவதில்லை. அங்குமிங்குமாக அகழ்ந்து சகிக்கமுடியாத அளவுக்கு பாழ்படுத்திவிடுகிறார்கள் இந்த மண்கொள்ளையர்கள்.

இது ஓருபக்கமென்றால் மறுபக்கத்தில் வீதி புனரமைப்புக்கென்று மண் அகழ்வோரின் அநியாயம் ஆக மோசமானது. தாங்கள் பொறுப்பெடுத்த ஒப்பந்த வேலைகளை இலாபமாகவும் விரைவாகவும் முடித்துவிடுவதுதான் இந்த ஒப்பந்தகாரர்களின் பிரதான நோக்கம். அதற்காக அவர்கள் எங்கேயானாலும் எதையும் செய்யவும் தயார் என்பது போலத் தான் செயற்படுகிறார்கள்.

வீதிக்குப் போடுவதற்கான மண்ணை எங்கே எந்த அளவில் எடுப்பது என்ற அறிவுறுத்தலும் வழிகாட்டலும் இல்லாமல் தங்கள் பாட்டுக்கு அள்ளுகிறார்கள்.

விசாரித்துப்பார்த்த அளவில் வீதிப் புனரமைப்புக்கு மண் எடுப்பதற்கென ஒதுக்கிக் கொடுக்கப்பட்ட இடங்களில் தான் இப்பொழுது மண் அகழப்படுகிறது என்று தெரிகிறது. ஆனால் அந்த இடங்களை எந்த அடிப்படையில் தெரிவுசெய்தார்கள் என்றுதான் தெரியவில்லை.

இதில் சில இடங்கள் தொல்லியற் பரப்புகளாக அடையாளம் காணப்பட்டவை. சில இடங்கள் வனவள அபிவிருத்திக்குரியவை. சில இடங்கள் பிறிதொரு சந்தர்ப்பத்தில் அபிவிருத்தி செய்யக்கூடியவையும் செய்யப்பட வேண்டியவையும்.

சரி, அப்படியான நன்நோக்க அறிவுடனும் தூரப்பார்வையுடனும் தான் இந்த இடங்கள் ஒதுக்கப்படவில்லை என்றாலும் அங்கே, அகழப்படும் இடங்களில் என்ன சீர் முறையில் மண் எடுக்கப்படுகிறது?

புதிதாக வந்திருக்கும் மண் அகழ்வு பெரிய இயந்திரங்கள் கண்டபாட்டுக்கு நிலத்தைத்தோண்டுகின்றன.

இவ்வாறு மண் அகழப்படும் பகுதிகளைச் சரியாகத்தெரிவுசெய்து அங்கே ஒழுங்கான முறையில் மண்ணை அகழ்ந்தால் அந்த இடங்களை சிறிய நீர்த்தேக்கங்களாக்கலாம்.

சில இடங்களைக் குறிப்பாக மேடான பகுதிகளை சமப்படுத்தலாம்.

இதற்கு துறைசார்ந்த - புவியியல் மற்றும் மண்ணியல் - சூழலியல்- பொது நோக்குச் சிந்தனையுடைய கவனிப்புடன் உடனடி நடவடிக்கை அவசியம்.

முதலில் இதற்குரிய பொறுப்பை அரசாங்க அதிபரும் பிரதேச சபையினரும் உணரவேண்டும்.

முன்னர் A9 வீதிப்புனரமைப்புக்கென மண் அகழப்பட்ட இடங்கள் அப்போது காடுகளாக இருந்த பிரதேசம். ஆனால், அவை இப்பொழுது சனச்செறிவுள்ள இடங்களாக மாறிவிட்டன.

உதாரணமாக கிளிநொச்சியில் 154,155 ஆம் கட்டைப் பகுதிகளைப் பார்க்கலாம்.

முன்னர் வீதியை நிர்மானிப்பதே முதன் நோக்கமாக இருந்தது. அதற்காக வீதியின் அருகாக இருந்த இடத்தில் மண்ணை அகழ்ந்தார்கள். இப்போது வீதியின் அருகாக 50 மீற்றருக்குள்ளேயே பாரிய குழிகளும் மேடு பள்ளங்களுமாக அந்தப் பகுதி மாறிவிட்டது.

இன்று அந்தப் பகுதியை சீராக்க அங்கிருக்கும் மக்கள் படும் சிரமங்கள் கொஞ்சமல்ல.

அன்றைக்கு வீதியை நிர்மானித்தவர்கள் சிரமமில்லாமல் இலாபத்தோடு காரியத்தை முடித்துவிட்டார்கள்.

இப்பொழுது வீதியருகாக கிடங்குகள் இருப்பது வீதிக்கும் பாதிப்பு அந்தப்பகுதியின் வளர்ச்சிக்கும் புழக்கத்துக்கும் பாதிப்பு.

154,155 ஆம் கட்டைப் பகுதிகளில் மட்டும்தான் இப்படி மண்கொள்ளை நடந்தது என்றில்லை. A9 வீதி நெடுகவும் கொக்காவில், முறிகண்டி, மாங்குளம், உமையாள்புரம் என்று பல இடங்களிலும் இந்த அநீதியின் அடையாளங்களைக் காணலாம்.

எப்போதும் எங்களிடையே பல வற்றுக்குமான சோம்பேறித்தனமும் விளைவுகளைப் பற்றிய பார்வையுமிருப்பதில்லை. வளர்ச்சி குறித்த ஆர்வமும் இருப்பதில்லை. “ஆடு நின்றால் பால், செத்தால் இறைச்சி” என்ற மனோபாவம்தான் வளர்ந்திருக்கிறது. தங்கள் காலத்தில் தங்களுடைய காரியங்கள் நடந்தால் சரி என்ற நிலைதான் பெருகியிருக்கிறது. எப்போதும் ஏன் இந்த அவலம் எம்மைச் சூழ்ந்திருக்கிறது?

**வெளிவாசல்பாலன்**

---

**(13ஆம் பக்கத் தொடர்ச்சி)**

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

இடத்தின் மீதே பாரிய அடிவிழப் போகின்றது என்று பல வழிகளில் பொய்த்தகவல்களைப் பரப்பும் நடவடிக்கைகளை நேச நாடுகளின் புலனாய்வு சமூகத்தினர் மேற்கொண்டனர். இப்பொய்யான தகவல்களின் மூலங்கள் சற்றும் சந்தேகமற்ற நம்பத்தகுந்த மூலங்களாக ஜேர்மனிய உயர்பீடத்தை ஏற்றுக்கொள்ளவும் வைத்தனர்.

நேசநாடுகளின் படைகளின் “நோமண்டி” தரையிறக்கம் வெற்றிகரமாக அமைந்தது. இதற்கு பொய்த்தகவல் பரப்புதல் பிரிவு கணிசமான பங்கினை ஆற்றியுள்ளது.

இவையனைத்தும் “பொய்த்தகவல் பரப்புதல் பிரிவை” வலுமிக்க போராயுதமாக நாடுகள் பயன்படுத்தி வருவதனை தெள்ளத்தெளிவாக நாங்கள் புரிந்துகொள்ள முடிகிறது. இருப்பினும் மேலும் பொய்த்தகவல் பரப்புதல் தொடர்பாக ஆழ்ந்து ஆராயும் போதுதான் தமிழர்கள் தம் தேசியப்பலத்தைப் பாதுகாப்பதற்கான உச்சவிழிப்புநிலை தேவைபற்றி உணர்ந்துகொள்ளமுடியும்.

தமிழர்தாய கம், தமிழின ஒருமைப்பாடு அனைத்தினையும் சிதைப்பதையே இலக்காகக் கொண்ட பொய்த்தகவல் பரப்புதல் பிரிவை சிறிலங்காப் புலனாய்வு அமைப்பு நீண்டகாலம் தொட்டு முனைப்போடு இயங்கி வருகின்றது.

தமிழர்களின் குழப்பத்தின் ஊடாக நன்மை அடைய விரும்புகிற இப்பிரிவு வெளியிட்டுள்ள ஒரு சில துண்டுப் பிரசுரங்களை இங்கு உன்னிப்பாகப் பார்ப்போம்.

“யாழ். பல்கலைக்கழக மாணவ மாணவிகளே...!” என்ற தலைப்பிலான பிரசுரத்திலுள்ள உள்ளடக்கக் கருத்துக்கள் யாதெனில், வன்னிப் பகுதி மாணவர்கள் புலிகளின் அறிவுறுத்தலுக்கமைய வந்தவர்கள். இவர்கட்கு நிதி LTTEயினாலே கொடுக்கப்படுகின்றது என குறிப்பிடப் பட்டிருந்தது.

இன்னொரு பிரசுரம் “உண்மை வெளியாகின்றது” என்கிற தலைப்பிலுள்ள உள்ளடக்கம் இப்படி எடுத்துச்சொல்கின்றது. அதாவது ஜயசிக்குறு சமர்களின் போது காயப்பட்ட போராளிகளைச் சுட்டுக் கொல்லும் படி புலிகளின் தலைமை உத்தரவு.

இதே காலப்பகுதியில் பிறிதொரு துண்டுப்பிரசுரமானது மட்டக்களப்பு போராளிகளின் பெற்றோர்களை குழப்பும் தகவல்களைத்தாங்கி வெளியானது.

இவ்வாறான எண்ணற்ற பொய்த்தகவல்களை நாளுக்கு நாள் பரப்பி தமிழ் மக்களிடையேயான நம்பிக்கைகளைச் சிதைக்கவும், பீதிகளை உண்டு பண்ணவும், குழப்பங்களை உருவாக்கவும் மொத்தமாக தமிழர் தாயகப்பகுதிகளைத் தொடர்ந்தும் பதற்றமான, குழப்பமான நிலையில் வைத்திருப்பதிலும் சிறிலங்காப் புலனாய்வு அமைப்புப் போதிய கவனம் செலுத்துகின்றது.

இதுவரைக்கும் சொல்லப்பட்ட விடயங்கள் அனைத்தினையும் ஆராய்ந்தால் பொய்த்தகவல் பரப்புதல் பிரிவை இலேசானதாக கருதமுடியாது. அவைகள் அனைத்தும் தமிழரின் போராட்டத்தின் அடித்தளத்தை வீழ்த்த எத்தனிக்கும் தீய குறிக்கோள்களாக இருக்கின்றன.

ஆதலால் பொய்த்தகவல் பரப்புதல் பிரிவினரால் வெளியிடப்படுகின்ற தகவல்களை இனம் காணாமல் தமிழர்கள் முட்டால்தனமாக மடத்தனமாக இன்னும் அப்பொய்த் தகவல்களுக்கு உயிர் கொடுக்கின்ற மனநிலையானது எதிரியின் துஷ்ட நோக்கங்களுக்கு சாதகமாக அமையும் இதனை உணர்ந்து தமிழர்கள் ஒரு முறைக்குப் பலமுறை சிந்தித்து தம் மனதை விழிப்பு நிலையில் வைத்திருக்கவேண்டிய கடப்பாடு ஒவ்வொருவருக்கும் உண்டு. அதுவே பார்வை வழி ஊடகங்கள் நவீன தொழில்நுட்ப ஊடகங்கள் வெளியிடும் பொய்த்தகவல் பரப்பும் தந்திரோபாய நடவடிக்கையை தோற்கடிக்கும்.

இந்த உண்மையை தமிழர்கள் புரிந்து கொண்டு தாம் மனோபலமுள்ளவர்களாக வாழும் போது தமிழர் தேசம் வல்லமை கொண்ட தேசமாக உருவாகும்.

### மறுபிறவி



ஒருவர்:-
மறுபிறவி எடுத்தால் என்று எதைச் சொல்லுகிறார்கள்?

மற்றவர்:-
A-9 வீதியில் தப்பிவிட்டு போறதைச் சொல்லுகிறார்கள்.




சாதனா:-

இருபத்து மூன்று வயதில் நிறுவனமொன்றில் வெறும் கணக்கு எழுதுபவளாக வேலைக்குச் சேர்ந்தாள்.

நேர்மையானவள் ஒழுக்கமானவள்- பற்றுறுதி மிக்கவள். பத்துவருடங்களில் அவள் கணக்கு ஆய்வாளராக உயர்ந்தாள். நிறுவனத்துக்கு அண்மையாக சிறிய கடை வைத்திருக்கும் முகுந்தனுக்கும் அவளுக்குமிடையே காதல். எதிர்ப்பதற்கு எவருமில்லை. காதல் திருமண பந்தமாயிற்று.

# வெறுமைச்சிறையுள் வாடுபவர்கள்...

திருமணத்தின் பின் சாதனா வேலையை விட்டுவிட்டாள். அவளுக்கு ஒரு பெண்குழந்தை இருக்கிறது. குழந்தையைப் பராமரிப்பதற்குக் கூடவே அம்மாவும் இருக்கிறாள். அப்போ இவளுக்கு வேலை?

சந்தைக்குப் போவது.... அண்மையிலுள்ள நூலகத்தில் நாவல்கள் எடுத்து வந்து படிப்பது.... இரவில் படம் பார்ப்பது.... ஏன் வேலையை விட்டாள் சாதனா?

அவளே சொன்னாள்.

'அவருக்கு நான் வேலைக்கு போறது விருப்பமில்லை?...'

'ஏன் விருப்பமில்லை?...'

'ஏனெண்டு தெரியவில்லை... ஆனா... அவர் சின்னனா கடைதானே வைச்சிருக்கிறார்.... நான் உத்தியோகம் பார்க்கிறது... அவற்ற மனதை உறுத்துது போலை எண்டு நினைக்கிறன்...'

'உங்களுக்கு வேலைக்குப் போகிறது விருப்பமில்லையா?.....'

'எனக்குச் சரியான விருப்பம்... தொடர்ந்து வேலை செய்திருந்தா நான் கணக்காளராகியிருப்பன்.....'

அவள் குரலில் வருத்தம் தொனித்தது.

'வேலைக்குப் போகவேணும் எண்டு அவரிட்ட சொன்னதில்லையா?...' உனக்கும் பிள்ளைக்கும் சோறு போட என்னால ஏலும் ...நீ உழைச்சுக் குடும்பத்தைப் பாக்கவேணுமென்றில்லை... எண்டவர்....' தன் கனவுகள் - ஆளுமைகள் சிதைந்து போன துயரம் அவள் மூச்சில் கலந்திருந்தது. பெண் வருமானத்துக்காக மட்டும் தானா வேலைக்குப் போகிறாள்? அவள் தன் ஆற்றலை வெளிக்காட்டவும், ஆளுமைகளை நிரூபிக்கவும் வாய்ப்புகளில்லையா?

எத்தனை நாட்கள் ரமணிச்சந்திரனுடனும், சினிமாவுடனும் காலத்தை ஓட்டுவது? கணவனோ கடும் உழைப்பாளியாக மாறிவிட்டான். தனியாக மிகவும் கஷ்டப்பட்டு உழன்று கொண்டிருந்தான். சாதனா பணியிலிருந்து சுயவிருப்பில் விலகி- இரண்டு வருடங்கள் ஆகின்றன. ஆனால்- சிறகு விரித்துப் பறக்கத் துடிக்கும் அவள் மனது இன்னமும் அந்தரித்துக் கொண்டுதானிருக்கிறது.

வேலைக்குப் போகப் போவதாகத் தான் அடம்பிடித்து -ஆனால் தனது குடும்ப உறவில் விரிசல் ஏற்பட்டுவிட்டால் என்ன செய்வது என்பது சாதனாவின் பயம். காலங்காலமாக பெண் அடங்கிவாழவே சபிக்கப்பட்டவள். ஆகவே என் சட்டங்களுக்கு அவள் கட்டுப்பட்டவள் என அவளின் துணைவன் நினைக்கலாம்.

ஆனால் சமூகத்தின் உறுப்பினர்களான இவர்கள் தாங்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு ஒருவரை ஒருவர் முன்னேற்ற முயலவில்லை. 'ஏன்?....'

காலாதி காலமாய் கணவன் மனைவிக்கு ஆண்டான்- அடிமை என்கின்ற உறவையே கற்பித்து வந்த சமூக அமைப்பு முறை இவர்களையும் அந் நிலையிலேயே வைத்திருக்கின்றது. இவர்களின் மனங்கள் மாறவேண்டும்.

அப்படியென்றால்.....

சிந்தனைகள் மாறவேண்டும்.....

ஆணாதிக்க சிந்தனைக்குட்பட்ட சமூக அமைப்பு தகர்ந்து போகவேண்டும். ஆணும் பெண்ணும் அனைத்துப் பேதங்களையும் கடந்து -முரண்கள் களைந்து - மாற்றங்களுக்காகக் கடுமையாகப் பாடுபட வேண்டும்.

'ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்

அறிவிலோங்கியிவ் வையம் தழைக்குமாம்' என்பது பாரதியின் தீர்ப்பு.

சாதனாக்கள் பலர் மனதுள் கண்ணீர் சிந்தியபடி.... காலத்தை நகர்த்துகிறார்கள்......

வெல்லும் திராணியற்று வெறுமையில் சிறைப்படுகிறார்கள்... இவர்கள் புரிந்து கொள்ளப்பட வேண்டும். இவர்களும் புரிந்து கொள்ள வேண்டும். புரிந்துணர்வே அதுவும் பரஸ்பர புரிந்துணர்வே எல்லாச் சிக்கல்களுக்குமான தீர்வாக அமைகிறது.

ஆதிலட்சுமி சிவகுமார்.



## முருங்கைக்காய் இறைச்சிக்குழம்பு




இறைச்சி - 300கிராம்
பிஞ்சு முருங்கைக்காய் - 03
மல்லி - 10 கிராம்
மிளகாய் - 06
எண்ணெய் - 1தேக்கரண்டி
கறிவேப்பிலை - சிறிதளவு
புளி - சிறிதளவு
மஞ்சள் - 15 கிராம்
சோம்பு - சிறிதளவு
உப்பு - தேவையான அளவு.

இறைச்சியை போதுமான அளவில் துண்டுகளாக நறுக்கிக் கழுவிக்கொள்ளவும். முருங்கைக்காய்களை எடுத்து அவற்றின் மேல் கீழ் முனைகளை நறுக்கிவிட்டு, எஞ்சியவற்றை துண்டுகளாக அரிந்துபோட்டுத் தண்ணீரில் கழுவியெடுத்துக் கொள்ளவும். பிறகு ஒரு பாத்திரத்தை அடுப்பில் வைத்து 200மி.லீ. தண்ணீரை ஊற்றிக் கொதிக்கவைத்து ஆட்டுஇறைச்சியையும் முருங்கைக்காயையும் அதில் போட்டு வேகவைக்கவும். இரண்டு வெங்காயங்களையும் அத்துடன் நறுக்கிப் போடவும்.

இன்னொரு பாத்திரத்தில் 100மி.லி. தண்ணீரை ஊற்றி, புளியை அதில் ஊறவைத்து நன்றாகக் கரைத்து வடிகட்டிக் கொள்ளவும். மல்லி, மிளகாய் ஆகியவற்றைத் தனித்தனியே வறுத்து அம்மியில் வைத்து அரைத்துக் கொள்ளவும்.

பிறகு மஞ்சளையும் அம்மியில் வைத்து அரைத்துக் கொள்ளவும். இந்த இரண்டு கலவைகளையும், வடிகட்டிவைத்துள்ள புளியின் கரைசலோடு கலந்து, போதிய அளவு உப்பைப்போட்டு, ஒரு துளியளவு எடுத்து ருசிபார்க்கவும். கறி வெந்து மிருதுவானதும் சட்டியைக் கீழே இறக்கிவைக்கவும்.

இன்னொரு பாத்திரத்தில் எண்ணெயைக் காயவைத்துச் சோம்பைப் பொன்நிறமாக வறுக்கவும். சோம்பு வறுபட்டதும் மீதமுள்ள ஒரு வெங்காயத்தையும் நறுக்கிப்போட்டு, அதனையும் சிவக்க வறுக்கவும். பிறகு இரண்டுமே சிவந்த நிலைக்கு வந்ததும் சிறிதளவு கறிவேப்பிலையை அதில் போட்டுப் பொரிக்கச்செய்து கறிக்குழம்பில் ஊற்றித் தாளித்து விடவும்.

தாளிப்பு செய்ததும் குழம்புச் சட்டியை மீண்டும் அடுப்பில் வைத்து இலேசாகக் கொதிக்க வைத்து இறக்கி விடவும்.

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு இப்பகுதிக்கு நீங்கள் ஆக்கங்களை எழுதி அனுப்பலாம்.*

*அனுப்பவேண்டிய முகவரி:*

***வீடு,***
***வெள்ளிநாதம்,***
***ஈழநாதம்,***
***யாழ்சாலை,***
***கிளிநொச்சி.***

## இப்படிச் செய்யலாம்...

எலுமிச்சம்பழத்தைச் சிறிது நெருப்பு அனலில் வாட்டி எடுத்துப் பிறகு பிழிந்தால், அதில் இரண்டு மடங்குச் சாறு கிடைக்கும். நெருப்பு அனலில் வாட்டுவதால் எலுமிச்சம் பழம் கெட்டுப் போகாது.

□கோதுமை மாவை ரொட்டிக்காகப் பிசையும்போது, கொஞ்சம் நெய் அல்லது நல்லெண்ணெய்யைக் கலந்து பிசையவேண்டும் பிசைந்து அரைமணி நேரம் அதை அப்படியே வைத்திருந்து, பிறகு அதைப் பயன்படுத்துங்கள். ரொட்டி மிருதுவாக இருக்கும் சுவையாக இருக்கும்.

# அறைக்குரிய வண்ணங்கள்

சுண்ணாம்புச் சாந்து பூசிச் சுவர்களைப் பளபளப்பாக்கியகாலம் போய்க் கண்ணைப்பறிக்கும் பல வண்ணப் 'பெயிண்ட்'கள் வந்து விட்டன. இவை அறைகளுக்கு மட்டுமா வண்ணமேற்றுகின்றன - நம் வாழ்வுக்கும் தான்...

அறைகளின் பயன்பாட்டைப் பொறுத்தே வண்ணங்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். சமையலறைக்கு வெண்மையும், படுக்கை அறைக்குச் சிவப்பையும் யாரும் தேர்வுசெய்யமாட்டார்கள்! படுக்கை அறைக்கு இளம் நீலம் அல்லது இளம் பசுமை நல்லது வரவேற்பு அறைக்கு ஐவரி அல்லது உடைந்த வெண்மை சிறந்தது. வரவேற்பாறையை கொஞ்சம் அதிகமான அழுத்தத்தைக் கூட்டலாம். வெயிலும் மழையும் காற்றும் தாக்கும் இடங்கள் ஆகையால் நாளடைவில் நிறம் மங்கக்கூடும் அல்லவா?

சமையலறைக்கு வெண்மையும் படுக்கை அறைக்குச் சிவப்பும் வேண்டாம் என்று ஏன் சொல்கிறார்கள்? அவற்றின் பயன்பாட்டுக்கு இவை மாறானவை. எதிர்விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவை.

சிவப்புக்குக் கண்களைக் களைப்படையச் செய்யும் தன்மையும் உண்டு. தொடர்ந்துபார்த்தால் சலிக்க வைக்கும். உறுத்தும். ஆகவே கூடுமான வரை சிவப்பைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்: சிறிய 'கோடுகளுக்குப்' பயன்படுத்தலாம். இதற்கு மேலாகச் சிவப்பைப்பயன்படுத்துவது நரம்புகளுக்குப் பளுவைக்கூட்டும்! அமைதியின்மையும் மனச்சோர்வும் ஏற்படும்!

பொதுவாக எல்லா வண்ணங்களுமே மனத்துக்கு உற்சாகம் தரக் கூடியவையே - அளவாகப் பயன்படுத்தும் வரை! மனரீதியாகவும் மகிழ்ச்சி அளிக்கும். இவற்றிற்கு 'முப்பரிமாணமும் உண்டு. குளிர்ச்சியையும் வெப்பத்தையும் தரும் தன்மையும் உண்டு. சில வண்ணங்கள் ஒளியைக்கூட்டும் - உதாரணம் தூயவெண்மை! கண்களுக்கும் மனத்திற்கும் இதமாக இருக்கும். எல்லாவற்றையும் விட நீங்கள் தவறில்லாமல் தேர்ந்தெடுக்கும் வண்ணங்கள் உங்களுடைய ஆளுமையையும் மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லும்!

சில வண்ணங்கள் சில தனி விளைவுகளையும் ஏற்படுத்தும்: செவ்விளநிக்கலரும் சிவப்பும் நம் உள்ளுணர்வு களைத் தூண்டும்: நீலம் கண்களுக்கும் மனத்துக்கும். குளிர்ச்சி: பச்சை புத்துணர்ச்சிக்குப் பெயர் பெற்றது. மஞ்சள். நாம் அறிந்தபடி. மங்களகரமானதுதானே...!

இந்த அடிப்படையில் அறை வர்ணங்களை நீங்கள் தேர்வு செய்தால். ஏறக்குறைய இப்படி அமையலாம்.

**படுக்கை அறை:** உறக்கத்துக்கும்/அமைதிக்கும் ஓய்வுக்கும் உரிய இடம்: ஆகவே பச்சை. நீலம். பச்சைகலந்த நீலம். கலவை வர்ணங்கள் ஏற்றவை.

**சமையல் அறை:** புகை இல்லாவிட்டாலும் வெப்பத்தால்பழுப்பு அடையும்: புகைப்பச்சை. நீலம். போதும்!

**குளிக்கும் அறை:** நம் புத்துணர்ச்சியின் தொடக்க அறை: ஆகவே வெள்ளைநல்லது.

**வரவேற்பு அறைக்குத் தனிக் கவனம் தேவை:** பலருடைய பார்வையைப் பற்றி இழுக்கும் அறை இது. மென். பச்சை. செவ்விளநிக்கலர். மஞ்சள் மனநிறைவைத் தரும்.

இந்த அடிப்படையில் பார்த்தால். ஓர் அறையின் சுவர் வண்ணத்தைக் கொண்டே அது என்ன அறை என்பதை உங்களால் கூறிவிட முடியும்! பொதுவாக . உங்கள் இல்லம் இனிய இல்லமாக இருக்கவேண்டுமானால். அமைதி சமாதான உணர்வுகளைத் தூண்டும் வண்ணங்களை - அதுவும் மென் கலவைகளாகத் தேர்வு செய்யுங்கள். இவை பிரகாசத்தை அறைகளுக்கும் உற்சாகத்தை உங்களுக்கும் கட்டாயம் தரும்.




குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர். நீங்கள் செய்ய வேண்டியது கீழ்காணும்கூப்பனை நிரப்பி தபாலட்டையில் ஒட்டி எமக்கு அனுப்பவேண்டும். அனுப்பி வைக்கப்படும் கூப்பன்களில் குலுக்கள் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது. உங்கள் கூப்பன்களை வெள்ளிநாதத்திற்கு அனுப்பிவையுங்கள்.

குமரகுரு பரிசுத்திட்டம்—04

பெயர்:.........................................

முகவரி:.......................................

.......................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.



# பொருண்மிய வாசல்

சென்ற மாதம் முழுக்க சூழல் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளில் எல்லோரும் ஈடுபட்டார்கள். இயல்பான வாழ்வுக்கு உணவு, உடை, உறையுள் என்பது போல இவை எல்லாவற்றையும் ஒன்றிணைக்கும் சூழலும் முக்கியமானது என்பதை நாம் அனைவரும் அறிவோம். எமது சூழலைப்பாதிக்கும் பல்வேறு காரணிகளில் முக்கியமான ஒரு காரணியாக பிளாஸ்ரிக் பொருட்கள் உள்ளதை யாவரும் உணர்வர். "பிளாஸ்ரிக்" பல்வேறு வகையான பாவனைப் பொருட்களாகி நமது அன்றாட வாழ்க்கையின் ஒவ்வொரு தேவையிலும் பங்கு கொள்கின்றது. அதன் காரணமாக 'பிளாஸ்ரிக்' பொருட்களின் கழிவு வகைகள் அதிகரித்து கொண்டே போகின்றன.

## எங்கள் பொருண்மிய வளம்

**சிதம்பரதிரு**

"பிளாஸ்ரிக்"கை மூலப்பொருளாகக் கொண்ட பாவனைப் பொருட்களை, ஏனைய பொருட்களை இங்கு பட்டியல் இட்டுக்காட்டுவது அவசியமில்லை. ஆனால் நாம் பாவித்த ஓலை, மரம், இரும்பு ஏனைய உலோகப் பொருட்கள் என்று சகலவற்றிற்குமே 'பிளாஸ்ரிக்'தான் மூலம்.

பிளாஸ்ரிக்கின் தனித்தன்மைகள் என்று பலவற்றைக்கூறலாம். பிளாஸ்ரிக் இலேசானது தண்ணீரில் கரையாது, துருப்பிடிக்காது, மக்கிப் போகாது என்பன அவற்றில் சில.

மக்கிப்போகாத தன்மை அதன் முக்கியமான சிறப்பு அம்சமெனில்



அதுவே அதனது பிரதான அபாயகரமான தொழிற்பாடாகவும் அமைகின்றது என்பதை எங்களில் எத்தனை பேர் உணர்ந்து கொள்கின்றோம்.

மண்ணில் உள்ள பக்ரீறியாக்கள் பங்கசுக்கள் போன்ற நுண் உயிா.களின் செயற்பாட்டினால் பொருட்கள் சிதைந்து அழிவது பொது இயல்பு. இதனை உயிர்மச் சிதைவு என்பார் கள். இதுவே இயற்கைச் சுழற்சியின் பிரதான செயற்பாடு.

பிளாஸ்ரிக் இந்த உயிர்மச் சிதைவுக்குள் அகப்படாது தப்பிக் கொள்வதே எமக்குள்ள பிரதான பிரச்சினை.

எனவே மக்கிப்போகாத "பிளாஸ்ரிக்" மண்ணுக்குள் சேரச் சேர என்ன நடக்கும் என்பதை யோசித்துப் பாருங்கள் அதன் பின்னர்.

பிளாஸ்ரிக்கின் கேட்டினை நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

(சி-9609)

## எமது பிரதேசத்தில் பார்த்தீனியம்....!

1987 ஆம் ஆண்டு இந்திய ஆக்கிரமிப்பாளர்கள் எமது மண்ணை ஆக்கிரமித்த காலப்பகுதியில், தமக்கு உணவாக இங்கே கொண்டு வரப்பட்ட ஆடுகளின் உரோமத்திலிருந்து உல்லாசப்பயணியாக வந்து, எமது மண்ணில் இறங்கியது தான் இந்தப் பார்த்தீனியம்.

பார்த்தீனியம் களையானது: அழகான செடி, வெள்ளை வெளேலென சின்னஞ்சிறு பூக்கள் கொத்துக்கொத்தாகப் பூத்துக் குலுங்கும். அச்செடியின் இலைகளும் செவ்வந்தியின் இலையை ஒத்ததாக அழகாகக் காணப்படும். அச்செடியைப் பார்த்தால் அழகுக்காக எமது வீடுகளில் நாட்டலாம் என்ற ஆசை எமக்குள் தோன்றும். அவ்வளவு அழகான செடிதான் பார்த்தீனியம்.

இந்த அழகான செடியில் தான் ஆபத்து நிறைய உண்டு. இந்திய இராணுவத்தால் எங்களுக்கும் எங்கள் மண்ணுக்கும் விட்டுச் சென்ற எச்சம்தான் பார்த்தீனியம். இது எல்லோருக்கும் பெரும் தொல்லையாக இருந்து வருகிறது. விவசாய நிலங்களை ஆக்கிரமித்து இன்று விவசாயிகளுக்கு ஒரு தொல்லையாகவும் சூழலுக்கு எதிரியாகவும் இது காணப்படுகிறது.

நாளாந்தம் தினசரிப்பத்திரிகையில் அடிக்கடி தன் பெயரைப் பதித்து வெளிவந்துகொண்டிருக்கிறது. இந்தப் பார்த்தீனியம். ஒழிப்பு நடவடிக்கையில் மக்கள் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே சகல மக்களும் இதில் விழிப்பாக இருந்து இப் பார்த்தீனியத்தை அழிக்க வேண்டியது ஒவ்வொருவரின் கடமையாகும்.

பார்த்தீனியம் பயிர்களுக்கும் விலங்குகளுக்கும், மனிதனுக்கும் ஆபத்தை விளைவிக்கும். ஆகவே எப்பகுதியில் பார்த்தீனியம் காணப்பட்டாலும் பூக்கும் முன் இனம் கண்டு ஒழித்துக்கட்டவேண்டும். ஏனெனில் தாவரம் பூக்கும்முன் களை கட்டாவிட்டால் காய்கள் உருவாகி விடும். அக்காய் முற்றி வெடிக்கும். அந்த நேரத்தில் காற்று மூலமும், விலங்குகள் மூலமும், பாதையோரமாகச் செல்லும் வாகனங்கள் மூலமும், மழை நீர் வழிந்தோடும் நீர்நிலைகளிலும் இலகுவாகப் பரவும். இது சாதாரண ஈரலிப்பு இருந்தாலே முளை கொள்ளத் தொடங்கிவிடும். எனவே உங்கள் சுற்றாடலில் இச்செடிகள் காணப்படுமாயின் இதை அழித்து விடுங்கள்.

இது வீதியோரங்களிலும் பொது இடங்களிலும் விவசாய நிலங்களிலும் அநேகமாகக் காணப்படும். எமது சூழலைப்பா திக்கும் இப்பார்த்தீனியம் நம் ஒவ்வொருவரினதும் எதிரி என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும். இப்பார்த்தீனியம் நன்கு பல்கிப் பெருக முன்பே நாம் விழிப்பாக இருந்து காணுமிடத்தில் அழிப்போமேயானால் இக்களையை முற்றாக ஒழித்து விடலாம்.

### எச்சரிக்கை:-

இது மனிதனுக்கு நோயை உண்டாக்கும். மாடுகள் உணவாக உண்ணும் போதும் அதன் உரோமங்களில் இதன் விதைகள் ஒட்டியிருந்தால் கூட கால்நடைகளுக்குத் தீமையை விளைவிக்கிறது. இது மட்டுமல்ல உடம்பில் பட்டால் தோல் அரிப்பு, சிவப்பு நிறத்தடிப்புக்கள் தும்மல், சளி, மூக்கடைப்பு, காய்ச்சல், மூச்சு விடத் திணறல், ஆஸ்மாவின் அறி குறிகள் என்பவற்றால் தாக்கம் ஏற்படும்.

விலங்குகளை எடுத்துக் கொண்டால் எந்த விலங்குகளும் இதை உட்கொள்ளாது. இருந்தாலும் சில வேளைகளில் உணவுடன் சேர்த்து உட்கொண்டால் நாக்கினுள் புண் உண்டாகும் குடல் புண் தோன்றும் அத்தோடு தோல் நிறம் மாறும் கால்நடை இறப்பு ஏற்படும். பார்த்தீனியத்தை உட்கொண்ட பசுவின் பாலில் கசக்கும் தன்மை உள்ளதாக இருக்கும். சில வேளைகளில் பாலில் விஷத்தன்மை உள்ளதாக இருக்கலாம்.

பார்த்தீனியம் விவசாய நிலத்தில் காணப்பட்டால் இது பயிர்களைப் பாதிக்கும் விதைகள் முளை கொள்ளத் தடை செய்யும். வித்து முளைத்தலைத்தடை செய்யும்., பயிரின் வேர் வளர்ச்சித் தொகுதியைப் பாதிக்கும். பயிரில் வளர்ச் சித்தன்மை குறைவடைதல் விதை தானியம் பெருமளவில் நட்டம் ஏற்படும். அவரை இனநைதரசன் நிலைப் படுத்தலைக் குறைக்கும். பயிர்த் தாவரங்கள் கருக்கட்டலை பாதிக்கிறது. இத்தனை துன்பத்தையும் ஏற்படுத்தும்.

### தடுப்பு நடவடிக்கை:-.

பார்த்தீனியக்களை பூக்கும் முன் அகற்றும் போது கையுறை அணிந்து களைகட்ட வேண்டும். பிடுங்கியவுடனேயே மண்ணினுள் புதைத்துவிட வேண்டும். பூத்தபின் களைகட்டுவதாயின் மூக்கு, வாய், முகம் என்பவற்றைப் பாதுகாத்துக்களை பிடுங்க வேண்டும். பிடுங்கிய பின் எரித்து விடுதல் நல்லது இதை இரசாயன மருந்து விசிறியும் கட்டுப்படுத்தலாம்.

ஆகவே இத்தனை பாதிப்பை ஏற்படுத்தும் பார்த்தீனியம் இன்று எமது மண்ணைக் கொஞ்சம் கொஞ்சமாக ஆக்கிரமித்து வருகிறது. இக்களையை நாம் அனைவரும் ஒன்றுபட்டு தம்தம் சூழலில் காணப்படும் இப்பார்த்தீனிய களையை அகற்றி சூழலைப் பாதுகாப்போம். தற்போது விவசாயத் திணைகளமும் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து பார்த்தீனிய ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

**த. சிவலிங்கம்**

18ம் பக்கத் தொடர்ச்சி

வீரச்சாவுச் செய்தி விண்ணிலே இடிந்து பூநகரி எங்கும் பரவியது. பூநகர் கண்ணீர் வடித்தது. ஒரு குமாவின் இழப்பு பத்து நூறாக குமாக்களை வீறு கொண்டெழச் செய்தது.

சிங்கள இராணுவம் கிராமம் கிராமமாக வீடு வீடாக மோப்பம் பிடிக்கத் தொடங்கினர். பிடிப்பதும் விசாரணை செய்வதிலும் ஈடுபட்டி ருந்த இராணுவம் பெரியாச்சியின் பேரன்பிற்குரிய யோகன் உட்படப் பல இளைஞர்களைக் கைது செய்து முகாமுக்கு அழைத்து வந்தனர். இச்செய்தியை அறிந்த பெரியாச்சி வெடிபட்ட புலிபோல குமுறினாள். காரிலே புறப்பட்டது போல முகாமை நோக்கிப் புறப்பட்டாள். பலர் அவரைத்தடுத்தனர். முகாமின் வெளிவாசல் கட்டுப்பாட்டைத் தாண்டி உள்ளே நுழைந்தாள். உள் முகாமுக்குள் புகும் வாசலை அண்டினாள். ஆச்சியின் கோலத்தைக்கண்ட சிப்பாய் சீரித்தவண்ணம் மொனவத? ஆச்சி மொனவத? என்ற வண்ணம் துவக்கை நீட்டியபடி வந்தான். சிப்பாயின் துவக்கைத் தட்டிவிட்டு உளளே நுழைந்தாள். அங்கே அவள் கண்ட காட்சி அவள் இரத்தத்தை உறைய வைதததது. கோட்டை மதிலோடு உள்ளே இருந்த புளியமரத்தில் யோகனும் அவனுடன் சேர்ந்தவர்களும் தலைகீழாகத் தொங்கவிடப்பட்டு சிப்பாய்களால் விசாரிக்கப்பட்டுக் கொண்டிருந்தனர். ஆச்சியைக் கண்டதும் பேரப்பிள்ளைகள் ஓவென அழத்துவங்கினர். பெரியாச்சி பத்திரகாளியாக மாறினாள். பேய் வெறி பிடித்த நாயளே இதெல்லாம் என்ர பேரப் பிள்ளைகள் ஏனடா அதுகளை கொண்டு வந்து சித்திரவதைப்படுத்திறியள் என்ர தெய்வம் பொல்லாதது உங்களை சுட்டெரித்து கொல்லப்போகுது. பிள்ளையளை அவிட்டு விடுங்கோ இல்லாட்டி என்னையும் சுட்டுத்தள்ளுங்கோ ஏன்ரா பேசாமல் நிக்கிறீங்கள் கண் இமைக்கும் நேரத்துள் பொரிந்து தள்ளினாள். "ஆச்சி ஆச்சி" எங்களோட ஒண்ணும் கதைக்கவேணாங் OIC மாத்தையாட்ட போ.. போ.. போய் அங்கே கதை உள்ளே இருந்து இளம் வயதினரான பொறுப்பதிகாரி அங்கே வந்தான். ஆச்சி.. ஆச்சி.. என்ன சத்தம் போடறது சரளமாகத் தமிழ் பேசக்கூடிய அவன் ஆச்சியை அழைத்துச் சென் றான். தனது மேசையின் முன்னே இருத்தி எங்க அம்மா மாதிரியே இருக்கிறீங்க சொல்லுங்க ஆச்சியோட அன்பாகப் பேசினான் யாருக்குமே அவர்கள் பேசியது தெரியவில்லை. பாம்பாட்டியின் மகுடிக்கு கட்டுண்ட நாகம் போல முகாம் பொறுப்பதிகாரி எழுந்து வந்தான். சிப்பாய்களைப் பார்த்து உடனடியாகச் சகலரையும் விடுதலை செய்யும் படி பணித்தான். ஆச்சி சந்தோசம்தானே போயிற்றுவாங்கோ விடை அனுப்பி வைத்தான். ஆச்சிக்கு என்ன பயங்கரம் நடக்குமோ ஏங்கி நின்ற மக்கள் கூட்டம் முன்னே பெரியாச்சி வரபேரமக்கள் பின் தொடர்ந்து வந்தனர். ஆசசியின் வீரத்தையும் தீரத்தையும் வியந்து போற்றினர்.

அடுத்தடுத்த நாட்களில் பெரியாச்சி வீட்டுப் பாணிப் பனாட்டும் புழுக்கொடியலும், ஒடியல் பிட்டும் முகாம் பொறுப்பதிகாரியின் வாய்க்கு அமிர்த்தமான உணவாயிற்று. சில நாட்களில் பெரியாச்சியின் ஒடியற் கூழின் சுவையையும் அவனும் அவனைச்சார்ந்த பெரிய அதிகாரிகளும் சுவைத்து மகிழ்ந்தனர். இப்போ ஆச்சி இராணுவ அதிகாரியின் அன்புக்கு உரியவளாகத் திகழ்ந்தாள். இராணுவ முகாமுக்குள் எந்த விதக்கட்டுப்பாடும் இல்லாது போய்வரும் பெரியாச்சியை பலரும் சந்தேகப்பட்டார்கள். யாருக்கும் இல்லாத சலுகை பெரியாச்சிக்குமட்டும் எப்படிக் கிடைத்தது. மக்கள் பேச்சு பெரியாச்சியின் காதிலும் விழுந்தது. அவள் அதைப் பொருட்படுத்தவே இல்லை. தனக்கென உள்ள பணியை அவள் செவ்வனே ஆற்றிக்கொண்டிருந்தாள். அது போராட்டத்துக்கு உரம் சேர்த்ததை யாரறிவார். போராளிகளுக்கு மட்டும் தலைவனில் கொண்ட நம்பிக்கையில் தன் கடமையை. சிறப்பாகச் செயவதை உணரமுடிந்தது.

அன்று மாலை நேரமாவதைக் கதிரவன் அடிவானத்தே மறைந்து உணர்த்தி நின்றவேளை மந்தை மேய்ப்பவர்கள் மந்தைகளை பட்டியிலே அடைபபதற்காகக் கொண்டு செல்கின்ற வேளை பகல் வேலைகளை முடித்து உழவர்கள் கால்நடைகளுடன் வீடு நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள். பகல் ஒளியை இருள்கௌவிக் கொண்டிருக் கிறது. அந்நேரம் பாரிய முழக்கத்தை மிஞ்சிய வெடிச்சத்தம் தொடர்ந்து குண்டு கள் வெடிக்கும் அதிர்வுகள் பட்டியை முறித்து கால் நடை கள் திக்குத்திசை தெரியாமல் ஓடியன. உழவனும் கால்நடைக ளும் நிலை குலைந்து ஓடின. மக்கள் தம் இருப் பிடங்களை விட்டு இடம் பெயர்ந்து ஓடினர். ஆனையி றவு முகாமில் இருந்து எறிகணைகள் பூநகரியை நோக்கிவந்து விழுந்தது. வெடித்தன. பல மணி நேரம் உக்கிர சண்டையின் பின் பழம் பெருமை வாய்ந்த புராதன சின்னமான பூநகரி ஒல்லாந்தர் கோட்டை தகர்க்கப்பட்டதோடு முகாம் புலிகள் வசம் விழுந்தது. இப்பெருஞ்சமரில் பெரியச்சியின் பங்களிப்பு யாருககும் தெரியாத இரகசியமாகும் அந்த வெற்றிச் சமரில் பெரி யாச்சியின் பேரன் யோகன் தலைமை தாங்கியது அவளுக்குப் பெருமையாய் இருந்தது. ஊர் உறவெல்லாம் இடம் பெயர்ந்த நிலையிலும் எதற்கும் அஞ்சாது வாழ்ந்து வந்த பெரியாச்சியையும் சின்னாச்சியையும் கனடா, பிரான்ஸ், நோர்வே நாட்டிலிருந்து அவர்கள் பேரப்பிள்ளைகள் தொடர்பு கொண்டவண்ணம் இருந்தார்கள்.

இறுதிவரை உறவுகள் எல்லாம் இடம்பெயர்ந்த நிலையிலும் தனிக் குடித்தனம் போல் இருவரும் அங்கு வாழ்ந்த வாழ்க்கையையும் அவர்கள் போராளிகளுக்கும் ஏனையோருக்கும் சுவைமிக்க பண்டங்களை வாய்க்கு இதமாகக் கொடுத்து வாழ்ந்த வரலாறு ஒவ்வொரு போராளிகளினதும் உள்ளத்தில் கொள்ளை கொண்ட வரலாறாக அமைந்தது. ஆனால் அவர்கள் வாழ்க்கை இப்படி அமையும் என்று எதிர்பார்க்கவில்லை கிளாலிக் கடலில் நடைபெற்ற மோதல் ஒன்றை தொடர்ந்து ஆனையிறவில் இருந்து சரமாரியாக, எறிகணைகள் வீழ்ந்து வெடித்தவண்ணம் இருந்தன. அருகாமையில் இருக்கும் மகளிர் படையணிமுகாமின் முன்வீழ்ந்து வெடித்த எறிகணை கண்டு அங்கே ஓடிச்சென்றார்கள் பெரியாச்சியும் சின்னாச்சியும். அவர்கள் ஒரு வரையுமே அங்கே காணவில்லை. அவர்கள் தங்கள் பாதுகாப்புத் தேடி பங்கருக்குள் புகுந்துகொண்டதை அறியாத பெரியாச்சியும் சின்னாச்சியும் அதே இடத்திற்கு வீசப்பட்ட எறிகணையில் கோரமாகக் கொலையுண்டு இரத்த வெள்ளத்தில் மிதக்கும் பரிதாபக் காட்சியை காண்பதற்கு யாருமே இருக்கவில்லை. வெடிச்சத்தங்கள் ஓய்ந்து சற்று நேரத்தின் பின் பங்கரில் இருந்து வெளியே வந்த பெண் போராளிகள் அக்கோரக் காட்சியைக் கண்டு நிலை குலைந்து நின்றனர். இவர்களால் வளர்க்கப்பட்ட பிள்ளைகளோ உறவுகளோ ஊரவர்களோ எவரும் இருக்கவில்லை. கனடாவிலும் நோர்வேயிலும், பிரான்சிலும் இருந்து கண்ணீர் சிந்தினர்ர் கள். பெரியாச்சியின் சேவையை ஒட்டி அவர் நாட்டுப்பற்றாளராகப் பிரகடனப்படுத்தப்பட்டார் இவரின் இறுதி யாத்திரையிலும் புலி வீரர்களும் மகளிர் படையணியினரும் அணிவகுத்துச் செல்வதைத்தான் காணமுடிந்தது.

### விபத்து



**ஒருவர்:-** பரந்தன் சந்தியில வாகன விபத்து ஆட்டோ ஒன்று சம்பல்.

**மற்றவர்:-** ஆளுக்கும் பலத்த காயமோ,

**ஒருவர்:-** ச்... சீ... ஒரு காயமுமில்லை. சுகமாகத்தான் செத்துப் போனார் ஒருவர்.



# எங்கள் அன்னையின் துணிவு...

இருள் முற்றும் விலகும் முதல் இராணுவ முற்றுகை இறுகியது. எங்கும் இராணுவ தலைக்கவசங்களும், இலை குலைகளால் உருமறைப்புச் செய்யப்பட்ட இராணுவச் சிப்பாய்களும், தமிழுக்குப் பொருந்தாத சிங்களமொழி வார்த்தைகளும் காற்றோடு கலக்க விடிந்தது அன்றைய காலைப் பொழுது.

மட்டக்களப்பின் அந்தக் கிராமத்திலிருந்த ஒவ்வொரு வீட்டுக்கும் இது வழமையாக எழுதப்பட்ட இராணுவ விதியாகி விட்டது. இப்போதெல்லாம்.

நாம்... என்ன செய்யிறது..... துலைவானுக விடிஞ்சும் விடியாமலுமா வந்திடுவானுக.....நாம் என்ன வேலைய செய்யிற மாதிரி இருக்கி.... இப்படி ஒவ்வொரு வீட்டு வாசலிலும் கோவம் கொப்பளிக்கும்.

அம்மா..... எனக்கு பால் தா... என பச்சிளம் பாலகன் தாயை உருக்கிக் கேட்டும் அந்த மழலை மொழி அதிகாரம் கூட இராணுவ சனியன்களின் பிரசன்னத்தால் செத்துப் போய்க்கிடக்கும்.

நாம் கற்பனை செய்யும் காலை என்பது ....

அழகான விடியலில் ஆதவனின் பொன் கரங்கள் நேர் கோடாய் புறப்பட்டு எதிர்ப்படும் தடைகளின் இடையே தெரியும் இடைவெளி புகுந்து பொட்டுப் பொட்டாய் நிலத்தில் வட்டமிடும் ஒளிப் பொட்டும்.

காகம் ஒருபுறமும் மைனா இன்னொரு புறமும் யெற் வேகத்தில் கிளி மற்றொரு புறமும் சத்தமிட்டு எம்மை எழுப்பிவிட்டு அவை எங்கோ பறந்து போகும்....

இது தான் நாம் விரும்பும் காலைப்பொழுதாயிருந்தது. ஆனால் இப்போது இவையெல்லாம் எப்போது எதிரி எங்கள் நிலம் பிடிக்கத் தொடங்கினானோ அப்போது எல்லாவற்றையும் நாங்கள் தொலைத்து விட்டது போல ஒரு உணர்வு.

ஆனாலும் ஒரு நம்பிக்கை.

எந்த மழை பெய்தாலென்ன, எந்த இடியிடித்தாலென்ன, எந்த மேகம் சூழ்ந்தாலென்ன ஆதவன் தன் கரங்களைப் பொட்டுப் பொட்டாய் நிலத்தில் வட்டமிட்டு விடியும்.... விடியும். என எங்களுக்குள் ஒரு நம்பிக்கை யூட்டுவது போல அந்தக் கிராமத்துக்குள் இடுப்பில் கிரனைற்றும் கழுத் தில் சைனற்றுமாய் உலா வரும் புலிவீரர்களின் பயணம் விரைவில் எங்களுக்கும் விடியும் என ஒரு நம்பிக்கையைத் தரும்.

இதனால் தான் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு பிடி அரிசி மேலதிகமாய் அவர்களுக்காய் உலையில் கொதிக்கும்.

இதனால் தான் ஒவ்வொரு வீட்டிலும் நம்மட பொடியல் போராங்கள் என்று உரிமையோடு... பேசச் சொல்லும். இது அந்தக் கிராமத்தின் காட்சிகள்.

வழமை போலப் போராளிகள் மக்களுள் உறைந்து தமது கடமைகளைச் செய்வார்கள். அன்றொருநாள் காலை இராணுவ வாகனத்தின் வருகையோடும் இராணுவ துப்பாக்கி, தலைக்கவசம் என இராணுவ முற்றுகை அந்தக் கிராமத்தை இறுக்கியது.

துலைவானுக.... வந்திட்டானுகள்.... என்ற படி அந்த வீட்டில் அம்மா குசினுக்குள் நுழைய கதவை தட்டும் சத்தம் கேட்டது.

டொக்....டொக்.... அம்மா பயந்தபடி.... ஏசியபடி....வாசலின் கதவைத் திறக்க, வாசலில் களைத்து விழுந்து வாடிப்போய் நின்றான் இடுப்பில் குண்டோடும் கைத்துப்பாக்கியோடும் அந்தப் புலி வீரன்.

அம்மா பதறிப் போனாள், ஆனால் பயந்து போகவில்லை.

என்னமன..... அவனுகள் எல்லா இடமும் நிக்கிறானுகள் கெதியா உள்ளவா, என்றபடி அம்மா அந்த வீரனை வீட்டுக்குள் அழைத்துப் போனாள்.

ஆபத்து வெளியில் நடமாடும் அந்த நிலையிலும் தன் மண்ணின் மைந்தன் ஒருவன் தன் வாசலை மிதித்துள்ள போது போ... என்று சொல்லவில்லை. அவனை அரவணைத்து என்ன செய்யிறது என்ற போது,

அவன் அம்மாவிடம். அம்மா... எல்லா இடமும் ரவுண்டப் பண்ணிட்டாங்கள்.... ஆனால் நான்.... அவசரமாய்..... அங்கால போக வேணும்..... என்றான்.

டேய்.... விசரா.... என்ன சும்மா சாகப் போறியா.... இஞ்ச ஒளித்து வைத்திருக்கிறதே கஷ்டம் எண்டு யோசிக்க... நீ என்னடா என்றால் இப்ப அவசரமாய்...... அங்க போக வேணும் எண்டு நிக்கிறாய்.....என்று அம்மா அவனை இழந்து விடக் கூடாது என்ற ஆதங்கத்தில் அவனிடம் புலம்பிக் கொண்டிருந்தாள்.....

ஆனால் அவனோ... எப்படியும் போயேயாக வேண்டிய ஒரு காரியம் என்பதால் போவதில் உறுதியாய் இருந்தான்.

அவன் அப்படிப் போக வேண்டுமென்றால் மூன்று வழிகள் தான் உண்டு.

ஒன்று- சண்டை செய்து முற்றுகையை உடைத்து வெளியே போக வேண்டும்.

இரண்டு- எதிரிக்குத் தெரியாமல் அவனின் கண்ணில் மண்ணை தூவி விட்டு வெளியே போக வேண்டும்.

மூன்று- எதிரியை ஏமாற்றி அவனை கடந்து போக வேண்டும். ஆனால் தனியொருவனால் இந்த முற்றுகையை உடைப்பது ஆபத்தாய் முடியும். எதிரிக்குத் தெரியாமல் போவதென்றால் எந்த மார்க்கத்தையும் எதிரி விட்டு வைக்கவில்லை.

ஆகவே எதிரி ஏமாற்றி எப்படியாவது போக வேண்டும். அம்மாவிடம் நிலமையை கூறியவுடன் அம்மா யோசித்தாள்.....

சரி... வெளிக்கிடு போவம் என்று அம்மாவும் அவனை அழைத்துக் கொண்டு போக தயாரானாள்.... ஆபத்து மிக்க பயணம் ஒன்றுக்குள் கரணம் தப்பினால் மரணம் என்ற பாதைக்குள்......


இப்போது அந்தப் போராளி முக்காடிட்ட கடும் நோய்வாய்ப்பட்ட ஒரு நோயாளி. அவனை அழைத்துச் செல்லும் தாயாய் அம்மா.....

எல்லாம் சரி பயணம் புறப்பட்டாகிவிட்டது.... நிலைமையின் தன்மையை உணர்ந்த போராளி கைத்துப்பாக்கியையும்... கைக்குண்டையும்.... இடுப்பில் பத்திரப் படுத்திக் கொண்டான். அம்மா அதை கவனிக்கத் தவறவில்லை.

வாசல் தாண்டிய போது அம்மா பேசினாள்.... நாம போறம்.... ஆனால் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில அவனுகளிட்ட பிடிபடுவோமாயிருந்தால் முதல்ல நீ..... என்னத்தான் சுட வேணும்..... என்ன சுட்டுட்டுத்தான் நீ தப்பிறதுக்கு வழி தேட வேண்டும் என்று உறுதி வாங்கினாள் அம்மா......

வேழினி





# பெரியம்மா...

முதல் நாள்தான் அந்த வீட்டில் ஒரு கலியாணவீடு நடந்து முடிந்திருந்தது.....

இரண்டு உள்ளங்கள் வாழ்க்கைப் பயணத்தில் முதலடிஎடுத்து வைத்திருந்தார்கள்.....

பாட்டும்... கூத்துமாய் அந்த வீடு களைகட்டியிருந்தது. மழை பெய்தாலும் தூறல் விட்டுப் போகாது என்பது போல கலியாண வீட்டு களை அந்த வீட்டை விட்டுப் போகவில்லை.

கேலிப்பேச்சும், வெட்கத்தால் தலை கவிழும் புதுத் தம்பதிகளும் நறுமணம் வீசும் சமையலுமாய் பார்க்கச் சந்தோசமாய இருந்தது.

அப்போது தான் உர்..... உர்.... என்று உறுமியபடி வீட்டின் வாசல் தாண்டி வீதியில் விரைந்தன எதிரியின் டாங்கிகளும் துருப்புக் காவிகளும்.....

இது ஒரு திடீர் ரவுண்டப்.... எங்கேயும் ஏதும் தகவல் கிடைத்திருக்குமோ.... என்று யோசித்த மனங்களுக்கு சீ...சீ... இவனுகளுக்கு என்ன வேலை இதை விட்டால் பயந்தவங்களுக்குப் பார்க்கிற இடமெல்லாம் பேய் எண்ட மாதிரி.... உவங்களுக்குப் புலிப்பயம் என்று யாரோ வீட்டில் முணுமுணுத்தார்கள்.

சரி.... இனி என்ன ஒவ்வொரு வீடு வீடாய் ஏய்... ஐசி காட்டு.... கொட்டியா இல்லையா... என சந்து பொந்தெல்லாம் சல்லடை போட வருவார்கள் இப்பதான் புது வாழ்க்கையை ஆரம்பிக்கும் சின்னங்களுக்கு வாழ்க்கையை வெறுக்கப் பண்ணிப்போடுவாங்கள்... மனம் சபித்துத் தள்ளியது.

ஆனால் என்ன செய்யிறது நாம் அடங்கியாக வேண்டிய நிர்ப்பந்தம். கேட்பதற்கெல்லாம் தலையாட்டவேண்டிய நிலையில் துப்பாக்கிகளின் மிரட்டல், ஆனால் மனம் மட்டும் உலகிலுள்ள அத்தனை சபிக்கக் கூடிய வார்த்தைகளையும் ஒன்று சேர்த்துச் சபித்துக் கொட்டியபடியிருக்க, படலை தாண்டி நுழைந்தான் அந்த ஊரிற்குப் புதிதாகவும் இந்த வீட்டின் பிள்ளையாய் இடம் பிடித்தவனுமான அந்தப் போராளி.

இங்கு நேற்றுத்தான் கலியாண வீடு நடந்தது. நான் இந்த நிலைமையில் அங்கு போவதால ஏதாவது ஒரு சிறு தவறு நடந்து விட்டாலும்... என்று மனம் துடித்த போதும் அங்கு போவதைத் தவிர அந்தப் போராளிக்கு அப்போதைக்கு வேறு வழியில்லை....

தயங்கியபடி வீட்டுக்குள் நுழைந்தவனை கண்டவர்கள் எல்லோரும் பயந்துதான் போனார்கள்.

நேற்றுத்தான் கலியாண வீடு. இன்று ஏதும் தவறு நடந்து விட்டால் மரண வீடாக மாறிவிடும் என்று எல்லோருக்கும் மனம் பதை பதைத்தது.

ஆயினும் ஏதாவது செய்து அந்த போராளியைக் காப்பாற்றி ஆக வேண்டும்.

எல்லோருக்கும் பதட்டத்தால் கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை....

அப்போது கம்பீரமாய் பெரியம்மாவின் குரல் ஒலித்தது. டேய் கெதியாய் கூட்டிக் கொண்டு வாங்கோ.... என்று சத்தமிட்டு விட்டு வீட்டின் சீலிங்குக்குள் ஒரு மாதிரி அந்த போராளியை நுழைத்து ஒளித்து விட்டு எல்லோரையும் அவர் அவர் வேலையை செய்யுமாறு கலைத்து விட்டாள்.

ஆனால் மனதிற்குள் மட்டும் பதட்டம். நேற்று ஒரு வாழ்வின் ஆரம்பம்.... என்று மனம் துடித்த போது அவளுக்குள் அவளே திட்டிக் கொண்டாள்.

சே.... அப்படி நடக்காது... நடந்தாலும் என்ன.... நாங்கள் இந்தப் போராளியைக் காப்பாற்றாது விட்டால். யார் காப்பாற்றுவார். மனம் எண்ணியபடியிருக்க....

எல்லாம் வெளியால வா... என்ற படி சப்பாத்துக் கால்கள் நுழைந்தன வீட்டிற்குள்.

பிறகென்ன ஒவ்வொரு இடமும் நுணுக்கமாய் ஆராயப்பட்டது.

மனம் ஒவ்வொரு வினாடியும் டப்..டப் என்று பெரும் ஓசை போல ஒலித்துக் கொண்டிருக்க வீட்டைச் சோதனையிட்டான் எதிரி.

அந்தப் போராளி பதுங்கியிருந்த சீலிங்குக்குள் கீழே கிடந்த மேசையை நெருங்கியவன், அதன் மேல் ஏறி அமர்ந்து கொண்டான்.

ஏனைய சிப்பாய்கள் எல்லா இடமும் தேடி ஒன்றுமில்லை என கையை விரித்த பிறகுதான் வெளியேறினார்கள். அந்தச் சப்பாத்துக் கால்கள்.


அப்பாடா..... என ஒவ்வொரு வாயும் உரத்தவே உச்சரிக்க, பெரியம்மா தான் கூப்பிட்டாள்.


அவங்கள் போட்டாங்கள் இறங்கடா தம்பி .... என்று.

அந்த ஆபத்தான நேரத்திலும் ஒரு போராளியைக் காப்பாற்றுவதில் குறியாய் இருந்த பெரியம்மாவின் கரங்களை அந்தப் போராளி கண்களில் ஒற்றிக் கொண்டான்.

# எல்லோருக்கும் விளையாட்டு

**அ.அன்ரன் அன்பழகன்**





தமிழர் தாயகத்தின் விளையாட்டுத்துறை எழுச்சியும், வீழ்ச்சியும், மீள்எழுச்சியும் தமிழீழத்தேசிய விடுதலைப் போராட்டத்தோடு இணைந்ததான ஒரு செயற்பாடாகவே,ஈழத் தமிழர் வரலாற்றின் பரிமாண மாகிறது இது விளையாட்டுத் துறைக்குள் மட்டும் மட்டுப்படாது எல்லா வகையான வளர்ச்சி களில் இது பிரதிபலிக்கிறது.

1958ஆம் ஆண்டு யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த திரு. நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் எனும் இளைஞர் ஆசியப் போட்டி களில் பங்கு பற்றக்கூடிய தகு தியா என அடைவுகளாக் கொண் டிருந்தபோதும் ஆசியப் போட்டிகளுக்கு அனுமதிக்கும் சிறிலங்காவுக்கான விளையாட்டு அமைப்பு அவருக்கு அனுமதி வழங்க மறுக்கிறது. காரணம் அவர் தமிழனாக இருப்பதுதான். எனினும் ஒரு சில சிங்களவர்க ளின்முயற்சியாலேயே அவருக் குரிய அனுமதியும், பயண வாய்ப்பும் கிடைத்தது. இன்னும் அதிகாரத்தில் உள்ளவர்களும் அரசியல்வாதிகளும் தமிழ் மக்களின் நியாயமான தீர்வுக்கு எதிராகச் செயற்படும்போது சிறு பான்மையான நீதியான உணர் வுள்ள சிங்களமக்கள் தமிழ்மக் களுக்கு நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும் என எதிர் பார்க்கிறார்கள்.

ஆயிரத்தித் தொழா யிரத்தி ஐம்பதுகளில், அறுபது களின் தொடக்கத்தில் தமிழர் தாயகத்தில் குறிப்பாக, யாழ்ப் பாணம், திருமலை, மட்டக் களப்புப் பகுதிகளில் அகில இலங்கை மட்டத்துக்குரிய அடைவுகளில் மெய்வல்லுனர் நிகழ்வுகளில் பலர் இருந்தனர் இந்தநிலை பின்னர்படிப் படியாகக் குறை ந்து இரண்டா யிரத்தின் தொடக்கத்தில் இல்லை என்ற நிலையே தோன் றிவிட்டது. இதற் கான பிரதான கார ணம் விளையாட்டுத் துறை அமைச்சு மற்றும் விளையாட்டுச் சங்கங்களின் திட்டமிட்ட இனரீதியான புறக் கணிப்பேயாகும். ஒருபுறம் யுத்த மும், பொருளாதாரத்தடையும் தந்திருந்த நெருக்கடி மறுபுறம் திட்டமிட்ட இனரீதியான பாகு பாடு. இந்த நிலைமைகளின் மாற்றத்திற்காக வலுவுள்ள அரசி யல் நிலைமைகளின் மீது தமிழ் மக்களுக்கான பல்வேறு தேசியப் போட்டிகளும், பயிற்சி வாய்ப்புக் களும், நிபுணத்துவ சேவைகளும் பெறப்படுகின்றன. இதனையே யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழீழ இளையோர் தேசிய தடகளப்போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மோகனதாஸ் பின்வருமாறு தெரிவித்தார். போரி லும், அரசியலிலும் சிறப்பாக வளர்ச்சியடைந்துள்ள புலிகள், இப்போது விளையாட்டுத் துறையி லும் சிறப்புடைய ஒரு சமூ கத்தை உருவாக்கி வருகிறார் கள் என்றார்.

விளையாட்டு மனிதவாழ் வில் அவசியமான ஒரு விட யமாகும் எனவும் தெரிவித்தார்.

தமிழீழ விளையாட்டுத் துறைக்கு இரண்டு வகை யான பாரிய பொறுப்புகள் உள்ளன என்றார் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, ஒன்று எமது இளைய தலை முறையை வீரமும், விவேகமும் உள்ள தலைமுறையாக, விளை யாட்டில் சாதனை புரிப வர் களாக வளர்த்தெடுப் பதுடன் இன்று திட்டமிட்ட முறை யில் கலாசார சீரழிவுக்குள் தள்ளி விடும் சிறிலங்கா படைத் தரப்பின் செயற்பாட்டைமுறி யடித்து, "எல்லோருக்கும் விளை யாட்டு" எனும் செயற்பாட்டின் கீழ் வீணாக வீதிகளில் நிற்கும் இளைஞர்களை ஏதாவது ஒரு விளையாட்டுக்காக, மைதானங் களுள் இறக்கவேண்டியது எமது பொறுப்பாகும் என்றார்.

அண்மையில் நடை பெற்ற தமிழீழத் தேசிய இளை யோர் தடகளப்போட்டியில் சிறப்பு அடைவுகளைப் பெற்றிருந்த முன்னாள் விளையாட்டு வீரர்க ளைக் கௌரவிப்பதும் ஒரு சிறப்பு நிகழ்ச்சியாக இருந்தது. இந்த வகையில் சிறப்புக் கௌர வத்தைப் பெற்றவர் சாவகச் சேரியைச் சேர்ந்த வைத்திலிங் கம் வாமதேவன் இவர் உடற் கல்வி ஆசிரியராக கடமை யாற்றியவர் என்பதுடன், 1955, 1956ஆம் ஆண்டுகளில் அகில இலங்கைமட்டப் போட்டிகளில் கோலூன்றிப்பாய்தல் நிகழ்ச்சி யில் தங்கப்பதக்கத்தை பெற்றுக் கொண்டவர். அத்தோடு 1950ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப்பாடசா லைகள் விளையாட்டுச் சங்கத் தின் விளையாட்டுப் போட்டியில் தத்திமிதித்துப் பாய்தல், கோலூ ன்றிப் பாய்தல், உட்பட மூன்று நிகழ்ச்சிகளில் மைதானச்சாத னையை நிகழ்த்தியவர். இது இன் றைய இளைய தலைமுறை யி னருக்குச் சிறப்பான மாதிரியாக அமையவேண்டும் என்பதற் காகவே இவருக்கான கௌரவிப் பும் சிறப்புப் பதக்கமும் அணி விப்பும் தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் திரு.பாப்பா அவர்களால் மேற்கொள் ளப்பட்டது.

இந்த நிகழ்வு கடந்த மே மாதம் 14,15,16,ஆம் திகதிக ளில் கொழும்பில் நடை பெற்றது. இதில் சிலஇலங்கை இளையோர் தடகளவிழாவில் பதக்கங்களைப் பெற்ற 09பேருக்கான பாராட்டும், சமுகமளித்தவர்களுக்கான பணப் பரிசில்களும் வழங்கப்பட்டன.



## தமிழீழ தேசிய இளையோர் தடகளப்போட்டியில்

சிறந்தவீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டோர்.
14 வயதுப் பிரிவு - ஆண்கள்.
எம்.முகமட் நசீர் - திருமலை மாவட்டம்.
14 வயதுப் பிரிவு - பெண்கள்.
இ.வாசுகி - யாழ்.மாவட்டம்.
16 வயதுப் பிரிவு - ஆண்கள்.
என்.முகமது ரஸ்வின் - திருமலை மாவட்டம்.
16 வயதுப் பிரிவு - பெண்கள்.
கே. உஷாந்தினி - மன்னார் மாவட்டம்.
18 வயது ஆண்கள் முகமட் கலீல் திருமலை மாவட்டம்
18. வயதுப் பரிவு - பெண்கள்.
செல்வி - தனிற்றா றோசானி, திருமலை மாவட்டம்.

கொழும்பில் நடைபெற்ற அகில இலங்கை இளையோர் தடகளப்போட்டியில் வெற்றியீட்டிய தமிழர் தாயகவீரர்கள்

திருகோணமலை மெய்வல்லுனர் சங்கம்
கே.ரி.எம். ஹறீஸ் - 200மீற்றர், 400 மீற்றர் - தங்கப்பதக்கம்.

எம்.ரீ.எம். றிஸ்வி - ஈட்டி எறிதல் - தங்கப்பதக்கம்.

சுரேஸ் துசந்த - 800 மீற்றர் - வெள்ளிப்பதக்கம்.

மட்டக்களப்பு மெய்வல்லுனர்சங்கம்
எஸ். டினேஸ் - உயரம்பாய்தல் - வெள்ளிப்பதக்கம்.

ஏ.எம். பெர்தௌவ்ஸ் - நீளம்பாய்தல் - வெள்ளிப்பதக்கம்.

கிளிநொச்சி மெய்வல்லுனர் சங்கம்
சீ. தாரினி - குண்டுதள்ளுதல் - வெண்கலப்பதக்கம்.

யாழ்ப்பாண மெய்வலுனர் சங்கம்
மரியநாயகம் சஞ்சீவ் - 110 மீற்றர் தடைதாண்டல் - வெள்ளிப்பதக்கம்.
சிவகுமார் கமலமோகன் - உயரம்பாய்தல் - வெண்கலப்பதக்கம்.
தயாளினி செல்வராஜா - முப்பாச்சல் - வெண்கலப்பதக்கம்.

தமிழீழத் தேசிய இளையோர் தடகளவிழாவின் புள்ளி விபரங்கள்
யாழ்.மாவட்டம் - 149 புள்ளிகள்.
திருமலை மாவட்டம் - 118 புள்ளிகள்
மன்னார் மாவட்டம் - 71 புள்ளிகள்.
அம்பாறை மாவட்டம் - 63 புள்ளிகள்.
கிளிநொச்சி மாவட்டம் - 56 புள்ளிகள்.
வவுனியா மாவட்டம் - 48 1/2 புள்ளிகள்.
மட்டக்களப்பு மாவட்டம் - 48புள்ளிகள்.
முல்லைத்தீவு மாவட்டம் - 32 புள்ளிகள்!

## தவறு

சென்ற வார வெள்ளி நாதத்தில் காணவில்லை என்ற தலைப்பில் வெளியான விளம்பரத் தில் புங்குடுதீவைச் சேர்ந்த கந்தையா செல்வராசா என்பவர் தொடர்பான விபரம்தெரிந் தவர்கள் அறிவிக்க வேண்டிய முகவரியில் தவறு ஏற்பட்டுள்ளது.

சரியான முகவரி கீழே தரப்படுகிறது.

**மனைவி செ. கமலம்,**
**இல.318,ஜெயந்திநகர்,**
**கிளிநொச்சி.**

கரும்புலிகள் நாள் யூலை 05 ஐ முன்னிட்டு மு.மா.க.தொ.கூ.ச. சமாசத்தின் தலைமையில்
அதன் அங்கத்துவ சங்கங்களும் க.து. பற்று ப.நோ.கூ.சங்கம்
முல்லை நகர் புனரமைப்புக்குழு, முல்லைப்பட்டின வர்த்தக சங்கம்,
முல்லை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் ஆகியனஇணைந்து தமிழீழ
விளையாட்டுத் துறையினரின் அனுசரணையுடன் நடத்திய

# மாபெரும் விளையாட்டுப் போட்டி
## (2004-07-02 தொடக்கம் 2004-07-05 வரை)

இவ் விளையாட்டுப் போட்டிகளை மிகவும் சிறப்பான முறையில் நடத்தி முடிப்பதற்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கியவர்களுக்கும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டவர்களுக்கும் போட்டி ஒழுங்கமைப்புக்காக நிதியுதவி செய்தவர்கள் அனைவருக்கும் விளையாட்டுக்குழு சார்பாகவும் முல்லைத்தீவு கடற் றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் சார்பாகவும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேற்படி போட்டிகளிற்குரிய பரிசுப் பொருட்கள் 05-07-2004 இறுதி நிகழ்ச்சியில் வழங்கப்பட்டது.




அ.மரியராசா
தலைவர்
முல்லை மாவட்ட கடற்றொழிலாளர்
கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம்
முல்லைத்தீவு.

(சி-10007)

## கரும்புலித் தாக்குதலை சித்தரிக்கும்

# "புயல் புகுந்த பூக்கள்"

## - முழுநீளப் படம் -



நிதர்சனம் நிறுவனத்தின் புதிய தயாரிப்பாக வெளிவருகிறது ஞானரதனின் "புயல் புகுந்த பூக்கள்" வீடியோப்படம். நிதர்சனம் நிறுவனம் தயாரித்து அளித்துவரும் வீடியோப்படங்களின் வரிசையில் இது வேறுபட்ட காட்சியமைப்புக்களையும் தொழில்நுட்பத்தையும் கொண்டிருக்கிறது.

கரிப்பட்டமுறிப்பில் ஜெயசிக்குறு நடவடிக்கை மீதான முறியடிப்புச் சமரில் சிறிலங்கா இராணுவத்தின் உலங்குவானூர்தியை ஊடுருவித்தகர்த்தழித்த கரும்புலித் தாக்குதலைச் சித்தரிக்கும் முழுநீளப்படம் இது. உணர்வாழம் மிக்க போராட்ட வெளிப்பாடாக படத்தின் காட்சிகள் அமைந்திருக்கின்றன.

இந்தப்படத்தின் இசையை இசைப்பிரியன் அமைத்திருக்கிறார். பாடலிசை முரளி. ஒலிப்பதிவை அருமையும் சிவாவும் செய்திருக்கிறார்கள். படத்தொகுப்பு பாண்டியன். ஒளிப்பதிவு கிருபா, திலகன். உதவி இயக்குநராகவும் ஒளிப்பதிவாளராகவும் தவா பங்களித்திருக்கிறார். திரைக்கதை, வசனம், இயக்கம் ஞானரதன்.

நிதர்சனத்தின் திரைப்பட உருவாக்கப்பிரிவால் தயாரிக்கப்பட்ட இந்தப்படத்தில் போராளிக்கலைஞர்களுடன் தமிழீழத்தின் முன்னணிக் கலைஞர்கள் பலரும் நடித்துள்ளனர்.





# நீங்காத நினைவுகளில் 45ஆம் நாள்



மண்ணுக்கு 1972-09-12

அமரர்

விண்ணுக்கு 2004-05-29

## மகேசன் (பிரபு)

கிரிதர கோபாலன்

உங்கள் வாழ்வு முடிந்தது என்று உலகம்
கூறினாலும், நீங்கள் எங்களுடன் நிலையாக
வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள்.

**மருமக்கள்**

உனது தாயின் கரத்தால் பசியாறியவர்களா
உன் உயிரைப் பறித்தார்கள்.
எம்மிடம் இருந்து உன்னைப் பிரித்த
கொடியவர்க்கு அறமே கூற்றாகும்.

**தந்தை**

12-07-2004 திங்கட்கிழமை அன்று
இல.13 மத்திய வீதி, உவர்மலை,
திருகோணமலையில் நடைபெறும் அந்தியேட்டி
நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புள்ளங்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.
தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

இல-152/1 உதயநகர் மேற்கு
கிளிநொச்சி.

(சி-4769)



# உளவியல் நவீனம்...

**அத்தியாயம்- 01**

**பகுதி -04**

இறுதியாக டிப்ஸ் தொடர்பாக ஏதாவது செய்தாகவேண்டும் என்ற முடிவுக்கு பாடசாலை ஆசிரியர்களும் நிர்வாகிகளும் வந்திருந்தனர். ஏனைய பெற்றோர்களில் சிலர் டிப்ஸின் பிரசன்னம் பற்றிய முறைப்பாடுகளைக் கொடுத்துக்கொண்டிருந்தனர். டிப்ஸ் யாராவது பிள்ளைகளை விறாண்டிக் காயப்படுத்திவிட்டால் அல்லது கடித்து விட்டால் இந்த முறைப்பாடுகள் அதிகரிக்கும்.

இந்தக்கட்டத்தில் தான் டிப்ஸ்ஸின் நிலைபற்றி ஆராய்வதற்கான சந்திப்பு ஒன்றுக்கு நான் அழைக்கப்பட்டேன். நான் ஒரு மருத்துவமனை சார்ந்த உளவியல் மருத்துவர். பிள்ளைகள், அவர்களுடைய பெற்றோர்களுடன் வேலை செய்வதில் நான் சிறப்புப் பயிற்சிகளைப் பெற்றிருக்கிறேன். மேற்படி சந்திப்பில்தான் டிப்ஸ் பற்றி நான் முதலில் கேள்விப்பட்டேன். நான் இங்கு கூறியிருப்பதெல்லாம் ஆசிரியைகள் பாடசாலை உளவியல் மருத்துவர், குழந்தை மருத்துவர் ஆகியோரால் கூறப்பட்டவைதான். டிப்ஸை பாடசாலையிலிருந்து விலக்கிவிட்டுத் தங்கள் தோல்விகளில் ஒன்றாக அவனைப் பதிவுசெய்வதற்கு முன் அவனையும் அவனது தாயாரையும் சந்தித்து எனது கருத்தை பாடசாலை பணியாளருக்கு கூறமுடியுமா என்று என்னைக் கேட்டிருந்தார்கள்.



இந்தச் சந்திப்பு பாடசாலையில் இடம் பெற்றது. இந்தக் குறிப்புகள் எல்லாவற்றையும் ஆர்வத்தோடு நான் கேட்டேன். டிப்ஸ்ஸின் இயல்பு அவர்கள் மீது ஏற்படுத்தியிருந்த தாக்கம் என் கருத்தைக் கவர்ந்தது. அவனுடைய ஒரே சீரற்ற நடத்தைகள் அவர்களுக்கு விரக்தியை மூட்டி விட்டிருந்ததோடு தொடர்ச்சியான சவால்களை ஏற்படுத்திக்கொண்டும் இருந்தன. தன்னை அளவுக்கு மீறி நெருங்க முயன்றவர்களை பகைமையுடனும் குரோதத்துடனும் ஒதுக்குவதில் மட்டும் நிலைபேறான தன்மையை அவன் கடைப்பிடித்தான். வெளிப்படையாகத் தெரிந்த அவனது சோகங்கள் தீரக்கூடிய ஆறுதலற்ற தவிப்புக்களை உணர்ந்த அந்த மென்மையான மனிதர்களுக்கு அது மன உளைச்சலைக் கொடுத்திருந்தது. "அவனது தாயாரோடு கடந்தவாரம் ஆலோசனை நடத்தினேன்...." என்று தொடங்கினார் ஜேன்மிஸ். "எங்களால் முடிந்த அளவுக்கு டிப்ஸ்சுக்கு உதவினாலும் அது போதாது என்று நாம் நினைப்பதால், அநேகமாக, அவனைப் பாடசாலையிலிருந்து நீக்க வேண்டியிருக்கும் என்று நாம் நினைக்கிறோம் என்று அவருக்கு நான் கூறினேன். அவள் மிகவும் குழம்பிப்போனாள். ஆனால் அவளுக்கு நிலைமைகளைப் புரிய வைப்பது கடினமாக இருக்கிறது. நிபுணத்துவ ஆலோசகர் ஒருவரை அழைத்து இன்னுமொரு முறை அவனை மதிப்பீடு செய்வதற்கு அவள் சம்மதித்தாள். நான் உங்களைப் பற்றி அவவுக்குச் சொன்னேன். டிப்ஸ் பற்றி உங்களுடன் கதைப்பதற்கும் இங்கு வைத்தே நீங்கள் டிப்ஸை அவதானிக்க விடுவதற்கும் அவர் ஒப்புக் கொண்டார். பின்னர் நாம் அவனை இங்கு வைத்திருக்க முடியாதென்றால் அவனைச் சேர்ப்பதற்கென்று உளவளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கான தனியார் விடுதிப் பாடசாலை ஒன்றின் பெயரைத் தரும்படி கேட்டார். அநேகமாக அவனது உளவளர்ச்சி குன்றியிருக்கலாம் அல்லது மூளை சேதமுற்றிருக்கலாம் என்ற உண்மையைத் தானும் தனது கணவரும் ஏற்றுக்கொண்டிருப்பதாக அவள் கூறினாள்" என்று முடித்தது தான் தாமதம், ஹெடா எரிமலையாய் வெடித்தாள்.

"அவன் உணர்வுபூர்வமாக பாதிக்கப்பட்டிருக்கலாம் என்று ஏற்றுக்கொள்வதை விட அவன் உளவளர்ச்சி குன்றியவன் என்று நம்பவே அவள் விரும்புகிறாள். அநேக அவனது நிலைமைக்கு அவளே காரணமாகவும் இருக்கலாம்" என்றாள் ஆத்திரத்தோடு.

"அவன் தொடர்பாக நாம் எமது உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு நின்று போதியளவில் நோக்கவில்லையென்றே நான் நினைக்கின்றேன்" என்ற ஜேன்மிஸ் தொடர்ந்து, "அதனால் தான் நாங்கள் எங்களால் முடிந்த அளவுக்கு அவனை இங்கே வைத்திருக்கிறோம். இவ்வளவு குறைந்த அளவிலான முன்னேற்றத்தையும் அவன் பெறுவதற்கும் அதுவே காரணமாக இருக்கலாம். அவனைத் திருப்பி அனுப்பிவிட்டு அவனைப் பாதுகாப்பதில் பங்கு வகிக்காமல் இருக்க எங்களுக்கு மனம்வரவில்லை. எமது உணர்வு வெளிப்பாடுகளில் மாட்டிக் கொள்ளாமல் அல்லது அவனது பெற்றோ ரின் மனப்போக்குகள் பற்றி அலட்டிக் கொள்ளாமல் டிப்ஸ்ஸின் நிலைபற்றி ஆராய எங்களுக்கு ஒரு போதுமே இயலவில்லை. அவனது பெற்றோர் பற்றிய எமது மனப்போக்குகள் நியாயமானவைதானா என்றுகூட எங்களுக்கு நிச்சயமாகத் தெரியாது" என்றாள்.

"அவன் தன் கூட்டுக்குள் இருந்து விடுபடும் காலம்வந்துவிட்டதென்று நான் உறுதியாக நம்புகிறேன். அவன் இப்போது தன்னைச் சுற்றிப் போட்டுக்கொண்டிருக்கிற காப்புகள் இனியும் தாக்குப்பிடிக்காது." என்றாள் ஹெடா. அவர்களது உணர்வுகளையும் ஆர்வங்களையும் கவர்ந்திருக்கும் அளவுக்கு அந்தப் பிள்ளையில் ஏதோ இருப்பது வெளிப்படையாகத் தெரிந்தது. இந்தப் பிள்ளை குறித்து அவர்கள் கொண்டிருந்த பரிவு எனக்கும்புரிந்தது. அவனது இயல்பு ஏற்படுத்தியிருந்த தாக்கத்தை என்னால் அந்த இயல்பினுடைய சிக்கலான தன்மைகளை, தெளிவான, சுருக்கமான, மாற்றமில்லாத விதத்தில் புரிந்து கொள்வதில் எமக்குள்ள வரையறைகள் பற்றி எனக்குள்ளே ஏற்பட்டிருக்கிற மேலாண்மை கொள்கின்ற வகையான புரிதலை என்னால் உணர முடிந்தது. அந்தக் குழந்தை தொடர்பாக அவர்கள் காட்டும் மரியாதை உணர்வு அந்தச் சந்திப்பில் ஊடுபரவியிருந்தது எனக்கு உணர் வாகியது.


டிப்ஸ்ஸின் பெற்றோரின் ஒப்புதலோடு, விளையாட்டு வழி-சிகிச்சை முயற்சிகளை நான் மேற்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அந்த முயற்சி டிப்ஸ்ஸின் கதையில் என்னென்ன புதிய அத்தியாயங்களை சேர்க்கக் கூடும் என்பதை அறிந்திருப்பதற்கான எந்த வழியும் எங்களுக்கு இருக்கவில்லை. (தொடரும்....)



# முடுபனிக்குள் ஒரு தேடல்

மொழியாக்கம் :- வி.பி.யோசப்

## துணிக்கடையில்



ஒருவர் துணிவிற்பனையாளரிடம்:- இந்தத் துணியில 85% பருத்தியும் 10% நைலோனும் எண்டு போட்டிருக்கு. மிச்ச5% என்ன?
விற்பனையாளர்:- 5%இல்லை சுருங்கீரும்.

**தொடர் - 26**



# (கென்யப் பயணக்கட்டுரை) காட்டு வெளியிடை

நேற்று வரும் போது இடைக்கிடை தென்பட்டது போல, ஆளுயர அலம்பல் வேலி சூழ இருந்தது, முக்கீக்கி. இறங்கியதுமே, யட்டிச்சிணியும், இலையான்களும் சூழ்ந்து கொண்டதைத் தவிர மற்றும்படி அந்த இடம் ஒழுங்காகவும் சுத்தமாகவுந்தான் தெரிந்தது. தலைவனின் மகனும் வேறிரண்டு மூன்று பேரும் வெளியே வந்து வரவேற்றார்கள். கிராமத்தலைவன் ஏதோ அவசர அலுவலாக எங்கோ போயிருந்தான்.

வேலிப்படலையோடு நின்று வேடிக்கை பார்த்த ஊரவர்கள் வழமையான கோலங்களிற்தானிருந்தார்கள்.

"நீங்கள் ஒவ்வொருவரும் ஆளுக்கு ஆயிரம் ஷில்லிங் அன்பளிப்பாகக் கொடுத்து விடுங்கள்", என்று ஏலவே அயூப் சொல்லி வைத்ததன் பேரில் அந்த அன்பளிப்புக்களை நீட்டினோம்.

"தாங்க் யூ, ஸேர்", சொல்லி வாங்கிய பையன், "இது எங்கள் பள்ளிக்கூட நிதிக்குத்தான்" என்றான் அழகான ஆங்கிலத்தில். பள்ளிக்கூடம் சற்றுத்தள்ளியிருக்கிறதாம். அந்தப்பள்ளிக்கூடத்தில்தான் தானும் படிப்பதாக அவன் சென்னான். பதினாறு வயதுள்ள ஓலே, ஏழாம் வகுப்புப் படிக்கிறான்.

நாங்கள் பேசிக்கொண்டிருக்கும் போதே வேலிக்கப்பாலிருந்து, நேற்றிரவு கேட்ட அதே "ம்ஹா!....ம்ஹா....!" கேட்க ஆரம்பித்து நெருங்கி வரலாயிற்று. செவ்வாடை தரித்த நாடகக்காரர் வரிசை, துள்ளியும் கெந்தியும் வெளியே வந்தது. முதலில் வந்த ஆளின் தலையில் மாட்டுத்தோல் கிரீடம் ஒன்று சூட்டியிருந்தது. மற்றும்படி அதே நடனம். பக்கவாத்தியமும் ஏதுமில்லை பகல் வெளிச்சம், நேற்றிரவுப் பயக்கிளர்ச்சிகளைத் தடுத்திருந்தது. ஆட்டம், துள்ளல், எல்லாம் முடிந்ததும், அந்த மாட்டுத்தோல் "முடி"யை எங்கள் தலைகளிலும், வைத்துப் பார்த்து மகிழ்ந்தார்கள்! பேன், தெள்ளு, உண்ணி - இப்படி ஏதாவது அதில் இருந்து விட்டால்? என்ற பயத்தில் முழுதாகச் சிரிக்கவும் முடியாதிருந்தது அப்போது!

இந்த முறைமைகள் முடிந்ததும் முடியாததுமாய்ப் பெண்கள் வரிசையொன்று பாடிய படி வெளியே வந்தது. ஆட்டமில்லை. மஸாய்ப் பெண்களின் உடையும் அதே போர்வைதான். 'குறுக்கு' ஆகக் கட்டி, அதன் மேல் நிறைய நகைகள். கைகளைக் கொட்டிப் பாடிய படி வரிசை எதிரில் வந்து நின்று, கைகளை ஆட்டி ஆட்டிப் பாடலாயிற்று. அந்தப் பாடல், ஏதோ தமிழ் நாட்டு நாட்டுப் பாடலொன்றைக் கேட்கிற உணர்வைத் தந்தது.

"வாருங்கள் உள்ளே போகலாம்" ஓலே அழைத்தான். ஓரடி வைத்ததுமே, இன்னொருவான் வந்து நிற்பது தெரிந்தது. ஐரோப்பியர்களும், ஜப்பானியர்களும் சேர்ந்த குழுவாக அது தோன்றிற்று. மாறா சோப்பாவில் கண்ட நினைவில்லை வேறேதோ விடுதியில் தங்கியவர்களாயிருக்கவேண்டும்.

உள்ளே போனோம். எங்கும் சாணி மயம் நிலம், வீடு, வளவு, எல்லாம் நிலத்தில் மண்ணே தெரியாமல் சாணிதான் பரந்து தடித்துப் படர்ந்து கிடந்தது. மாடு ஒன்றும் கண்ணிற்படவில்லை, மேய்ச்சலுக்குப் போயிருக்கவேண்டும். வேலியால் சூழப்பட்ட இடம் எங்கள் கணக்கில் முப்பது பரப்பு வரும். வேலியையொட்டி வரிசையாய் வீடுகள் நடுவில் பட்டி சிங்கம், சிறுத்தை, ஓநாய் - ஒன்றும் செய்து விடமுடியாது.. வேலியும், அலம்பல் தானென்றாலும், நல்லசிக்காராய் அடைத்திருந்தது.

முக்கீக்கியில், முப்பத்தைந்து குடிசைகள், நூற்றறுபது ஆட்கள், அறுநூறு மாடுகள், ஐந்நூறு ஆடுகள் என்று புள்ளி விபரந் தந்தான் கியாப்பே. இவன் ஓலேயின் நண்பன். அவனுடன் தான் படிக்கிறான். கொஞ்சம் பெரியவனாய்த் தெரிந்தான்.

"வீடுகளைப்போய்ப் பார்க்கலாம்" கூட நின்ற பெரிய ஆள் அழைத்தான்.

நேற்று வழியில் கண்ட அதே மாதிரி வீடுகள்தான். எல்லாமே ஏறத்தாழ பத்தடிக்குப் பத்தடிப் பரப்பும் ஏழடி உயரமும் வரும். பெட்டிகளைக் கவிழ்த்து வைத்த மாதிரி. சுவர், கூரை, எல்லாம் சாணம். புல்லோடு சேர்த்துக் குழைத்து, தடிகளை நட்டுக் கட்டிய வரிச்சுகளின் மேல் அதை அப்பி, சுவரையும் , கூரையையும் ஆக்கியிருந்தார்கள். சாணம் காய்ந்து வரண்டு, விராட்டி போல ஆகிப் பொருக்குக் கிளம்பியிருந்தது.



சாந்தன்

என்றாலும் சுவரைத் தட்டிப்பார்த்தேன்- உறுதிக்குக் குறைவில்லை ஒரேயொரு கதவு மட்டும் -ஜன்னல் போன்ற சங்கதிகள் கிடையாது.

உள்ளே போனால், முச்சுத்திணறும போல் பயமாயிருந்தது. ஒரு வீட்டினுள் செல்வாவும் விமுக்தியும் முன்னால் போனதில் துணிந்து நுழைந்தேன். படுக்கையறை சமையலறை எல்லாமான ஒரு இடம், முன்னால் வாசலோடு ஒரு சிறு அடைப்பு, ஆட்டுக் குட்டிகள் போன்றவற்றை உள்ளேயே வைத்துக் கொள்வதற்கு!

"மலசலகூடம் எல்லாம்?" வெளியே வந்ததும் கேட்டேன்.

"பற்றைகள் தான்", என்றான் ஓலே.

"தண்ணீர்?" "ஆறிருக்கிறது"

மாறா நதி அருகில் தான் எங்கோ ஓடுவதாகக் கேள்விப் பட்டிருந்தேன்.

முன்பெல்லாம் இந்த மக்கள் இப்படி ஒரு ஊரில் ஒரு சாவு நடந்தால், அந்த ஊரைச்செத்தவருக்கென்றே", கொடுத்துவிட்டு வேறிடம் பார்த்துப் போய்விடுவார்கள் கூடவே வந்த அயூப் மெல்லச் சொன்னார்.

(தொடரும்...)

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதிஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*

☐ போராட்டத்தின் அவசியத்தைப் புரிந்துகொள்ளாது காதிலே தோடு குத்திக்கொண்டு அலையும் ஆண்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

அவர்கள் பெண்மையுணர்வு கொண்டவர்கள்.

கவிதா
கரவெட்டி

☐கனம் பாவலரே வணக்கம் கிளிநொச்சி முழுவதும் எப்போது மின்சாரம் வரும் என்று எனது சம்சாரம் அடிக்கடி கேட்கின்றார். இந்த ஜம்சாரம் எப்போது வரும் பாவலரே.....

'சம்சாரம் ஒரு மின்சாரம்' என்றொரு தமிழ்ப்படம் வந்ததே! நீங்கள் பார்க்கவில்லையா? மின்சாரமே மின்சாரம் எப்போது வரும் என எதிர்பார்ப்பது விசித்திரமே!

யோ.ரீகன்
பரந்தன்

☐ எமது சகோதரியை அம்மா

நினைக்கிறேன் சமாதானம் இறுதியில் 'சமர்'தானத்தில் தான் முடியும் போலிருக்கு!

இ.பாலசுப்பிரமணியம்
மாங்குளம்.

☐ தமிழீழத்துக்காக தம் இன்னுயிரை விடும் மாவீரர்களின் கனவுகள் யாதாக இருக்கலாம்? (அதாவது இலட்சியக் கனவுகள்)

தாம் யாரின் விடுதலைக்காக போராடினார்களோ அவர்கள் தமது தமிழீழ இலட்சியத்தை நனவாக்குவார்கள் என்பதாக இருக்கும்.

க.தனபாலன்
வல்வெட்டித்துறை

☐மாவீரர்களது இலட்சியத்தினைப் புரிந்து கொள்ளாத மக்களிற்கு என்ன கூற விரும்புகிறீர்கள்....

'மா'க்களாக இருக்காதீர் என்று கூறவிரும்புகிறேன்.

குமுதினி
கரவெட்டி

☐ நான் ஒரு கனவு கண்டேன் அடுத்த நூற்றாண்டில் மதக்கோவில்கள் எல்லாம் அற்றுப் போய் மாவீரர் துயிலுமில்லங்கள் தான் கோயிலாக காட்சி அளித்தது. இது நனவாகுமா என்ன?


இது தற்போதே நனவாகி வரும் ஒன்று தானே... இதனைப் போய் அடுத்த நூற்றாண்டிற்கான கனவென்கிறீர்களே! மாவீரர் துயிலுமில்லங்களே மக்கள் எந்த வித வேறுபாடுமின்றி துதி செய்யும் ஆலயங்கள் தம்பி!

இ.கிருபாநந்தன,
கரவெட்டி.

☐ இந்த சமாதானத்துக்கு எதிரா நிற்கும் கும்பல்கள் பற்றி உங்கள் கருத்து என்ன....

எரிகிற வீட்டில் பீடி குடிக்க நெருப்பெடுக்கும் ஆசாமிகள்.

மகிழ்ராசா,
கிளிநொச்சி.




பேசும் போது மிகவும் சத்தமாகப் பேசுகிறார் காரணம் என்னவாக இருக்கும்.

திருமணம் பேசும் போது அடக்கமாக இருக்கவேண்டும் என்பதற்காக...

த.மூர்த்தி
பளை

☐ தற்போது நிலவிவரும் சமாதானத்தைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்.

சமாதான காலத்தில் தான் அச்சம் அதிகமாக இருப்பதாக

☐ அன்பின் பாவலர் அவர்களே ஜே.வி.பி.யினர் பிரதமர் அவர்களை பதவி விலகுமாறு கேட்டு இருந்தார்கள் அதன் நோக்கம் என்ன?

பிரதமர் அவர்களது 'ஜால்ரா' வாக இருக்க உடன் படாதது காரணமாக இருக்கலாம்...! அல்லது தங்களில் ஒருவரை அந்தக் கதிரையில் இருத்திப் பார்க்க விரும்புவதாகவும் இருக்கலாம்...!

ஐ.சாந்தன்
இலுப்பைக்கடவை.

அன்பின் பாவலரே

வாழ்க்கையில் எவை இருக்க வேண்டும் எவை இருக்கக்கூடாது.

வாழ்க்கையில் தன் நம்பிக்கை இருக்க வேண்டும்.. அவநம்பிக்கை கூடாது தானும் வாழ்ந்து கொண்டு பிறரும் வாழக் கைகொடுப்பவனின் வாழ்க்கை தான் வாழ்க்கை.

சு.சிவா,
புதுக்குடியிருப்பு.




**அதிகாரி:-** துப்பாக்கி கொண்டு செல்ல அனுமதியா- எதுக்கு?

**கேட்பவர்:-** பெருந்தொகைப் பணத்தை எடுத்துச் செல்வதற்காக.

**அதிகாரி:-** ம்..சரி.. எந்த வழி. எங்கிருந்து எங்கே.

**கேட்பவர்:-** இன்னும் தீர்மானிக்கவில்லை. பணம் எங்கே வசதியாகக் கிடைக்குமோ அங்கேதானே கொள்ளை யடிப் போம்.

* * *

**நாடகப்பள்ளியில்:-** நடிப்பென்பது என்ன?

**ஆசிரியர்:-** கவனி ராசன் இப்ப உனக்கு ஒரு பிச்சைக்காரன் பாத்திரம் கிடைச்சிருக்கு நீ என்ன செய்வாய்.

**மாணவன்:-** கொண்டு திரிஞ்சு பிச்சை எடுப்பன்.

* * *

சமாதான புரிந்துணர்வு ஒப்பந்தகாலம் வந்தபோது வன்னியில் இருந்த நணபனைச்சந்திக்க யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த நண்பன்.

**யாழ் நண்பன்:-** மச்சான் வா இந்தச் சந்தோசத்தைக் கொண் டாடக் கள் அடிப்பம்.

**வன்னி நண்பன்:-** இஞ்சமுப்பது முப்பத்தைஞ்சு வயது கடந் தவைதான் அங்க போவினம்.

**யாழ் நண்பன்:-** மச்சான் அப்ப வாவன் சிகரட் வாங்குவம்.

**வன்னி நண்பன்:-** இஞ்ச கொழும்புக் காரர் ஆரும் வந்தாத்தான் உது வாங்குவினம் மற்றவை போற தில்லை.

**யாழ் :-** மச் சான் அப்ப படம்பார்க்கப் போவம்.

**வன்னி:-** ஆறு மணிக்குப் பிறகுதான் ஒரு படம் மினியில பார்க்கலாம்.

**யாழ்:-** ஓ... அப்ப என்னடா உங்கட பொழுது போக்கு.

**வன்னி:-** கிளித்தட்டு மறிக் கிறது. அதுக்குப்பயிற்சி எடுககிறது.

**யாழ்:-** ஆரோடவிளையாடுற நீங்க

**வன்னி:-** ஆமி யோட தான். ஆனை யிறவிலதான் பழம் பாஞ்ச நாங்கள்.

* * *

**தமிழ் ஆசிரியர்:-**''கந்தன் மரத்திலிருந்து விழுந்தான்'' இது என்ன காலம்.

**மாணவன்:-** அவனுக்குக் கெட்டகாலம்.

* * *

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -76



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.


### படத்திற்கு மெருகூட்டுங்கள் -76

..............................................................
..............................................................
..............................................................
..............................................................

பெயர் : ..............................................
முகவரி : ..............................................
..............................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -75



சு.சிவாஜினி, மந்துவில்
வடிசாலை அருகாமை,
8ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

### பரிசுக்குரிய வரிகள்

*கள்ளமில்லாப் பிஞ்சே கருணையே*
*வடிவான உன் அன்னையை கயவர்கள்*
*கண்மூடித்தனமாக அழித்ததனால்தான்*
*நீ இன்று தாகம் தீர்க்கமுடியாமல் தவிக்கின்றாயோ.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*காக்கையாகப் பிறந்திருந்தால்*
*கல்லெடுத்து நிரப்பி தாகம் தீர்ப்பாய்*
*ஈழ மண்ணில் மழலையாய்*
*தீர்க்க துடிக்கிறாயோ.*

த.காந்தன்
கிளிநொச்சி.

*பாலூட்டும் வயதில் உன் தாயைப் பலியெடுத்த*
*பகைவனின் கொடுமையால்*
*வறண்ட வயிற்றுக்கு*
*தண்ணீராவது கிடைக்குமா என பார்க்கின்றாயோ.*

கோபி
கிளிநொச்சி.

*தத்திநடை பழகவேண்டிய பிஞ்சு வயதினிலே*
*தாகத்துக்கு நீர்தேடும் தமிழ் மைந்தா*
*குளிர்மையான தாகம் நான் செஞ்சோலை*
*தணித்திடுவேன் தாகத்தை. வா மகிழ்வுடனே.*

செ.அரவிந்தன்
தருமபுரம்.

*பார் போற்றும் பூமியிலே தண்ணியில்லாத் திண்டாட்டம்*
*உச்சி வெயிலதிலே தாகம் கொண்டு*
*எட்டிப்பார்க்கும் எம் தமிழ் மகனிற்கு*
*தண்ணீர்த் தாகம் மட்டுமல்ல விடுதலைத்தாகமும் கூட.*

அகவிழி.கு
வள்ளிபுனம், தமிழீழம்.

*பாலூட்டி வளர்த்த அன்னை.*
*பாதியிலே விட்டுப்பிரிந்தாள்*
*தாகம் எடுத்து தவிக்கிறேன்*
*தாகம் தணிக்க உதவிடுவீர்.*

யோ.கவின்சிகா
நெடுங்கேணி.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
அருச்சுனா புகைப்படக் கலையகம் வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.










இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ம் ஆண்டு யூலை மாதம் 09 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.